
இதழ் 220

# மண்

ஜேர்மனி / 2023

ஆடி - ஆவணி / Jul - Aug













## இலங்கையில் மலையக மக்கள்
## 200 வருடங்கள்

(1823 - 2023)














ஜேர்மனி-டியூஸ்பேர்க்கில் வசிக்கும் திருமதி இராஜேஸ்வரி சிவராசா அவர்களின் தாயாரின் 21வது ஆண்டு நினைவையொட்டி அவரின் நிதிப்பங்களிப்பில் துணுக்காயிலுள்ள ”ஒளிரும் வாழ்வு இல்ல” முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கு 10.05.2023 அன்று உணவு, சிற்றுண்டி, உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. அனுசரணை மண் சஞ்சிகை யேர்மனி.

# உள்ளே

- எங்கள் கருத்து
- சிறுவர்வட்டம்
- வினாவிடைப்போட்டி
- சிறுவர்போட்டிகள்
- குறளும் பொருளும்
- கவிச்சோலை
- இலக்கியச் சாரல்
- சிறுகதை, கட்டுரை
- குறுக்கெழுத்துப்போட்டி
- சுகாதாரக்குறிப்புகள்
- செய்திக்கண்ணோட்டம்
- ஆதரவற்றோர் உதவிநிதி

**முகவரி:** V. Sivarajah
Am Windhoevel 18a
47249 Duisburg
Germany

**தொலைபேசி:** 0203/8073898

015254799233

**மின்னஞ்சல்:** v.sivarajah@arcor.de

**வங்கிவிபரம்:** Mann (Erde) Verein e.V. Duisburg
Stadtsparkasse Duisburg
Kontonummer: 225 000 421
Bankleitzahl: 350 500 00
IBAN-Nr.: DE41 3505 0000 0225 0004 21
SWIFT-BIC: DUISDE33XXX




## ஆசிரியர் பக்கம்...

இங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கு மிக நீண்ட காலமாக உயிர் கொடுத்து வருபவர்களாகவும் அந்நியச் செலவாணி கையிருப்பில் கணிசமான பங்களிப்புகளைச் செய்துவருபவர்களாக மலையகப் பெருந்தோட்ட மக்கள் காணப்படுகிறார்கள். ஆனால் அவர்களுடைய வாழ்வில் இன்றுவரை பொருளாதாரம், வாழ்க்கைத்தரம் எவ்வாறு இருந்தது இருக்கின்றது. அதனை உயர்த்துவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதையிட்டு " மலையகம் 200" கொண்டாட்டப்படும் இந்தக் காலப் பகுதியில்தான் நாம் சிந்திக்க வேண்டும்.

பெருந்தோட்டப் பகுதிகளில் வேலை செய்வதற்காக என்றோ மலையகத் தமிழர்கள் இந்தியாவிலிருந்து வெள்ளைக்காரர்களால் அழைத்து வரப்பட்டார்கள். தேயிலை, இறப்பர், கோப்பி போன்ற அதிகளவு வருமானத்தைப் பிரித்தானியர்களுக்குப் பெற்றுக் கொடுத்தமையால் குறைந்த கூலியில் வேலை செய்யக்கூடியவர்களை அவர்கள் தேடினார்கள். மலையகத் தமிழர்களால் பிரித்தானியர்களுக்கும் அதிக வருமானம் கிடைத்தது. சுதந்திரத்திற்குப் பின்னர் இலங்கை அரசாங்கத்திற்கும் அதிகளவு அந்நியச் செலவணியை பெற்றுக் கொடுத்தவர்கள் மலையக மக்கள்தான். அதாவது இலங்கையைப் பொன் விளையும் நாடாக மாற்றியவர்களும் இந்த மலையக மக்கள்தான்.

ஆனால் நாட்டுக்குக் கிடைத்த சுதந்திரம் அவர்களுடைய உரிமைகளுக்கு வேட்டு வைப்பதாகவே அமைந்திருந்தது. சுதந்திரம் கிடைத்த அடுத்த வருடமே அவர்களது குடியுரிமை, வாக்குரிமை என்பன பறிக்கப்பட்டன. அதாவது அவர்கள் அரசியலில் ஆநாதைகளாக்கப்பட்டனர். ஆனால் அப்போது அவர்கள் உழைத்துக்கொண்டுதான் இருந்தார்கள்.

இந்தக் காலத்தில்தான் இலங்கைக்கு வந்த சிங்கப்பூரின் சிற்பி லிகுவான் யு " சிங்கப்பூரை இலங்கையைப்போல மாற்ற வேண்டும் " என்று கூறியிருந்தார். அந்தளவுக்கு இலங்கையின் நிலை அப்போது உயர்ந்திருந்தது. அந்நியச் செலாவணி கையிருப்பு திடமாக இருந்தமைக்குமலையக மக்களின் கடுமையான உழைப்பே காரணம். நாட்டின் பொருளாதார விருத்திக்கு மலையக மக்களின் பங்களிப்பு பிரமாண்டமானதாகவே இருந்தது.. 1964 சிறிமா-சாஸ்திரி

உடன்படிக்கை மூலமாக பெருமளவு மலையக மக்கள் நாடு கடத்தப்பட்டார்கள். அவர்களின் ஒப்புதல் இல்லாமல் நாடு கடத்தப்பட்டார்கள்.அவர்களின் விருப்பமில்லாமல் இலங்கை-இந்திய அரசுகள் தமது நலனுக்காக இதனைச் செய்தனர்.

இன்று மலையக மக்களுக்கு அனைத்து உரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட்டதாகச் சொல்லப்பட்டாலும் அவை எழுத்தில் மட்டும் உள்ளது. தினசரி 1.000 ரூபா வேதனத்தைப் பெறுவதற்கே அவர்கள் போராடுகிறார்கள். மாறி..மாறிவரும் தமிழ் - சிங்கள - மலையக அரசியல் வாதிகளால் ஏமாற்றப்படுகிறார்கள். காணிஉரிமை, வாக்குரிமை, அரசியல் உரிமை, கல்வி, சமூக, வேலைவாய்ப்பு உரிமைகள் மறுக்கப்படுகின்றன. அவர்களின் வாழ்க்கையே போராட்டமாக மாறிவிட்டது.

200 ஆண்டுகளை வரலாற்றாகக்கொண்ட இந்த மக்கள் நாட்டின் கொருளாதார மேம்பாட்டுக்காகத் தம்மையே உரமாக்கியவர்கள். இந்த மக்களின் அடிப்படையிலான அனைத்துப் பிரச்சனைகளும் தீர்க்கப்பட்டு ஏனைய மக்களோடு சம உரிமைகளுடன் வாழவேண்டும் என்பதைத்தான் ” மலையகம்-200 ”வலியுறத்துகின்றது...

**- ஆசிரியர் -**

........................................................................................................

# மலையகப் பெண்ணாள்

மகவினை இடுப்பிலும் கூடையை முதுகிலும் சுமந்து
மடுவத்தில் மகவினை விட்டு மலை மேட்டுக்கு ஓட்டம்
மழையில் நனைந்து குளிரில் வாடி அட்டைக்கடியும் தாங்கி
மளமளவென கொழுந்து பறிக்கையில் கங்காணியின் அதட்டல்!...

கூடையில் கொழுந்து நிறைத்து கங்காணியிடம் கொடுத்து
கூலியும் கொஞ்சமாய் கையில் பெற்றுக் கொண்டு
மடுவத்தில் தாய் முகம் காண ஏங்கித் தவித்து வாடும்
மகவினையும் அணைத்தெடுத்து இரவு வீடு திரும்புவாள்!...

அடுக்களையும் ஒளியின்றி இருள்சூழ் நிலைகண்டும்
அடுப்பு மூட்டி உலை வைத்து உணவாக்கிக் குடும்பமாய்
நிலவின் வெளிச்சத்தில் உண்டு மகிழ்ந்த களிப்பில்
நிலவுக்கு நன்றி கூறி நாளை விடிவு எனத் தூங்குவாள்!...

நித்தம் உழைக்கும் தொழிலாளப் பெண்ணே தினமும்
இரத்தம் சிந்தி உழைக்கின்றாய் சந்ததி விடியலுக்காய்
சாக்கடை அரசியலின் அடிமைச் சாசனத்தால்
சந்ததியே இரையாகின்றாள் மலையகப் பெண்ணாள்!...

**- இராஜேஸ்வரி சிவராசா -**

## சிறுவர் வட்டம்...




## ஆத்திசூடி...

### அரவம் ஆட்டேல்...

பாம்பு என்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழி. எத்தனை தைரியசாலி ஆனாலும் "பாம்பு" என்று கூறினால் பதறி ஓடுவான். ஏன்?..பாம்பிடம் கொடிய நஞ்சு உண்டு. கடித்தால் மரணம் நிச்சயம். எல்லாப் பாம்புகளுமே விஷமுடையதல்ல என்று உனக்குத் தெரியும். ஆனாலும் பாம்பு என்றாலே விஷப்பாம்பு, நாகபாம்பு, நல்லபாம்பு என்ற நினைப்புத்தான் வரும். பாம்பாட்டிகள் பாம்பை ஆடவைத்து பிழைப்பு நடத்துகிறார்கள்.. அவர்களோடு பழகும் இவர்களுடைய வாழ் நாள் அரவத்தினாலேயே முடியும். அரவம் என்றால் பாம்பு. ஆகவே குந்தைகளாகிய நீங்கள் அரவங்களைப் பிடித்து பாம்பாட்டிபோல ஆட்டி விளையாட்டுக்காட்ட முயற்சி செய்யக்கூடாது. ஆபத்தான அரவத்தை ஆட்டுவிப்பதை செய்யாதே என்கிறது ஆத்திசூடி. பாம்புகளோடு விளையாடாதே.

### இலவம் பஞ்சில் துகில்...


நீ இரவில் எதில் படுக்கிறாய்?..வெறும் தரையில் சிலர் படுப்பார்கள். கயிற்றுக்கட்டிலில், மரக்கட்டிலில், பாயில் படுப்பார்கள் சிலர். ஜமுக்காளத்தை உதறிப்போட்டுவிட்டு உருண்டு தூங்கும் பேர்வழிகளும் உண்டு. தூங்கும் விஷயத்திலும் நமக்கு நன்மை தரும் முறையில் தூங்குவதற்கு யோசனை கூறுகிறார் ஔவைப்பாட்டி. இலவு என்று ஒரு மரம் இந்த மாரத்தின் காய்களிலிருந்துதான் இலவம் பஞ்சு கிடைக்கிறது. இது மென்மையானது. மிருதுவானது. உடலுக்கு இதமானது. இந்த இலவம் பஞ்சு அடைத்த மெத்தையில் படுத்துத் தூங்கினால் ஆழ்ந்த அமைதியான தூக்கம் வரும். நோய் அணுகாது. ஆகவே நீ இலவம் பஞ்சு அடைத்த மெத்தையில் துயில் என்கிறார் தமிழ்ப்பாட்டி. துகில் என்றால் தூங்கு என்று பொருள்.

# நல்நெறிபற்றி........

(வி நந்தகுமார்)

## - அன்பு -

அன்பு ஆண்டவன் அருளில் ஆரம்பமாகிறது.
அன்பு அழகிய வாழ்க்கையின் அடித்தளம்.
அன்பு இணைத்துக் கொண்டு அணைத்துச் செல்லும்.
அன்பு அதிகமாகும்போது மனிதனாகின்றோம்.
அன்பு சகலதையும் தாங்கும் சகலதையும் சகிக்கும்.
அன்பு இருக்குமிடத்தில் அமைதியைக் காணலாம்.
அன்புள்ள இதயம் அனைத்தையும் அடையும்.
அன்பு நீடிய சாந்தமும் சந்தோஷமும் நிறைந்தது.
அன்பு வார்த்தைகள் ஆத்திரத்தை அடக்கும்.
அன்பு ஆணவம் அற்றது, அதிகாரம் செய்யாது.
அன்பு உள்ள இடத்தில் இன்பம் சுற்றிச்சுற்றி நிற்கும்.
அன்பு ஆல் ஆனந்தமான வாழ்வு பிறக்கிறது.
அன்பு பழிவாங்காது, பாவம்செய்யாது, பண்புள்ளது.
அன்பு ஒரு அர்த்தமுள்ள வாழ்க்கையை அமைக்கிறது.
அன்பு உதவி செய்யும் உபத்திரவம் கொடுக்காது.
அன்பு நீதியானது, நேர்மையானது, நம்பிக்கையுள்ளது.
அன்பு கொடுப்பவரையும் வாங்குபவரையும் பிணைக்கிறது.
அன்பு பாசமுள்ளது, நேசமுள்ளது, மோசம் செய்யாது.
அன்பு இழக்கப்படும்போது அத˙தனையும் இழக்கப்படுகிறது.
அன்பு செழிப்பானது, சினம்கொள்ளாது, சந்தேகமற்றது.
அன்பு நுழையும்போது இன்பம் இறுதிவரை இருக்கும்.
அன்பு கலகம் செய்யாது காலம் பூராவும் காப்பாற்றும்.
அன்பு மூர்க்கம் கொள்ளாது, மென்மையானது, மேன்மையுள்ளது.
அன்பு ஆல் அன்யோன்யமான குடும்ப வாழ்வு குதூகலம் பெறுகிறது.
அன்பு உள்ள இதயம் இளமை இழக்காது, இன்பம் பெருக்கும்.
அன்பு தன்னைப் புகழாது, தற்பெருமை கொள்ளாது, தயவுள்ளது.
அன்பு இதனால் வரும் வார்த்தைகள் அளவற்ற ஆனந்தம் தரும்.
அன்பு இரக்கமுள்ளது, இறுமாப்பாய் இராது, இனிது பேசும்.
அன்பு இதை ஆதாரமாகக் கொண்டே அழகிய வாழ்க்கை அமைகிறது.
அன்பு இதனாலே பிறந்தாய், வளர்ந்தாய், அதன்வழியே வாழ்ந்துகொள்.
அன்பு இதை அறிந்தவர்களுக்கு ஆண்டவன் ஆசீர்வாதம் அமையும்.




# முல்லா கதைகளில்...

முல்லா தனது கழுதையுடன் வெளியே வந்தார். கழுதையுடன் முல்லா புறப்படுவதைக் கண்ட பக்கத்து வீட்டுக்காரன் எங்கேயோ தூரப் பயணம் செய்கிறீர்கள் போல இருக்கிறது?..என்று கேட்டான். அதற்கு முல்லா தூரப் பயணம்தான் செல்கிறேன் என்று சொன்னார்.

தூரப் பயணம் என்றால் வழியில் திருடர்களின் தொல்லை இருக்கும், உங்களிடமிருந்து அவர்கள் கழுதையை அபகரித்துக்கொண்டு போய்விடக்கூடும் ஆகவே எனது போர் வாளைத் தருகிறேன் எடுத்துச் செல்லுங்கள். என்னுடைய போர் வாள் உங்களுடைய கழுதையைக் காப்பாற்றும் என்று பக்கத்து வீட்டுக்காரன் சொல்லி வாளைக் கொண்டுவந்து கொடுத்தான்.

முல்லா வாளையும் வாங்கிக்கொண்டு சென்றார். சிறிது தூரம் சென்றதும் வழியில் ஒருவன் வந்து கொண்டிருந்தான். ஓகோ!.. இவன்தான் திருடன் போல இருக்கிறான், இவன் என்னுடைய கழுதையை என்னிடமிருந்து அபகரிப்பதற்கு முதல் நானே முந்திக்கொள்ள வேண்டும் என்று முல்லா அவனை நோக்கிச் சென்றார்.

பக்கத்து வீட்டுக்காரன் கொடுத்த வாளை அவனுக்கு நேரே நீட்டினார். ஐயா இந்தப் போர் வாளை எடுத்துக் கொள்ளுங்கள் கழுதையை என்னிடமே விட்டு விடுங்கள் என்று வேண்டிக் கொண்டார். வந்தவனுக்கு

அடி நுனி விளங்கவில்லை. ஆனாலும் விலை மதிப்பான வாளை ஒருவர் வற்புறுத்தித் தரும்போது விட்டுவிட முடியுமா?.. அவன் வாளை வாங்கிக் கொண்டுபோய் விட்டான்.

முல்லா பயணம் முடிந்து வீடு திரும்பினார். நேரே பக்கத்து வீட்டுக்காரனிடம் சென்றார். நண்பரே நீர் சொன்னது போலவே உமது வாள் எனது கழுதையைக் காப்பாற்றி விட்டது என்று சொன்னார். பக்கத்து வீட்டுக் காரனுக்கு ஒரே மகிழ்ச்சியாக இருந்தது. கதை முழுவதையும் கேட்ட பின்னர் ஐயோ!..என்னுடைய போர் வாள் போய்விட்டதே என்று பதறினான்!..

## திறமையைப் பார்...

காட்டு ராஜாவான சிங்கம் தனது படைகளுடன் சண்டைக்குப் புறப்பட ஆயத்தம் செய்தது. தனது தளபதிகள் அமைச்சர்களையும் அழைத்தது. எல்லா மிருகங்களையும் ஆயத்தமாக வருமாறு கட்டளை இட்டது.

சிங்கத்தின் அமைச்சர்கள் கழுதையையும் முயலையும் படையில் சேர்க்க வேண்டாம் என்று சிங்கத்திடம் கூறின. கழுதையும் முயலும் எந்த வேலையையும் செய்வதில்லை என்று அவை குற்றம் சாட்டின.


சிங்கராஜா இதை ஏற்றுக்கொள்ளவில்லை. கழுதையின் குரல் எனது குரலைவிடச் சத்தமானது அதனால் படையில் குரல் கொடுப்பவனாக நியமிக்கலாம். முயல் மிக வேகமாக ஓடக்கூடியது அதை ஒற்றனாக நியமிக்கலாம் என்று கட்டளையிட்டது.

தாங்கள்தான் எல்லாம் தெரிந்தவர்கள் என்று நினைக்க அந்த அமைச்சர்கள் வாயடைத்துப்போய் நின்றார்கள். இக்கதை மூலம் ஒவ்வொருவரிடமும் ஏதோ தகுதியும் திறமையும் இருக்கின்றன. அவற்றை அந்த வழிகளில் பயன்படுத்துவதே நல்லது!..என்பதை அறிந்துகொள்வோம்...





# காலம் தவறாத காந்தியடிகள்..



காந்தியடிகள் இந்திய நாட்டின் இணையற்ற தலைவர். காலத்தைப் பொன் போல மதித்தவர். கடமையைக் கண் போல மதித்தவர். மக்களுக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர். அவரது கொள்கைளும் அவர் வாழ்ந்த எளிய வாழ்க்கையும் அவரை மகாத்மா என்று காட்டியது.

நேரம் பொன் என்பதைத் தனது வாழ்நாளில் என்றும் காந்தியடிகள் கடைப்பிடித்து வாழ்ந்தார். ஒருநாள் காந்தியடிகள் வித்தியாபீடம் என்னும் இடத்தில் ஒரு கூட்டத்தில் பேச வேண்டியிருந்தது. வித்தியாபீடம் காந்தியடிகளின் சபர்மதி ஆச்சிரமத்திலிருந்து தூர இருந்தது.

கூட்டத்திற்கு ஒழுங்கு செய்தவர்கள் காந்தியடிகளை அழைத்துவர வாகன ஒழுங்கு செய்ய மறந்துவிட்டார்கள். காந்தியடிகள் வாகனம் வருமென்று காத்திருந்தார். நெடுநேரமாகியும் வாகனம் எதுவும் காந்தியடிகளை அழைத்துச் செல்ல வரவில்லை. நேரம் சென்றுகொண்டெ இருந்தது. வாகனம் வராவிட்டாலும் தான் குறிப்பிட்ட நேரத்திற்கு அங்கே நிற்க வேண்டும் என்று காந்தியடிகள் நடக்கத் தொடங்கினார்.

நடையின் வேகத்தை அதிகரித்து நடந்தார். அந்த வழியில் ஓர் இளைஞன் மிதிவண்டியில் வந்துகொண்டிருந்தான். அவனிடம் காந்தியடிகள் தான் வித்தியா பீடத்தில் கூட்டம் ஒன்றில் பேசவேண்டியிருப்பதையும் அதற்கு இந்த மிதி வண்டியைத் தந்து உதவுமாறு கேட்டார். காந்தியடிகளால் மதிவண்டியை ஓட்டமுடியுமா?.. என ஆச்சரியப்பட்ட இளைஞன் மதிவண்டியைக் கொடுத்தான்.

காந்தியடிகள் அதில் ஏறிக் காற்றாய் பறந்து உரிய நேரத்தில் கூட்டம் நடைபெறும் இடத்திற்குப் போய்ச் சேர்ந்தார். மிதிவண்டியில் காந்தியடிகள் வருவதைக் கண்ட கூட்டத்தினர் ஆச்சரியப்பட்டனர். காந்தியடிகளின் காலந்தவறாமையும் கடமை உணர்ச்சியையும் எண்ணி எண்ணிப் பாராட்டினார்கள்

**......காலம் பொன் போன்றது கடமை கண் போன்றது......**

## வங்கியின் வரலாறு..

தற்போது உலகிலுள்ள வங்கி முறையானது 550 வருடங்களின் முன்பு 1472ம் ஆண்டில் இத்தாலியில்தான் முதன்முதலில் ஆரம்பிக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது. அதன்பின்பு அமெரிக்காவில் 1782ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ”பாங்கோ” என்ற இத்தாலிய சொல்லிலிருந்து ”பாங்க்” (Bank) என்ற ஆங்கிலச் சொல் உருவாகியது. இந்தியாவில் 1770ம் ஆண்டுதான் வங்கிமுறை ஆரம்பித்தது. இந்தியர்களால் 1911ம் ஆண்டு தொடங்கப்பட்ட முதல் வங்கி ”சென்றல் பாங் ஆப் இன்டியா” என்று அறியப்பட்டுள்ளது.

.....................................................................................................................................

## குழந்தைகள் பலவிதம்...

1- குறைகூறி வளர்க்கப்படும் குழந்தை - வெறுக்கக் கற்றுக் கொள்கிறது.
2- அடக்கி வளர்க்கப்படும் குழந்தை - சண்டையிடக் கற்றுக் கொள்கிறது.
3- கேலி செய்யப்படும் குழந்தை - வெட்கத்தோடு வளர்கிறது.
4- அவமானப் படுத்தப்படும் குழந்தை - குற்றவாளியாகிறது.
5- ஊக்குவிக்கப்படும் குழந்தை - மனவலிமை பெறுகிறது.
6- புகழப்படும் குழந்தை - பிறரை மெச்சக் கற்றுக்கொள்கிறது.
7- சகிப்போடு வளரும் குழந்தை - பொறுமையைக் கடைப்பிடிக்கிறது.
8- நேர்மையோடு வளரும் குழந்தை - நியாயத்தைக் கற்றுக் கொள்கிறது.
9- நட்போடு வளரும் குழந்தை - உலகத்தை நேசிக்கிறது.

.....................................................................................................................................

## பூக்களின் பருவ காலங்கள்..

1- அரும்பு, 2- மொட்டு, 3- முகை, 4- மலர்,

5- அலர், 6- வீ, 7- செம்மல்.

.....................................................................................................................................

## நவதானியங்கள்....

1- நெல் 2- கோதுமை 3- துவரை 4- உழுந்து 5- பயறு

6- மொச்சை 7- கடலை 8- எள்ளு 9- கொள்ளு

## அழியாப்புகழ் கொண்ட நூல்கள்...

1- அகத்தியம் - 7.000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.
2- பரிப்பாடல் - 5.000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.
3- திருமந்திரம் - 3.000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.
4- தொல்காப்பியம் - 3.000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.
5- திருக்குறள் - 2.000 ஆண்டுகள் பழமைவாய்ந்தது.

### மரபுத்தொடர் விளக்கம்...

1- கண்கலத்தல் - ஒருவரை ஒருவர் விரும்புதல்.
2- கண் திறத்தல் - அறிவு உண்டாதல்.
3- கழுத்துக் கொடுத்தல் - பிறர்துன்பத்தில் உதவுதல்.
4- உள்ளங்கை நெல்லிக்கனிபோல் - வெளிப்படையாகத் தெரிதல்.
5- உருக்குலைதல் - தன்னிலையிலிருந்து மாறுபடல்.
6- அகலக்கால் வைத்தல் - அளவு கடந்து பேசுதல்.
7- ஆழம் பார்த்தல் - ஒருவரின் தகுதி பற்றி ஆராய்தல்.
8- இரண்டும் கெட்டான் - நன்மை தீமை அறியாதவன்.
9- இலை மறைகாய் - வெளிப்படாது மறைந்திருத்தல்.
10- இட்டுக் கட்டுதல் - இல்லாததைச் சொல்லுதல்.

### பழமொழிகளும் கருத்துக்களும்...

1- இளமையில் கல்வி சிலையில் எழுத்து - இளவயதுக்கல்வி அழியாதது.
2- இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை - திருப்தியற்ற மனம்.
3- இட்டுக் கெட்டார் எங்கும் இல்லை - தர்மம் செய்.
4- உப்பிட்டவரை உள்ளளவும் நினை - நன்றி மறவாமை.
5- உப்பில்லாப் பண்டம் குப்பையிலே - முக்கியத்துவத்தின் உயர்வு.
6- உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும் - உலோபம் கூடாது.
7- அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் - விடாமுயற்சி.
8- ஆனைக்கு ஒரு காலம் பூனைக்கு ஒரு காலம் - காலம் மாறி வரும்.
9- எலி வளையானாலும் தனி வளை வேண்டும் - தனிக்குடித்தனம் சிறந்தது.
10- எடுக்கிறது பிச்சை ஏறுவது பல்லக்கு - வீண் பெருமை.

## தேடிய துளிகள்..

1-
வெற்றியைவிட தோல்விக்குப் பலம்
அதிகம் வெற்றி சிரித்துமகிழ வைக்கும்
தோல்வி சிந்தித்து வாழ வைக்கும்...

2-
நீங்கள் செய்யும் அழிவிற்கு மீறிய
நல்ல விடையங்கள் கூடப் பல
சந்தர்ப்பங்களில் கெட்ட
கெட்ட விடையங்களாகி விடுகின்றன..

3-
வெற்றியடைவது எப்படி என்று
தேடிக்கொண்டிருப்பதை விட நீ
எப்படித் தோற்றாய் என ஆராய்ந்துபார்
வெற்றி தானாகத் தேடி வரும்..

4-
வெற்றி பெறுவது மிகவும் எளிதானதே
என்ன செய்கிறாய் என்பதனை
அறிந்து செய், செய்வதை விரும்பிச் செய்
செய்வதை நம்பிக்கையோடு செய்..

**செல்வி நியூட்டன் பிரபாகரன் விதுசா**
**நல்லாயன் சிறுவர் இல்லம்**
**மாங்குளம்**

## புனித மேரி யூப்ரேசியா..

யத்தத்தின் தாரகையில்
விடிவெள்ளி போல உதித்தாள்
எம் தாயவள் அழுதிடும் விழிகளைத்
துடைத்திடவே ஆதவனாய்
அவதரித்தாள்...

கண்ணில் கருணையும் மண்ணில்
அமைதியும் நிறைய அன்பாய்
அவதரித்தாள் எம் தாய்
இயற்கையை நேசித்து கோயிலாய்
உள்ளத்தை கொண்டிருந்த
தெய்வம் நீ அம்மா...

வறியவர் செழிப்பினில் வாழ்ந்திடவும்
அடிமைகள் விடுதலைஅடைந்திடவும்
அன்போடும் பரிவோடும் எமை
அணைத்துக் கொண்டாய்
உன் நெஞ்சினிலே..

வறியோர் எளியோர் கண்ணீர்
துடைத்து வளங்களும் நலன்களும்
பெறுக துணை புரிந்தாயே
நிரந்தமில்லா இப்புனித பூமியில்
உண்மைநீதி நிலைக்கச்செய்தாயே

**செல்வி ரி விதுசாளினி**
**நல்லாயன் சிறுவர் இல்லம்**
**மாங்குளம்**

......................................................

## ஆண்களின் பருவ காலங்கள்....

01 - 12 வயது - பாலகன்
12 - 24 ” - விடலை
24 - 36 ” - காளை
36 - 48 வயது - மீளி
48 - 60 ” - மறவோன்
60 - 72 ” - திறவோன்
72 மேல் ” - முதுமகன்

# சுடுக்கோ புதிர்ப்போட்டி இலக்கம் - 38

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | 7 | | 3 | | 6 |
| | | | | 4 | 9 | 7 | 2 | |
| 1 | | | 2 | | | | 4 | |
| | | 7 | | | | | | |
| | | | 5 | | 4 | | 8 | |
| | 8 | 4 | | | | | 6 | |
| 3 | | | | | 5 | | | 4 |
| 2 | | | | 8 | | | 7 | |
| | | 6 | | | 1 | | | |

# சிறுவர் குறுக்கெழுத்துப் போடி 131
## (ஆடி-ஆவணி 2023)

| | | | |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 |

இ-வ

01-04 கல்வி கற்கும் இடங்களில் ஒன்று.

14-16 ஒற்றுமைக்கு உதாரணமான பறவை.

வ-இ

08-07 மாதங்களில் ஒன்று.

12-10 எப்பொழுதும் நாம் இதுபேசி வாழ்ந்தால் பல நன்மைகள் உண்டு.

கீ-மே

13-05 கல்வி உபகரணம் ஒன்று.

15-07 இலங்கையில் ஒரு நகரம்.

மே-கீ

03-07 பூக்கன்றுகள் வளர்வதற்கு இதையும் பாவிப்பார்கள்.

06-10 நீண்டகாலம் உயிர்வாழும் உயிரினம்.

முயற்சித்துப் பாருங்கள். விடை தெரியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்.

## விடுகதைகள்...

01- இவனும் ஒரு கடதாசிதான் ஆனால் மதிப்பு மிக்கவன் யார் இவன்?..
02- மரத்தில் தொங்குவான் மலைப்பாம்பு அல்ல அது என்ன?.
03- கறுப்பன் கூவி அழைத்தால் ஓடோடி வருவான் அவன் யார்?..
04- மழையில் நனைந்து வெயிலில் காய்வான் நோய்வராது இவன் யார்?..
05- தொட்டால் அழுவான் தொடாவிட்டால் பேசுவான் அவன் யார்?..
06- பெட்டியைத் திறந்தால் பூட்ட முடியாது அது என்ன?..
07- சொன்ன நேரத்திற்குத் தொண்டை கிழியக் கத்துவான் யார் அவன்?..
08- உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் அது என்ன?..
09- உடம்பெல்லாம் சிவப்பு குடுமி பச்சை அது என்ன?..
10- தலைக்குள் கண்கள் வைத்திருப்பான் அவன் யார்?..

(பணத்தாள், விழுது, காகம், குடை, தொலைபேசி, தேங்காய், அலாரம், தராசு, தக்காளிப்பழம், நுங்கு)

## சிலேடை நொடிகள்...

01- இலைகள் அசைவது எதனால்?.. சுவாசம் செய்வது எதனால்?..
( காற்றினால் )
02- கீரை நிலத்தில் விதைப்பு ஏன்?. கீழோர் செல்வரை நாடுவதேன்?..
( பிடுங்கித் தின்ன )
03- குதிரை வளர்ப்பது எப்படி?.. செல்வம் அழிவது எப்படி?..
( கொள்ளையிட்டு )
04- கொல்லர் பிழைப்பது எப்படி?.. குத்தரிசி வேகுவது எப்படி?..
( உலை வைத்து)
05- எருமைக் கன்று அழுவது ஏன்?.. எருக்கம் இலை பழுப்பது ஏன்?..
( பால் வற்றுவதால் )

## பொன் மொழிகள்..

01- அதிஸ்டம் வீரனைக்கண்டு அஞ்சுகின்றது கோளையைத் திறனடிக்கின்றது.
02- சிக்கனமாக வாழும் ஏழை சீக்கிரம் செல்வந்தனாவான்.
03- நகரங்களை உருவாக்க வருடங்கள் ஆகும். அழிக்க மணித்துளிகள் போதும்.
04- ஒரு நூலகத்தையும் ஒரு தோட்டத்தையும் வைத்திருக்கும் ஒருவருக்கு வேறு எதுவும் தேவையில்லை.
05- அழகைப்பற்றிக் கனவு காணாதீர்கள் அது உங்கள் கடமையைப் பாழாக்கிவிடும். கடமையைப்பற்றிக் கனவு காணுங்கள் அது உங்கள் வாழ்க்கையை வளமாக்கும்



## தவறாகப் புரிந்து கொள்ளப்பட்ட பழமொழி..

அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பு எதற்கு?.. அடுப்படியில் வேலை செய்யும் பெண்களுக்குப் படிப்புத் தேவையில்லை என்றுதானே நீங்கள் நினைத்திருப்பீர்கள்?.. உண்மையில் இது தவறான அர்த்தமாகக் கொள்ளப் பட்டிருக்கின்றது. இப் பழமொழியின் உண்மையான அர்த்தம்..

அந்தக்காலத்தில் பெண்கள் தலையில் ஒரு படி அளவுகொண்ட பூவைச் சூடுவது வழக்கமான ஒன்றாக இருந்தது. இப்போது போல அந்தக் காலத்தில் காஸ் அடுப்பு எல்லாம் கிடையாது. அனைவருமே விறகு அடுப்பில்தான் சமையல் செய்தாக வேண்டும். அடுப்பு நன்கு எரிய அவ்வப்போது ஊதுகுழல் கொண்டு ஊதவேண்டும்.
அந்தக் காலத்தில் வீட்டிலுள்ள வயதான பாட்டிகள் வீட்டிலுள்ள இளம் பெண்களைப் பார்த்து ”நீ அடுப்பு ஊதுற அந்த நேரத்தில் ஒரு படி பூவை தலையில் வைத்துக் கொண்டு அடுபஇபை ஊதினால் அடுப்பின் அனலுக்கு தலையில் வைத்த ஒரு படி பூவும் கருகிப் போகும். ஆகவே சமையல் முடித்துக் குளித்து பூவச் சூடுங்கள் ” என்று அறிவுரை சொல்லுவார்கள்.

அப்படிக் கூறும் அறிவுதான் ”அடுப்பூதும் பெண்ணுக்கு படி பூ எதற்கு” என்பது அடுப்பை ஊதுற பெண்ணுக்கு படி பூ எதற்கு என்பதுதான் மருவி படிப்பு எதற்கு என்றானது. இப்படி எத்தனையோ பழமொழிகள் தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டு இன்றும் சொல்லிக் கொண்டிருக்கின்றோம்!..

# நேருவின் நகைச்சுவை..

இந்தியாவின் முதல் பிரதமர்தான் நேரு. ஒரு சமயம் அமெரிக்காவுக்குச் சென்றிருந்தார். அங்கு வாஷிங்டன் நகரிலுள்ள ஒரு பாடசாலைக்குச் சென்றார். அங்கு ஒரு வகுப்பறையில் மாணவர்களோடு உரையாடிக் கொண்டிருந்தார். அப்போது அங்கிருந்த மாணவர்கள் நேருவிடம் " எங்கள் பாடசாலையில் ஒரு மாணவன் இருக்கிறான் .அவன் சிரிக்கவே மாட்டான். யார்?..என்ன?..ஜோக் சொன்னாலும் அவன் முகத்தில் சிரிப்பே வராது. உங்களால் அவனைச் சிரிக்க வைக்க முடியுமா?..என்று கேட்டான்.

நேருவுக்கு அந்த மாணவனைப் பார்க்க வேண்டும்போல் தோன்றியது. அவனை எப்படியாவது சிரிக்க வைத்துவிட வேண்டும் என்று எண்ணினார். அந்த மாணவன் இருந்த வகுப்பறைக்குச் சென்றார். அவனோ முகத்தை " உம் " என்று வைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். நேரு யோசித்தார்..அவரது பக்கட்டிலிருந்து ஒரு சீப்பை எடுத்தார். எடுத்துத் தனது வழுக்கைத் தலையைச் சீவினார். உடனே அந்த மாணவன் சிரிக்க ஆரம்பித்து விட்டான். அந்த மாணவன் மட்டுமல்ல..அங்கிருந்த அனைவருமே சிரித்து மகிழ்ந்தனர்.

## "பேசு"என்னும் வார்த்தைக்கு தொல்காப்பியம் கொடுத்துள்ள சொற்கள்...

1- பேசு, பகர் - ஆதாரத்துடன் பேசுதல்.

2- செப்பு - பதில் தெரிந்து பேசுதல்.

3- கூறு - வரிசைப்படி பேசுதல்.

4- உழை - அர்த்தத்துடன் பேசுதல்.

5- நவில் - நயமாகப் பேசுதல்.

6- இயம்பு - இசைபடப் பேசுதல்.

7- பறை - வெளிப்படையாகப் பேசுதல்.

8- சாற்று - அங்கீகரித்துப் பேசுதல்

## தமிழ் சொல்லில் "பரம்பரை" என்ற சொல் எப்படி வந்தது....

**தலைமுறை...**

1வது தலைமுறை - நாங்கள்
2வது தலைமுறை - அப்பா-அம்மா
3வது தலைமுறை - பாட்டன்-பாட்டி
4வது தலைமுறை - பூட்டன்-பூட்டி
5வது தலைமுறை - ஓட்டன்-ஓட்டி
6வது தலைமுறை - செயோன்-செயோள்
7வது தலைமுறை - பரன் - பரை

பரன் + பரை சேர்ந்துதான் "பரம்பரை" என்ற சொல் உருவாகியது..
வேறு எந்த மொழிகளிலும் இல்லாத சிறப்பு தமிழ் மொழிக்கு உண்டு..


# கணக்குப் புதிர்கள்...

**கணக்கு:-**

| | | | | |
|---|---|---|---|---|
| | 15 | | | 12 |
| | 8 | 18 | | |
| | 31 | 24 | 9 | |
| 16 | | | | 26 |
| 10 | | 27 | | 23 |

எந்தப் பக்கத்தால் கூட்டினாலும் கூட்டுத்தொகை 100 வரவேண்டும் 8 தொடக்கம் 32 வரையிலான எண்களைப் பயன்படுத்தலாம். ஒரு முறை எழுதிய எண்ணை மீண்டும் எழுதக்கூாது..

**படம்:-**



புள்ளிகள் காணப்படும் இடத்திற்கு வர்ணம் தீட்டுங்கள். ஒரு படம் உருவாகும். அப்படத்தைக் கண்டுபிடித்தல் வேண்டும்.

**முயற்சிசெய்து பாருங்கள் முடியாவிடின் பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்..**

# காசிஆனந்தனின் சிந்தனைகள்...



## நட்பு..

கடலோரத்தில் நண்டு ஊர்ந்துகொண்டிருந்தது. மணலில் பதிந்த நண்டின் கால்த்தடத்தை அலை அழித்துக்கொண்டே இருந்தது. நண்டுக்கு ஒன்றும் புரியவில்லை. ஒரு நாள் கடற்கரையோரம் நண்டின் கால்த்தடம் இருக்கின்றதா என்று நரி தேடி அலைந்தது. வளைக்குள் இருந்து ஓரக்கண்ணால் எட்டிப் பார்த்த நண்டுக்கு அலை தன் கால்த்தடத்தை அழித்த காரணம் இப்போதுதான் தெளிவானது. அலையின் நட்பை அடி மனத்தால் போற்றியது நண்டு. தனக்குள்ளேயே அது சொல்லிக்கொண்டது...

**“ முன்பே காப்பான் அன்பே நட்பு ”**

## முகவரி...

” மழை வழங்கும் வானமே நீ வாழ்க ” என்று நான்கு திசைகளும் வானத்தை வாழ்த்தின. காற்றுக்குச் சினம் பொங்கியது. ”என்ன கொடுமை வானமா வழங்கியது? ” பூமிக்காகக் காற்றுப் பொருமியது..

**“ நீர் கொடுப்பதோ பூமி.. பேர் எடுப்பதோ வானம் “**

# குறளும் பொருளும்...

## பேச்சுத் திறன்:-

641. நாநல மென்னு நலனுடைமை யந்தலம்
யாநலத் தள்ளதூ மன்று.

642. ஆக்கமுங் கேடு மதனால் வருதலாற்
காத்தோம்பல் சொல்லின்கட் சோர்வு.

643. கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்.

644. திறனறிந்து சொல்லுக சொல்லை யறனும்
பொருளு மதனினூஉங் கில்

645. சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொ லச்சொல்லை
வெல்லுஞ்சொ லின்மை யறிந்து

646. வேட்பத்தாஞ் சொல்லிப் பிறர்சொற் பயன்கோடன்
மாட்சியின் மாசற்றார் கோள்.

647. சொலல்வல்லன் சோர்வில னஞ்சா னவனை
யிகல்வெல்லல் யார்க்கு மரிது.

648. விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்.

649. பலசொல்லாக் காமுறுவர் மன்றமா சற்ற
சிலசொல்ல றேற்றா தவர்.

650. இணரூழ்த்து நாறா மலரனையர் கற்ற
துணர விரித்துரையா தார்.

# குறளும் பொருளும்...

## பேச்சுத் திறன் :-

641. சொல் வன்மை என்று சொல்லப்படும் நாநலம்மற்ற எந்நலத்துள்ளும் அடங்குவது அல்ல. தனிச்சிறப்புடையது ஆகும்.

642. ஆக்கமும் அழிவும் சொல்கின்ற சொல்லால் வருவதால் ஒருவன் தவறான சொற்களைச் சொல்லாதிருத்தல் வேண்டும்.

643. நம் சொல் கேட்டவரைத் தன் வயப்படுத்தும் தன்மையுடனும் பகைவரும் நம் சொல்லை விருப்பிக் கேட்கும் பண்புகளுடனும் உள்ளதே நல்ல சொல்லாகும்.

644. சொல்லின் திறத்தை அறிந்து சொல்ல வேண்டும். அச்சொல் திறத்தைவிடச் சிறந்த அறமும் பொருளும் இல்லை.

645. வேறொரு சொல் நாம் சொல்லும் சொல்லை வெல்லும் சொல்லாக இல்லாதிருப்பதை அறிந்த பின்பு எண்ணிய சொல்லைச் சொல்ல வேண்டும்.

646. பிறர் விரும்பும்படியாக நாம் சொல்ல வேண்டும். பிறர் சொல்வதை ஆராய்ந்து நாம் கொள்ள வேண்டும் என்பதே குற்றமற்றவரின் கொள்கையாகும்.

647. சொல்லின் வல்லவனை சோர்வு இல்லாதவனை எதற்கும் அஞ்சாதவனை மாறுபாட்டால் வெல்வது யாராலும் முடியாது.

648. கருத்துக்களை வரிசைப்படுத்தி இனிமையாகச் சொல்லுபவனின் சொற்பொருளை உலகம் விரைந்து ஏற்றுக்கொள்ளும்.

649. ஒரு கருத்தைக் குற்றமற்ற முறையில் சில சொற்களில் சொல்லத் தெரியாதவர் பல சொற்களைச் சொல்லிக் கொண்டிருக்க விரும்புவர்.

650. தான் கற்றதை பிறர் உணரும்படி விரித்துரைக்க முடியாதவர் கொத்தாகப் பூத்தும் மணம் வீசாத மலரைப் போன்றவரே ஆவர்.

# அன்னை திரேசா

வே.புவிராஜ்...
...நோர்வே...

தெய்வம் வெறும் மர்மம்
என்பேன் ஆய்வுக்கெட்டா
மாயம் என்பேன்
தேடும்போதுகைகொடாது
வேண்டுதலுக்கும்
செவிகொடாது
நம்பிக்கை என்னும்
வாசல்படிக்கு
விட்டத்தில் தொங்கும்
மாய வெளிச்சம் .

அழுகுரல் அவனுக்கு
உறுத்துவதில்லை .
அபயத்தின் அடைக்கலம்
தெரிவதும்மில்லை .
நீதிஎன்னும்நியாயம் பேச
எதிரேலியாய் அவன்
எழுவதும்மில்லை.
வெறும் சடப்பொருள்
எல்லாம் தெய்வம்
என்றால் அன்னையே
உன்னைஎன்னவென்பேன்
.
தான் நினைந்தூட்டும்
தாயிலும் மேலாள்
பிற உயிர் வருந்த
தன் ஊன் உருகும்
தெய்வமே !சீல் சித்தல்
ஊன் ஒழுக உடல்
வலி உயிர் புரள தாய்
வடிவில் கண் சொரியும்
.உன்போல் நோய்
நொடிக்கு உயிர் பதறும்
கூன் குறுடு முடம்
எதுவோபரிதாபம் பசி
எதுவோஅனைத்தையும்
கண்டு அனைத்தவள்
கடவுளுக்கும் அன்னை
ஆனவள் அன்னை திரேசா
.தொழு நோய் என்னினும்
சீழ் வழியும் வினை நோய்
என்னினும் சிந்தை சிதறி
சலமும் மலமும் ஒழுக்கி
ஒட்டி நாற்றம் சிதலம்
எதுவாயினும்ஓர்தாய்போலே
கட்டித்தழுவும் தெய்வம்
ஒன்று உலகில் உண்டோ
நல்லார் ஒருவர் உள்ளார்
எனில்அவர் உள்ளம் மகிழ
பொழியும் மழைஎன்னும்
ஔவைவாக்கின்
சொல்லாய் அமைந்த
தாயின் கருணை .அன்பு
என்னும் நீரூற்றி உலகை
கருணையால் நனைத்த
அன்னை .

மேலைநாட்டில்
பிறந்தபோதும்
செல்வம் செழிக்க
இருந்தபோதும்
ஆசைகளை துறந்த
அன்னை அன்பு தன்னை
விதைத்த அன்னை
ஏழை எளியோர் உறவு
என்று அவர் துன்பம்
தீர்க்க வந்த அன்னை
தாய் பாரதத்தை
தத்தெடுத்து பாவியரின்
வலி துடைத்து தெய்வம்
என ஆனா அன்னை
எந்த கடவுளரும்
ஈடு இல்லை .

தான தர்மம் வேண்டி
நின்றார் அவமானங்கள்
தாங்கி நின்றார் காறி
உமிழ்ந்து அசிங்கப்பட்டும்
தீங்கு செய்தோர்
அனைவருக்கும் அன்பு
செய்ய கடமைப்படடார்
கோடி பேரின் இதயம்
தொட்டார் துறவி

மேலைநாட்டில் பிறந்த
போதும் செல்வம் செழிக்க
இருந்தபோதும் ஆசைகளை
துறந்த அன்னை அன்பு
தன்னை விதைத்த அன்னை
ஏழை எளியோர் உறவு
என்று அவர் துன்பம் தீர்க்க
வந்த அன்னை தாய்
பாரதத்தை தத்தெடுத்து
பாவியரின் வலிதுடைத்து
தெய்வம் என ஆனா
அன்னை எந்த கடவுளரும்
ஈடு இல்லை .தான தர்மம்
வேண்டி நின்றார
அவமானங்கள் தாங்கி
நின்றார் காறி உமிழ்ந்து
அசிங்கப்பட்டும் தீங்கு
செய்தோர் அனைவருக்கும்
அன்பு செய்ய கடமைப்
பட்டார் கோடி பேரின்
இதயம் தொட்டார் துறவி
என ஆனா போதும்
கோடி பேரின் தாயுமானார்
மனித வடிவில் கடவுள்
ஆனார்... .

# குறுக்கெழுத்துப்போட்டி-194
(ஆடி - ஆவணி- 2023)

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 |
| 36 | 37 | 38 | 39 | 40 | 41 | 42 |
| 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 |

இ-வ
01-05 பருவ காலங்களில் ஒன்று.
10-13 இது ஒரு உருவம் அது எது?..
16-18 துணி வகைகளில் ஒன்று.
22-25 கீரை வகைகளில் ஒன்று.
43-44 மாதங்களில் இதுவும் ஒன்று.
வ-இ
07-05 ஒற்றுமைக்குப் பெயர் போன பறவை.
20-18 சிலர் இது எழுதுவதில் வல்லவர்கள்.
32-30 இரு பக்கத்தால் வாசித்தாலும் ஒரே சொல் இது
49-46 ஊட்டச் சத்துள்ள பழங்களில் இதுவும் ஒன்று.
கீ.மே
16-02 நீர் இறைத்தலுக்குப் பயன்படும் பொருட்களில் ஒன்று.
44-30 குடும்பத்தில் ஒருத்தி.
46-25 மாதங்களில் ஒன்று.
47-26 இந்தியாவிற்கு இப்படியும் ஒரு பெயர் உண்டு.
49-28 விளையாட்டுப் பொருள் ஒன்று.
மே-கீ
01-36 இலங்கையில் பாடல் புகழ்பெற்ற திருத்தலங்களில் ஒன்று.
04-18 இனிப்பான பலகாரம்.
07-28 கணனி மயத்தால் இது எழுதுவது பலருக்குக் குறைந்துவிட்டது
20-41 இனிப்பான தின்பண்டம்.
31-45 கூரான பாவனைப் பொருள்.
(விடைகளை கண்டு பிடியுங்கள். முடியாவிடின். பக்கங்களைப் புரட்டுங்கள் விடை கிடைக்கும்)

## அன்புத் தாய் அன்னை திரேசா...

அல்பானியா நாட்டில் மலர்ந்து
அரச குடும்பத்தில் வாழ்ந்து
ஆண்டவனுக்கு அருட்பணியாய்
அருட்சகோதரியாகியாய்
கொல்கொத்தா சேரிப் புறங்களில்
தொழுநோயாளர் குழந்தைகளுக்கு
ஆசிரியையாக தாதியாக
தொண்டுகள் பல புரிந்து
ஆன்மீகத்தில் முற்றும் முழுதுமாக
அர்ப்பணித்த அன்னை
பாதையோரம் கையேந்தி
நின்றோர்க்கு
பசி தீர்த்து பரிவோடு பணியாற்றி
பாசமான அன்போடு அரவணைத்து
குழந்தைகளுக்கு செவிலித் தாயாக
தொழுநோயாளர்களை தொட்டு
பசியாற்றி குணமாக்கிய அன்னை
வெள்ளை சேலை சிலுவை
செபமாலை
அதனது சொத்தாக ஏற்றுக்
கொண்டு
அத்தனையும் இயேசுவுக்காக
துறந்து
அமைதியில் இறைவன் சன்னிதியில்
அன்னை
புனிதர் பட்டம் நோபல் பரிசு
சமாதானமாக பெற்று
பேரும் புகழுடனும் உலகளவில்
எல்லோர் உள்ளங்களிலும்
நிறைந்திருக்கும் அன்னை

**ஜெயா நடேசன்- யேர்மனி**

## மேரி கியூரி அம்மையார்...

அடுத்தவரை அன்பு செய்யும் அண்ணல்
இயேசுவின் ஆடையை அவள் மேனியில்
அணிந்து கொண்டாளோவென அகமது
எண்ணுமளவுக்கு
அர்ப்பணிப்பாயுள்ள அவரது வாழ்வுப்
போர்வை
விளக்கேந்திய பெருமாட்டியாய் ஈர்க்க
வைத்தது...

அறிவியல்த் வேதியல்த் துறைகளின்
ஊடாக ஊடறுத்துப் புறப்பட்ட அந்த
அற்புத ரேடியக் கதிர்வீச்சு
இயந்திரமது மந்திரமான சக்தியாய்
மனிதர் உடலினுள்ளே புகுந்து
கிருமிகளை நசுக்கிப் பொசுக்கி
எரிக்கிறதே பரிசுத்தத்
தைலமதாய்..

ஏழ்மையென்னும் கொடிய நோய் அவரை
வாட்டி வதைத்தாலும் பிறர்நலத்தைக்
கனமாய்க் காத்து அதி தீவிர நோயான
புற்று நோய்க்காக குடும்பமாகவே
உழைத்துப் பிழைக்க வைத்தார்கள்
திசைகாட்டிகளாய்...

கடினமான பணச்சூழல்ப் புயல்க்காற்று
ஆராட்சிகளையே ஆமை வேகத்தில்
மட்டுப்படுத்திய சோகத்திலும்
பெண்கள் அடக்கப்பட்டு ஒடுக்கப்பட்ட
பிற்போக்கான இடிமின்னல்க் காலத்திலும்
எதிர்த்து எழுந்த தாவரமாய் விழித்து
எழவைத்துப் புதிய விழுதானாள்!..

**திரேஸ் மரியதாஸ் -லண்டன்**

# மௌனம்!...

- கீதா பரமானந்தன் -

எதிர்பார்ப்புகளை ஆசைகளைப்
பிரயத்தனப்பட்டு செயலாக்கும்
போழுதுகளில் பாராட்டி
அணைக்குமென எதிர்பார்த்த கரங்கள்
கெக்கலிச் சிரிப்புக்களுடன்
தலையில் கொட்டி அடக்குவதே
நித்தியமாகி விட்டது

சுதந்திரக்காற்றைச் சுவாசிக்க
விரும்பி இறக்கை விரிக்க
வார்த்தைக் கணைகள்
கோடரியாகி இறக்கைகளைப்
ஒட்ட நறுக்கிவிடுவதே
காலாதி காலமாய்த்
தொடர்கையில்

இடிதாங்கி ஆகியது மனது
பீரங்கியாய்க் கத்தினாலும்
பிரளயமே வெடித்தாலும்
அதிர்வோ தாக்கமோ
எதிர்வலையே இன்றி
அனைத்தையும் மென்று துப்பிச்
சீரணம் செய்யப்
பழகிவிட்டது ஐம்புலன்களும்

பள்ளத்தில் வீழ்த்துகின்ற
போலிப் பிணைப்புகளை
புழுதி மண்ணாய்த் தட்டிவிட்டு
சித்தமே சிவன் செயலாய்
மௌனத்தை ஆயுதமாய் ஏந்தி

என் பாதையில்

தொடர்வதைப்

பழக்கம் ஆக்கிவிட்டேன்

சலனமே இல்லா யோகியாய்

மௌனம் மகா சக்தியாய்
எனக்குள்!...

............................................................

## பட்டாம் பூச்சி!..

அழகான பல வர்ண்ண
பட்டாம் பூச்சி
மென்மையாகப் பிடித்தால் பறக்கும்
இறுக்கிப் பிடித்தால் இறந்துவிடும்
நம் வாழ்க்கையும் அதுபோல்தான்!..

## உண்மையைப் பேசினால்...

காட்டிக்கொடுப்பவன் என்கிறீர்கள்
சமூக நலன் பற்றிப் பேசினால்
தேசத்துரோகி என்கிறீர்கள்
என்ன செய்யலாம் நான்!...

- சிவா -

# வித்தகரான விபுலானந்தர்!...

- இரா . சம்பந்தன்

மீன்பாடும் தேனாட்டி லுதித்த
வித்தகராம் விபுலானந்தர்
இத்தரையி லென்றும்
முத்தென ஒளிர்பவர் !

மயில்வாகன மென்னும்
திருநாமங் கொண்டவர்தான்
மகத்தான நற்பணிகளால்
விபுலானந்த அடிகளானார் !

முத்தமிழின் தேர்ச்சியினால்
சித்தத்தின் சீர்மையால்
கத்துங் கடலோர மெல்லாம்
தன்புகழை நட்டவர் !
தமிழர் மனங்களைத் தொட்டவர் !

சாதி சமய பேதமின்றி
சமத்துவப் பயிர்வளர
நீதிநெறி போதித்து
நீணிலத்தில் வாழ்ந்தவர் . . . .

இருள்சூழ் உலகத்தில்
ஒளிக்கதிர் பாய்ச்சி
மருள்களைந்து மண்ணிலே
மணித்துறவி யானவர் . . . .

பன்முக ஆளுமை
கொண்டவரின் படையலாய்
பல்வகை நூல்கள்
பாரெங்கும் பரிமளம் !

பண்டைய மக்களின்
பாவனையில் பலயாழ்கள்
அத்தனை யாழ்களும்
யாழ்நூலில் கண்விழித்து
யாழிசை மீட்டும் .

வெள்ளைநிற மல்லிகையோ ?
வேறென்ன மாமலரோ ?
வள்ளல் அடியினுக்கு
வாய்த்த மலரெதுவோ ?
என்னும் பாடலதை
உச்சரிக் காதவுத டுகளுண்டோ ?

ஆய்வுக் கட்டுரைகள்
அளப்பரிய நூல்களென
அன்றவ ரளித்ததை
அகிலமின்றும் போற்றும் .
பள்ளிக் கூடங்களை
பாரெங்கும் தான்நிறுவி
ஆசிரியராய் அதிபராய்ப்
பேரா சிரியராய்த் தானுயர்ந்தார் .

தன்னிக ரில்லாத்
தமிழ்ப் பணிசெய்தே
ஈழத்திரு நாட்டின் பெயரை
இமயத்தில் பதித்துவிட்டார் .

பிரமச்சரிய விரதத்தை
விருப்புடனே தானேற்று
விழுமியம் தழைப்பதற்கு
விதைதூவி நின்றாரே !

விதைதூவிச் சென்றதனால்
வீழ்ந்தவராய்த் தெரியவில்லை !
ஆழிசூழ் உலகத்தில்
அவர் புகழ் அழிவுறுமா?...

# கருணையின் கலங்கரை...

அன்னையெனும் பொக்கிசம்
அவரவணைப்பின் மகத்துவம்
பிறர் அன்பின் தனித்துவம்
பேரன்பின் பெரும்தேட்டம்
உன்னதத்தின் உழைப்பாளி
உயிர்காக்கும் பணியாளி
தன்னையே அர்ப்பணமாய்
தன்சேவை சமர்ப்பணமாய்
எண்ணற்ற சேவகத்தில்
இணைந்திட்ட ஈகைத்தாய்
இனமத பேதமின்றி
ஏழைகளின் தேவதை
மனம் குன்றும் நோயாளி
மாற்றுத் திறனாளி
புறம் தள்ளி போக்கிடமற்றோர்கள்
காசநோயின் வாட்டத்தில்
கவனிப்பு அற்றோரை
கரம் கொடுத்து காத்தாய்
வழிகாட்டி வரம் கொடுத்து
வலிபோக்கி வாழ்வு தந்தார்

ஈகையின் உன்னதத்தை
இயல்பாக உணர்த்தியவர்
வீடு மனையற்றோர்
வீதியிலே வாழ்ந்தவர்கள்
நோயாலே வாழ்ந்தவர்
நோக்கோடு காத்தவர்
மதுபோதை குடிப்பழக்கம்
மாற்றிடப்பழக்கங்கள்
கண்பார்வை அற்றவரை
காக்கவென்று உழைத்தவர்
கருணையின் வள்ளலிவர்



கடினங்கள் பலசுமந்தும்
காயங்கள் தான் மறந்தும்
காப்பாற்றி சேவை செய்த
அன்னையின் சேவைக்கு
ஈடேது இணையேது
அல்லும் பகலுமாய்
அர்ப்பணிப்பு அர்ப்பணிப்பு
ஓரே தேவை சேவையே
உணர்த்திய உன்னதத்தாய்

மூத்தோர் வாழ்வரனும்
சிசுபவன் காப்பகமும்
சிரத்தையுடன் சீரமைத்தார்
சமூகம்சார் சீர்நலனை
சிறப்பாக்கி சேவை நெய்தார்
தெய்வத்தின் உருவிலே
தேசத்தின் சீமாட்டி
காலத்தின் கலங்கரையே
அன்னை தெரசா
அவனியின் அட்சயமாய்
அவதாரம் பெற்ற தாய்
ஈடிணையற்ற ஈகையின் முதலீடு
கருணையின் பேரேடு!
நன்றி

**வசந்தா ஜெகதீசன்**

## வெலிக்கடையில் வேள்வி.

- ராணி சம்பந்தன் -

இரத்த இன வெறி தலைக்கேறியது
புத்த நெறி மறந்து முறுக்கேறியது

பெயரோ பாதுகாப்புச் சிறைச்சாலை
வெலிக்கடையோ பலிக்கடைச்சாலை

1983 யூலை 25 இல் 35 தமிழ்க
கைதிகள்
யூலை 28 இல் 18 பேர் தருணம்
பார்த்து
காடையரின் கத்தி
,கோடரி,வாள்,பொல்லு
வேட்டையாடிய வேள்வித் தீயில்
ரத்தம்
சீறி உயிர் குடித்தது

குற்றம் செய்யாமலே பயங்கரவாதக்
குற்றச்சாட்டில் குட்டிமணிக்கோ
தூக்குத்தண்டனை கூறியது

தன் கண்களாவது தமிழீழம்
பார்க்கட்டுமே என்று கண்தானம்
உரிமை கோரியதே

காட்டுமிராண்டிகள் அந்த கண்களைக்
கூரிய வாளால் குத்தித் தோண்டி எடுத்து
காலால் மிதித்து புத்தருக்குப் படைத்த
காடையரின் அகோரத் தாண்டவமே

இது ஒரு இனக்கருவறுப்பு அதுவே
கறுப்பு யூலை வன்செயல் கலவரம்

தமிழனை நிர்வாணமாக்கி உயிரோடு
எரித்த ஈழத்தமிழரின் நினைவுத்
திறப்பு

எத்தனை தடவை தீயில் வெந்த உறுப்பு
அத்தனையிலும் இரத்தக்கொதிப்பு

தொடரும் சாத்தானின் சாவடைப்பு
படரும் பாவத்தின் சம்பளம்
கொழும்பில் எரியுது தமிழனின்
சாப நெருப்பு....

..........................................................................

## குழந்தைகள்!..

பால் இல்லாமல் கஞ்சி இல்லாமல்
பரிதவிக்கும் குழந்தைகள் அங்கே
அப்பிள் பழத்தில் பந்தடித்து
விளையாடும் உண்டு கொழுத்த
குழந்தைகள் இங்கே!..

## கறுப்பு யூலை!..

கறுப்பு யூலை நினைவு என்றால்
எமக்குவெறுப்புத்தான்
எப்போதும் வந்திடும் நமக்கு
மறுக்க முடியாது மன்னிக்கவும்
முடியாதே உறுப்பறுத்து கொலை
செய்த பேரினவாதிகளை!..

- சிவா -

## இன்னும் எத்தனை நாள்..

நாடி தளர்ந்து நடை தளர்ந்து
இடை மெலிந்து பாடையிலே போவதற்கு
பிறப்பெடுத்த மானிடனே
கடை கடையாக ஏறினாலும்
உன் நோயும் பிணியும் தீர
மருந்துமில்லை
சாக வரம் பெற்று நீடுழி வாழ
வழியுமில்லை...

நீ மாடி கட்டி வாழ்ந்தாலும்
மடி மீது புரண்டு இன்பமுற்றாலும்
சோடி மாறிச் சுகம் கண்டாலும்
கடைசியிலே காடுதான்
கட்டுடலும் கலைந்து
ஆணவமும் அழிந்து
உறவுகளும் தொலைந்து
உருக்குலைந்து நீ போக
காலம் மிக விரைவில்
வரும் என்று தெரிந்தும்...

பிறரை மதியாமல் குதிக்கிறாய்
அன்பை உணராமல் மிதிக்கிறாய்
எக்கதாளமாய் சிரிக்கிறாய்
நேரமின்றிப் பறக்கிறாய்
இன்றோ நாளையோ
இன்னும் எத்தனை நாள்
என்பதை மறக்கிறாய்
இந்த நிமிடமாவது சிந்தித்துப் பார்
உண்மை எது என்பதை சிந்தித்து பார்....

**கவி மீனா**

## மூத்தோர் வாழும்இல்லம்...

மூத்தோர் வாழும் இல்லம்
முதிர்ந்த பழங்கள் நிறைந்த
வண்ணம்கற்றவர் பெற்றவர் கலந்து
உற்றவர் போல் வாழும் இடம்
உயர்ந்தவர் தாழ்ந்தவர் பாகுபாடு
இல்லை உள்ளத்திலே வேற்றுமை
இல்லை சிலரோ தெளிந்த
சிந்தனையுடன் பலரும் பலவித
சிந்தனையுடன் வாழும் இல்லம்...

தங்கள் வாழ்வில் நடந்த சம்பவம்
தனை நினைப்போரும் மறந்தோரும்
உளர்இளவயதில் பெற்றாருடன்
வாழ்ந்த நினைவுகள்பாடசாலை
போன நினைவுகள் தேங்கி இவை
எல்லாம் மனதில் நிழலாடும்
கனவுகளாய் அவர்க்காங்கே பிடித்த
உணவு கேட்டு கொடுக்கப் படும்
என்ன ஒன்று வாரத்தில் ஒரு நாளே
உடல் குளிப்பு

ஏலுமானவர் தாமே ஒவ்வொரு
நாளும் குளிப்பார் அன்பான
அரவணைப்பு தனிமை இல்லை
சங்கடமும் இல்லை எந்நேரமும்
கண்காணிப்பு உண்டு சிலர்
கலகலப்பாக இருப்பர் சிலர்
தனிமையில் இருக்க விரும்புவர்
ஆனாலும் அவர்கள் மகிழ்வாக
இருப்பார் இதுதான் முதியவர்
வாழும் இல்லம் இங்கில்லை
இன்பம்தவிர வேறொன்றும்என்பதே...

**கெங்கா ஸ்ரான்லி**

# அமைதிக்கு வாய்ப்பு தாருங்கள்..

- சத்யா பிரான்சிஸ் -

உலகத் தலைவர்களே
போர்ச்சூழலில் தவிக்கும்
அற்புத உலகம்!
அமைதிக்கு ஒரு வாய்ப்பு
தாருங்கள்...

மதத்தின் பெயரால்
,னத்தின் பெயரால்
வன்முறை படுகொலை
போர்த்தொடுக்க வெறித்தனம்
எதற்கு?

அழகிய உலகில்
அமைதி நதி போல பெருக்கெடுத்து
ஓடட்டும்
புதுமை உலகில் அமைதி
புல்லாங்குழல் ,சைக்கட்டும்
கற்பக உலகில் சமாதானம்
காலைப்பனியாகப் பொழியட்டும்..!

உலகத் தலைவர்களே
அமைதிக்கு ஒரு வாய்ப்பு
தாருங்கள்!

மனித நெறிகெட்டு
பாய்ச்சப்பட்ட வெடிகுண்டுகள்
போரில் சிதைந்த உடல்கள்
சீரழிந்த ,தயங்கள்
வழிந்தோடும் ரத்த வெள்ளம்
மனிதத் துயருக்கு முடிவு
தாருங்கள்..!

பசிப் பட்டினியால் கசிந்து
ஏங்கிச் சாகும் பிஞ்சுகள்
தாய் தந்தையரை ,ழந்து
கதறும் சிறுவர்களின் அழுகை
நெஞ்சின் ஆழத்தில்
நசுங்கிய கனவுகள்..

வெடிகுண்டுகளால்
வீடுகள் சிதைந்து
கல்லறை மேடானக் காட்சிகள்..
மதங்களின் உரசலில்
நொறுங்கிய எலும்புகளின் புதையல்..!

உலகத் தலைவர்களே
உங்கள் ,தயம் துடிக்கவில்லையா?
,ரக்கத்தினால் உங்கள் சிந்தனை சீர்பட
வில்லையா?
மாசற்ற உயிர்பலி கண்டு
மனம் சிலிர்க்கவில்லையா?
நெஞ்சில் நிறைந்த
கசப்பு விஷத்தை
அணுகுண்டுகளாகக் கக்குவதிலா
வெற்றி?

பிற நாடுகளின்
சுதந்திரக் கொடி முறித்து
சர்வாதிகார வல்லமை
ஆட்சி செலுத்துவது நீதியா?
அணுகுண்டுகளை நிறுத்தி
அச்சுறுத்தும் முறை நெறியா?
வரலாற்றுக் பக்கங்களில் குருதியில்
படிந்திருக்கும் நூற்றாண்டு காலத்
துன்பம் துயரம் வலி வேதனை சரியா?!

உலகம்
எல்லா உயிர்களுக்குமானது
உயிர்களில்
கடவுளின் ஆன்மா ஊசலாடுகிறது
கடவுளின் உயர் படைப்பில்
உயிர் துடிக்கின்றது..

உலகத் தலைவர்களே
ஒன்றுபடுங்கள்...
அமைதிக்கு ஒரு வாய்ப்பைத் தாருங்கள்!

# வேடிக்கை மனிதர்கள்...

குற்றங்கள் பெருகியதோர்
உலகில் இன்று
குணமிக்க மக்களையே
காண்ப துண்டோ..
சுற்றங்கள் சூழ்ந்திடுவர்
நம்மைச் சுற்றிச்
சூதுகளும் வாதுகளும்
நிலையாய் கொண்டே..
கற்றிட்ட கல்வியையும்
மறந்தும் போவர் காசினியில்
நம்நிலைமை அந்தோ பாவம்...
தற்சார்பு மங்கியதோர்
வாழ்வில் நாமும்
வேடிக்கை மனிதர்களா
சொல்வீர் சொல்வீர்..

தலையாய பணியின்றி நாமும்
நின்றால் தவறுகளும்
கயமைகளும் பெருகிப் போகும்.
விலையேற்றம் உண்டிங்கு
பாவம் ஏழைவிதியாலே
மாண்டிடுவார் சரியும் தானோ..
உலைவைக்கும் சமுதாயம்
ஊன்றிப் பார்த்தால் உயிர்களது
பெருஞ்சிறப்பை அறிவர் அன்றோ.
மலைமலையாய் சோகங்கள்
பெருகிப் போனால் மாற்றங்கள்
எங்கேசொல் மனிதா நீயே.

விலைமாதர் என்றிடுவார்
வேடிக்கை யாக்கி
வீட்டினிலே சோறுபோட
ஆட்கள் இல்லை...
.
கலையிழந்த பெண்ணினத்தைக்
கயவர் கூட்டம் கற்போடு
விளையாடும் நாய்கள் போக்காம்..

அலையலையாய் பெருகிடுமே
கண்ணில் கண்ணீர் அபலைகளின்
வாழ்க்கைக்கோர் அர்த்தம்
சொல்வீர்...
முளையிலேயே தெரிகின்ற
விளையும் வித்து. முரடராக
மாறுகின்றார் சரியும் தானோ...

போதைக்கே அடிமையாகும்
போக்கைக் கண்டால் பொங்கிடுதே
உணர்ச்சியுமே என்ன செய்வேன்...
கீதைக்குக் கீழ்படியும் மனிதர்
இல்லை...கீழோராய் இருக்கின்றார்
கோபம் என்னுள்.

பாதைகளும் மாறுகின்றார் பாவி
யாகிப் பதைபதைக்கும் நெஞ்சோடு
சொல்லு கின்றேன். காதைகளும்
காட்சிகளும் உண்மை சொல்ல
காசினியில்வேடிக்கை மனிதர்ஏனோ.?

ஆடுகின்ற ஆட்டமெல்லாம் நிலையும்
தானோ ஆண்டவனின் கணக்கினிலே
நரகம் உண்டு....வாடுகின்ற
சிறுமியர்கள்
முதியோர் எல்லாம் வாட்டமதும்
நீங்கிடவே வேண்டு கின்றேன்.
தேடுகின்ற நன்னெறிகள் தேட்ட
மின்றித் தெருவோர்க்கும் கிட்டிடவே
வேண்டு கின்றேன். பாடுகின்ற
என்கவிகள் பண்பைச் சொல்லும்
பாரினிலே வேடிக்கைமனிதர்யாரோ..?
யாரோ?பாரினிலே வேடிக்கை
மனிதர் யாரோ...யாரோ..!

**பிரியா மூர்த்தி**
**சுவிஸ்**

# மண் இதழிலக்கம் 219க்கான அட்டைப்படக்கவிதை.




கலைகளெல்லாம் பூத்துக் குலுங்கும் கலைமகனாம்
கல்வியிலே கனிந்தே நிற்குமோர் தலைமகனாம்
தலைமுறைகள் பலதைகண்ட தனிப் பேராசிரியராம்
தன்னிகரற்ற மாபெரும் தமிழ்த்தாயின் திருமகனாம்
விலைகள் இல்லாத ஞானத்தின் உயர்தலைவராய்
வீறுநடை போடுகின்ற வேந்தரையே வாழ்த்துவோம்

மலைபோல் உயர்ந்து நிற்கும் மண்ணின் கலைஞன்
மாநிலமே ஏற்றிப் போற்றுகின்ற மானுடதின் நேயன்
தொலைதூரம் புலம்பெயர்ந்து தொடரும் பணியாளன்
தொடர்ச்சியாக கலைபடைக்கும் தொன்மக் கலைஞன்
அலையலையாய் ஆக்கங்கள் படைத்தே நிறைக்கும்
அருஞ்சிறப்பானை அனைவரும் ஒன்றாய்வாழ்த்துவோம்

சிலையாக இலக்கியங்கள் செதுக்கியே தந்தவராம்
செல்வத்துள் செல்வத்தை செவிக்குள் ஊட்டியவராம்
வலைகளுக்குள்ச் சிக்கிடாத வற்றாத மொழியாளரை
வாழ்விலே உயர்ந்து நிற்கும் வல்லமை பெற்றவரை
குறையாத உடல்நலத்துடன் குன்றாய் நிமிர்ந்தவரை
குதூகலமாய் வாழ்ந்திடவே கூடியேநாம் வாழ்த்துவோம்

உலைக்களமான தேசத்தில் உறங்காது உழைத்தவாம்
ஊடகத்துறையிலும் உயர் பதவிகளில் அமர்ந்தவராம்
நிலையாக எல்லோர்மனதிலும் நிறைந்து வாழுபவராய்
நித்தியமும் தமிழோடுவாழும் நித்தியானந்தன் ஐயாவை
மலையகத்தின் மணிமுடியாய் மக்கள் போற்றுகையில்
"மண்"மலரின் வாசகரும் மனம்உவந்தே வாழ்த்திடுவோம்

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# அடிகளாய் அமிழும் அகவை நாற்பது....

( 1983 - 2023 )

கசையடியாய் விழுந்தவடுக்கள் கனலாய்த் தகிக்கிறது
கதறிஅழுத ஆடிக்கலவரமோ கன்றிப்போய் இருக்கிறது
பசைப்போன துணியாகப் பவனியிங்கே நடப்பதனாலப்
பாசம்நேசம் என்றதெல்லாம் பகற்கனவாய் மாறுகிறது

திசைகள்மாறி எல்லாமே திக்கற்றுப் போகின்றது
தீராதவலிகள் மட்டுமின்னும் தீயெனவே சுடுகிறது
விசையில்லா பம்பரமாய் வேண்டுதல்கள் கலந்ததனால்
விடுமுறையை கழிக்கும்கூட்டம் விரும்பியே வருகிறது

தசைகளைத் தின்றநாய்கள் தைரியமாய் உலவுகின்றது
தடைகளையே உதறிவிட்டு தன்னிச்சையாய் தாவுகிறது
நசையில்லா ஞானிகளாய் நாட்டுக்குள்ளே வந்திறங்கி
நவநாகரீகமாய் வலம்வந்தே நலுங்காமல் நகர்கின்றது

வசைபாடிய வார்த்தைகள் வாய்ப்பேச்சுடன் முடிகிறது
வதங்கிக்கிடக்கும் உறவுகள்துயர் வற்றாது நீள்கிறது
அசைவுகளில் மேலைத்தேய ஆடையணி அலங்காரத்தில்
அன்னைமண் என்றுரைத்திட்ட அக்கறைகள் கரைகின்றது

குசையுறு பரிகளெல்லாம் கூண்டுக்குள்ளே தவிக்கின்றது
கொதிக்கின்ற தனலாய்க் குருதியுடனாயுள் வற்றுகிறது
பிசைகின்ற இதயமெல்லாம் பேதலித்தே நாளுமிருக்கப்
பேரெதிர்பார்ப்புகள் யாவும்மெல்லப் பிசுபிசுத்து போகிறது

இசைவுடன் காலவெள்ளம் இருட்டினிலேயே நகர்கின்றது
இச்சையைத் தீர்த்தபேய்கள் இராஜ்ஜியம் அமைக்கிறது
மிசைமிகு தமிழினமோ மீள்எழுச்சிகள் கொள்வதற்குள்
மீதமுள்ள உறவுகளையினி மீட்பதற்கும் ஏன்மறுக்கிறது

**-அம்பலவன்புவனேந்திரன்..**

# இப்படியும் வாழ்த்தலாம்...

| | |
|---|---|
| 01வது - கடதாசி திருமணவாழ்த்து | 01- paper Wedding |
| 05வது - கலைத் திருமணவாழ்த்து | 05- Cave of the Wedding |
| 10வது - றோசா திருமணவாழ்த்து | 10- Rose Wedding |
| 15வது - படிகம் திருமணவாழ்த்து | 15- Crystal Wedding |
| 20வது - பீங்கான் திருமணவாழ்த்து | 20- Porcelain Wedding |
| 25வது - வெள்ளி திருமணவாழ்த்து | 25- Silver Wedding |
| 30வது - முத்து திருமணவாழ்த்து | 30- Pearl Wedding |
| 35வது - பவள திருமணவாழ்த்து | 35- Coral Wedding |
| 40வது - மாணிக்க திருமணவாழ்த்து | 40- Pupy Wedding |
| 45வது - நீலமாணிக்க திருமணவாழ்த்து | 45- Sapphire Wedding |
| 50வது - தங்கம் திருமணவாழ்த்து | 50- Gold Wedding |
| 55வது - மரகதம் திருமணவாழ்த்து | 55- Emerald Wedding |
| 60வது - வைரம் திருமணவாழ்த்து | 60- Diamond Wedding |
| 65வது - நீலமாணிக்கம் திருமணவாழ்த்து | 65- Blue Sapphire Wedding |
| 70வது - பிளாட்டினம் திருமணவாழ்த்து | 70- Plazinum Wedding |
| 75வது - வைரபவுண் திருமணவாழ்த்து | 75- Diamondgold Wedding |
| 80வது - கருவாலிமர திருமணவாழ்த்து | 80- Oak Wedding |
| 85வது - நிலவுக்கல் திருமணவாழ்த்து | 85- Moonstone Wedding |
| 90வது - கிரானைட் திருமணவாழ்த்து | 90- Granite Wedding |
| 100வது - விண்வெளி திருமணவாழ்த்து | 100-Sky Wedding |

# கதிரை!..

**- கவி மீனா -**

கதிரையை பற்றி என்னதான் எழுத போறன் என்று யோசிக்காதீங்கோ கதிரைதான் இன்று முதல் இடத்தை பிடிக்குது, இலங்கை இந்தியா போன்ற நாடுகளில் இந்த கதிரைக்காகதானே ஒரே போராட்டமும், சண்டையும் நடக்குது அரசியல் வாதிகள் ஆளை ஆள் இழுத்து விழுத்த ஒரே அடிதடி சண்டை போடுறாங்க இந்த கதிரையை பிடிக்கத்தானே?

அன்று தொட்டு இன்று வரை இந்த பதவி என்ற கதிரையைப் பிடிக்க படாத பாடு படுறாங்கள் ஒரு ஆளு ஏறி இருந்தாலும் அடுத்த கட்சிக்காரன் இழுத்து விழுத்துறான் இதுக்கு முடிவும் இல்லை சனங்களுக்கு அமைதியும் இல்லை, பதவி மோகமும் பணம் சம்பாதிக்கப் பேராசையும் தான் காரணம் அரசியல்வாதிகள்தான் பெரும் பணத்தை பதுக்கிறாங்களே!

பதவிக்காகவும் பாளிமென்றில் ( Parliament ) கதிரைக்காகவும் போடும் கூச்சலுக்கு என்றுதான் முடிவு வருமோ தெரியலை ஆனால் புலம்பெயர்ந்து வெளிநாடு வந்து அரசியல் தஞ்சம் புகுந்த தமிழருக்கு கதிரை கிடைச்சுட்டுதுங்க கூடுதலான தமிழருக்கு இங்கை நிரந்தமாக கதிரை கிடைச்சுட்டுது என்றால் ஆச்சரியம்தான் அதுதாங்க ஒவ்வொருத்தர் வீட்டிலும் உள்ள கதிரையைத்தான் சொல்லுறன்

இங்கு அனேகம் பேரு வீட்டிலை ரீவீ க்கு முன்னாலை ஆளுக்கொரு கதிரையிலை கிடந்து நாள் பூரா நாடகங்களைப் பார்பதுதான் வேலையுங்க! அவை நினைத்தாலும் அந்தக் கதிரையை விட்டு எழும்பமுடியாது காரணம் அம்மட்டு நோயுங்க, பக்கவாதம், பைபாசு, இருதய நோய், நீரிழிவு, கால் விறைப்பு, முள்ளந்தண்டு பிரச்சனை, கான்சர் இப்படி பலதரப்பட்ட நோய்களும் இங்கு வந்த நம்ம ஆரோக்கியத்தை தாக்கி கதிரையிலை இருக்க வைச்சுட்டுது பாருங்க!

இதுக்குத்தானே ஆசைபட்டாய் பாலகுமாரா என்று ஒரு படம் வந்திச்சுது அது போல நம்ம சனம் வெளிநாட்டுக்கு ஆசைப்பட்டு ஓடி வந்து ஆனேகமானோர் இப்படிதான் கதிரையிலை கிடக்கினம். ஊரிலை இருந்திருந்தால் கொஞ்சமாச்சும் வளவுக்குள்ளை வேலை செய்திருக்கலாம் இல்லை கடைசி வீட்டு படியிலை குந்தி இருந்து எழும்பவும், சப்பாணி கட்டி இருந்து எழும்பவும் உடலும் ஆரோக்கியமாக இருந்திருக்கும் உண்டதும் செமிச்சு இருக்கும்

நித்தம் நித்தம் நெல்லு சோறு நெய் மணக்கும் கத்திரிக்கா
நித்தம் நித்தம் நெல்லு சோறு நெய் மணக்கும் கத்திரிக்கா
நேத்து வெச்ச மீன் கொழம்பு என்ன இழுக்குதையா
நெஞ்சுக்குள்ள அந்த நெனப்பு வந்து மயக்குதையா

ஊரிலை குத்தரிசி சோறும் மீன் மரக்கறி என்று சாப்பிட்டவையும், இடித்து அரைத்து சமைத்தவையும் இங்கை வந்து பஞ்சிப் பட்டு வெள்ளைசோறு அதுவும் ரைஸ்குக்கரிலை போட்டு அவிச்சு எடுத்து சாப்பிடுவதும் இங்கை வந்த சனத்திலை கனபேரு சுதந்திரம் தமக்கு கிடைத்த மகிழ்சியிலை நித்தம் நித்தம் இறைச்சி, முட்டை, பட்டர், சீஸ், மது, மாது, புகை என நல்லாக கொண்டாடிதான் இப்படி அழுந்துறாங்க இப்ப !

புகை போட்டா பழம் பழுக்கும் ஊரிலை இங்கை புகை போட்டு கன ஆண்களுக்கு நுரையீரல் பழுத்துட்டுதுங்க! ஒரே கம்மு கம்முதான், ஊரிலை ஒழிச்சு ஒழிச்சு குடிச்சவன் எல்லாம் இங்கை வந்ததும் கூட்டு சேர்ந்து குடிக்க தொடங்கினாங்க,

குடிச்சு முடிய கத்தல் கூச்சல் அடிதடி கூட நடந்திச்சு கூடியிருந்த இடங்களிலை இல்லாட்டி ஒழிச்சு வீட்டிலை குடிச்சவன் மனுசியோடே மல்லு கட்டுவது வழக்கமாக போச்சுது, அவனவன் வாழ்க்கை அவன் கையில் என்று ஏன் சொன்னார்கள் தெரியுமா? அளவுக்கு மிஞ்சி ஆட்டம் போட்டவர்களில் சிலருக்கு கதிரை நிரந்தமாச்சு, சிலபேரு போய் சேந்துட்டாங்க, இன்னும் ஒரு சிலருக்கு தனிமை சொந்தமாச்சு, ஏனெண்டால் குடிகாரண்டை மனுசி விட்டுபோட்டு போட்டாங்க ரோச்சர் தாங்க முடியாமே!

எது எப்படியோ இங்கை அதிகமானோருக்கு கதிரை கிடைச்சுட்டுது அதிலை கிடந்து ரீவீயைப் ( TV ) பார்த்துக்கொண்டு கிடைக்கிறதை முழுங்கிட்டு எழும்ப பறிக்க ஏலாமே உளன்று கொண்டு கிடக்க வேண்டியதாயிற்று, கதிரையை பிடிக்க அடிபாடு உலகமெங்கும் நடக்குற நேரத்திலை நிரந்தரமாக கதிரை கிடைப்பதே பெரும் காரியம் ஆச்சு! இங்கை அவர்கள் கைவிட்டாலும் கதிரை அவர்களை கைவிடாதுங்க!

இது எல்லாம் அவனவன் தேடிக் கொண்ட வாழ்க்கை பாருங்க!

# கர்மாவின் ஒன்பது விதிகள்.....

1.ஒன்றாம் விதி !
இந்த பிரபஞ்சத்தில் நாம் எதை செய்தாலும்
அது நமக்கே திரும்பி வரும் !!!!!!”

2.இரண்டாம் விதி !!
வாழ்க்கையில் எதுவும் தானாக நடப்பதில்லை!!
நமக்கு தேவையானவற்றை நாம் தான் நகர்த்தி செல்ல வேண்டும்.

3.மூன்றாம் விதி !!!
சிலவற்றை ஏற்றுக்கொண்டால் மட்டுமே
மாற்றம் நிகழும்!!!

4.நான்காம் விதி !!!!
நம்மை நாம் மாற்றி கொள்ளுமோது
வாழ்க்கையும் நம்மை பின்பற்றி மாறும் !!!!

5.ஐந்தாம் விதி !!!!!
நம் வாழ்வில் நிகழும் அனைத்திற்கும் நாமே
பொறுப்பு என்பதை உணர வேண்டும் !!!!!

6.ஆறாம் விதி !!!!!!
நேற்று, இன்று, நாளை இது மூன்றும் ஒன்றிற்கு ஒன்று தொடர்புடையதே !!!!!!

7.ஏழாம் விதி !!!!
ஒரே நேரத்தில் இரு வேறு விஷயங்களை
சிந்திக்க முடியாது !!!!

8.எட்டாம் விதி !!!!
நமது நடத்தை, நம் சிந்தனையும் செயலையும்
பிரதிபலிக்க வேண்டும் !!!!

9.ஒன்பதாம் விதி !!!!
நம்முடைய கடந்த காலத்தையே நினைத்து கொண்டு இருந்தால்
நிகழ்காலம் கடந்து
சென்றுவிடும் !!!!

# திருமண வாழ்க்கையின் ரகசியம்..

வெற்றிகரமான திருமண வாழ்க்கயின் ரகசியம் என்ன?..என்பதை நீங்களும் படித்துப் பாருங்கள்..

திருமண வாழ்க்கையில் எந்தப் பிரச்சனைகளும் இல்லாமல் வாழ்ந்த ஒரு ஜோடி தங்களது 25ஆவது திருமண நாளைக் கொண்டாடியது. ஊரையே கூட்டி விருந்து வைத்து தங்களது திருமண நாளைக் கொண்டாடிய தம்பதியினரைப் பற்றி அறிந்த அந்த ஊர் செய்தியாளர் ஒருவர் அவர்களைப் பேட்டிகண்டு பத்திரிகையில் பிரசுரிக்க விரும்பினார்.

நேராக அந்தத் தம்பதிகளிடம் சென்று " 25வது திருமண நாளை ஒற்றுமையாகக் கொண்டாடுவது என்பது பெரிய விடயம். இது உங்களால் எப்படி முடிந்தது. உங்களது திருமண வாழ்வின் வெற்றி ரகசியம் என்ன? " என்று கேட்டார். இந்தக் கேள்வியைக் கேட்டதும் அந்தக் கணவருக்குத் தனது பழைய தேனிலவு நிகழ்ச்சிகள் நினைவுக்கு வந்தன.

" நாங்கள் திருமணம் முடிந்ததும் தேனிலவுக்காக அழகான குளிச்சியான ஒரு ஊருக்குச் சென்றோம். அங்கு எங்களது பயணம் சிறப்பாக அமைந்தது." அப்பகுதியைச் சுற்றிப் பார்க்க நாங்கள் குதிரை ஏற்றம் செல்வது என்று தீர்மானித்தோம். அதற்கு இரண்டு குதிரைகளைத் தேர்ந்தெடுத்து இருவரும் ஆளுக்கொரு குதிரையில் ஏறிக் கொண்டோம். எனது குதிரை மிகவும் அமைதியாகச் சென்றுகொண்டிருந்தது.

ஆனால் என் மனைவி சென்ற குதிரை மிகவும் குறும்புத் தனமானதாக இருந்தது. திடீரென ஒரு துள்ளலில் என் மனைவியை அது கீழே தள்ளியது. அவள் கீழே இருந்து எழுந்து சுதாகரித்துக்கெண்டு அந்தக் குதிரையின் மீது மீண்டும் ஏறி அமர்ந்துகொண்டு " இதுதான் உனக்கு முதல்முறை " என்று அமைதியாகக் கூறினாள். சிறிது தூரம் சென்றதும் அந்தக் குதிரை மீண்டும் அவ்வாறே செய்தது. அப்போதும் என் மனைவி மிக அமைதியாக எழுந்து குதிரையின் மீது அமர்ந்து கொண்டு " இதுதான் உனக்கு இரண்டாம் முறை " என்று கூறியவாறு பயணிக்கத் தொடங்கினாள்.

மூன்றாம் முறையும் குதிரை அவ்வாறே செய்தது. அவள் கோபம் அடைந்து வேகமாகத் தனது கைத்துப்பாக்கியை எடுத்து சுட்டுக் கொன்றுவிட்டாள். இதைக்கண்டு அதிர்ச்சியடைந்த நான் அவளைத் திட்டினேன். "ஏன் இப்படிச் செய்தாய்?..நீ ஒரு முட்டாள்?.. ஒரு விலங்கைக் கொன்றுவிட்டாயே?.. அறிவில்லையா?.. என்று கேட்டான்.

அவள் மிகவும் அமைதியாக என்னைப் பார்த்து " இதுதான் உங்களுக்கு முதல் முறை " என்றாள். " பிறகென்ன...இப்பொழுது எல்லாம் எங்களது வாழ்க்கை மிகவும் அமைதியாகச் சென்று கொண்டிருக்கின்றது " என்றார் கணவர்!..

# பெண்களுக்கு மிகவும் கடினமான வயது..

21 - 25 வயது (திருமணத்துக்கு முன்)

1) காத்திருக்கச் சொல்லும் காதலனின் முகம் பார்ப்பதா இல்லை, கை காட்டுபவனுக்கு கழுத்தை நீட்டச் சொல்லும் தந்தையின் சொல் கேட்பதா என்ற மனப் போராட்டத்தில் இருப்பீர்கள்.
2) வேலை தேடி அலையும் போதும், பெண்களெல்லாம் கல்யாண பத்திரிகையில் போட்டுக்கொள்ளத்தானே பட்டம் வாங்கினீர்கள் என்று நகைக்கும் ஆண்களையும் ஒற்றைப் புன்னகை சிந்தி கடந்து செல்வீர்கள்.
3) மல்லிகை பூவையும், கண்ணாடி வளையலையும், சுடிதாரையுமே அதிகம் விரும்பினாலும், வேலைக்கென ஒரு வேடம் போட்டுக்கொள்வீர்கள்.
4) பேசாவிட்டால், "உம்மனாமுஞ்சி" என்று பெயர் எடுப்பீர்கள். கொஞ்சம் மனதில் பட்டதை வெளிப்படையாக பேசிவிட்டாலும், படித்த திமிர் என்ற பட்டம் வாங்குவீர்கள்.
5) சமையலறை பக்கம் கூட சென்று இருக்கமாட்டீர்கள். இப்போது மெல்ல மெல்ல எல்லாம் கற்றுக்கொள்ள ஆரம்பித்திருப்பீர்கள்.
6) முகப்பருக்களை கிள்ளுவதையே பகுதி நேர வேலையாக வைத்திருப்பீர்கள்.
7) ஊரைப் பிரிந்து ஏதோ ஒரு பெண்கள் விடுதியில், ஆயிரம் பெண்கள் சூழ்ந்திருக்கையிலும், தனிமையில் இருப்பதாய் உணர்வீர்கள்.
8) அடிக்கடி "ச்சே ஊரா இது எங்க ஊரெல்லாம் எப்படி இருக்கும் தெரியுமா" என்ற வசனத்தை யாரிடமாவது சொல்லிக்கொண்டே இருப்பீர்கள்.
9) சொந்தங்கள் சேர்ந்த சுப நிகழ்ச்சிகளில் மாமாக்கள் எல்லாம் கல்யாணம் எப்பன்னு கேட்டா, அத்தைமார்கள் எல்லாம் எத்தனை பவுண் சேர்த்து வச்சுருக்கீங்கன்னு கேட்பார்கள்.
10) அம்மாவையும் அப்பாவையும் உங்கள் இரு சக்கர வண்டியில் ஏற்றிச் செல்ல ஆரம்பித்திருப்பீர்கள்.
11) புதிதாய் செல்லும் இடங்களில் மனதில் இருக்கும் பயம் கண்களில் தெரியக்கூடாது என்பதில் மிகவும் கவனமாய் இருப்பீர்கள். ஒரு ஆணைப் போல் நடந்துகொள்ள முடிந்தளவு முயற்சி செய்வீர்கள்.
12) வெளியில் சென்று வீடு திரும்பியதும், பேருந்தில் இடிபட்டதையும், மொபைல் நம்பர் கேட்டு பின்னால் வந்த ஆணை பற்றியும் வீட்டில் மூச்சு விடமாட்டீர்கள். தேவையற்ற பயத்தை அவர்களுக்கு தரவேண்டாம் என எண்ணுவீர்கள்.
13) உங்களுக்கென ஒரு கனவு உண்டா என்பதை சுற்றி இருக்கும் யாரேனும் கேட்க மாட்டார்களா என ஏங்குவீர்கள்.
14) எதையும் எதிர்கொள்ளும் துணிச்சலும் நம்பிக்கையும் நிறைந்து இருக்கும்.
15) எத்தனை சோகம் கண்ட போதிலும், பெண்ணாய் பிறந்ததற்காக பெருமை கொள்வீர்கள்.
16) அப்பா அதட்டி ஒரு சொல் சொல்லிவிட்டால் கலங்கிடும் கண்கள், அலுவலகத்தில் யார் முன்போ திட்டு வாங்கிவிட்டால் கூட கொஞ்சமும் கலங்காது. அழுதால் அதற்கும் இந்த உலகம் "நீலிக்கண்ணீர்" என்றொரு பெயர் வைக்கும் என்பதை புரிந்திருப்பீர்கள்.

# விளக்கேற்றப் போட்டி: முல்லையில் கண்ணீர் கதை!...



கோவில்களில் விளக்கேற்றுவதிலிருந்து நினைவேந்தலில் விளக்கு கொழுத்துவதற்கு தமிழ் அரசியல்வாதிகள் முட்டி மோதி போராடிவருகின்ற நிலையில் இறுதி யுத்தத்தில் போரடிய போராளியொருவது தற்போதைய வாழ்வியலை அம்பலப்படுத்தியுள்ளார்.

கொளுத்தும் வெயிலின் கீழ், 44 வயதான தமிழர் ஒருவர், கடலை வயலைப் பராமரித்து வருகிறார். 2009 ஆம் ஆண்டு வான்வழித் தாக்குதலில் அவரது இரு கால்களையும் எடுத்து, இடது கையில் காயம் ஏற்பட்டதால், அவர் கைகளில் மட்டுமே நடமாட முடிந்தது.2009 ஆம் ஆண்டு வான்வழித் தாக்குதல் இலங்கை அரசாங்கத்திற்கும் சுதந்திர தமிழ் தேசத்திற்காகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான 26 வருட உள்நாட்டுப் போரின் கடைசிக் கட்டத்தில் இருந்தது.


முல்லைத்தீவின் வடக்கு கரையோர மாவட்டத்தின் பெரும்பாலான தமிழ் மக்கள் போரின் இறுதித் தாக்குதலால் அழிக்கப்பட்டனர், இன்றைய பொருளாதார நெருக்கடி இரண்டாவது அடியாக வந்துள்ளது.பல குடியிருப்பாளர்கள் தினசரி கூலிகளாக வேலை செய்கிறார்கள், ஆனால் அவரால் முடியவில்லை."நான் தினசரி கூலி வேலைக்குப் போனால், யாரும் என்னை வேலைக்கு அமர்த்த மாட்டார்கள், நாமும் இப்படிப் போய் வேலை செய்ய முடியாது, இல்லையா?" அவர் கேட்டார்.

அவர் பொருளாதார நெருக்கடிக்கு முன்னர் ஒரு மீனவராக பணியாற்றினார் - 70 ஆண்டுகளில் இலங்கையின் மோசமான - எரிபொருள் விநியோகம் வற்றியது, பணம் சம்பாதிப்பதற்காக அவரை கடலை விவசாயத்திற்கு மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது."நம்முடைய பசியை நாமே கட்டுப்படுத்த வேண்டியிருந்தாலும், நம் குழந்தைகளிடம் நாம் சொல்ல முடியாது: "பார் குழந்தை, சாப்பிடுவதற்கு இதுவே இருக்கிறது, இப்போது படுக்கைக்குச் செல்லுங்கள்," என்று சொல்ல முடியுமா?" அவன் சொன்னான்.

உணவுவிலை ஏற்றம் தட்டுப்பாடு பல மடங்கு எட்டியதால், ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்பினால் உணவுப் பாதுகாப்பற்றவர்கள் என மதிப்பிடப்பட்ட 6.2 மில்லியன் இலங்கையர்களில் அவரது குடும்பமும் அடங்கும்.

## 16ம் பக்க கணக்கு, படத்திற்குள் ஒளிந்திருக்கும் உருவத்தைக் கண்டுபிடித்தல்..முடிவுகள்...

| | | | | |
|---|---|---|---|---|
| 32 | 15 | 11 | 30 | 12 |
| 28 | 8 | 18 | 29 | 17 |
| 14 | 31 | 24 | 9 | 22 |
| 16 | 25 | 20 | 13 | 26 |
| 10 | 21 | 27 | 19 | 23 |



## " பு " களின் சிறப்பு...

கண்ணிலே பூக்கும் பு கணிப்பு
கல்லிலே பூக்கும் பு படைப்பு
கடல்நீரிலே பூக்கும் பு உப்பு
கடமையில் பூக்கும் பு பொறுப்பு
முகத்திலே பூக்கும் பு சிரிப்பு
மூளையிலே மலரும் பு நினைப்பு
பாசத்தில் பூக்கும் பு பிணைப்பு
பகைவரிடம் பூக்கும் பு எதிர்ப்பு
பள்ளியிலே மலரும் பு படிப்பு
படித்ததிலே தேடும் பு வாய்ப்பு
நல்லவரிடம் பூக்கும் பு மதிப்பு
நண்பர்களிடம் பூக்கும் பு நட்பு
சோம்பலிலே வரும் பு சலிப்பு
சோதனையில் வரும் பு தவிப்பு
சாதனையில் வரும் பு செழிப்பு
பாதத்தில் அணியும் பு செருப்பு
உழைப்பால் வரும் பு தெம்பு
வாய்க்கொழுப்பால் வரும் பு வம்பு
உறவினரிடம் இருக்கும் பு உகப்பு
மருந்துக் குணமுள்ள பு வேம்பு
முகத்தைச் சுழிக்கும் பு புளிப்பு

பாகற்காயிலுள்ள பு கசப்பு
சீனியிலுள்ள பு இனிப்பு
நிறங்களில் ஒரு பு கறுப்பு
ரசனை ஊட்டும் பு நடிப்பு
மனக்கசப்பால் வரும் பு வெறுப்பு
தித்திக்கும் பு இனிப்பு
இளமையில் வரும் பு துடிப்பு
கற்கவேண்டிய பு படிப்பு
சந்தோசத்தால் வரும் பு களிப்பு
சிலருக்குக் கிட்டும் பு வாய்ப்பு
குலையாமல் இருக்கும் பு மடிப்பு
மரணத்தால் வரும் பு இழப்பு
வேலையால் வரும் பு களைப்பு
அன்பால் வரும் பு அணைப்பு
அறிவால் வரும் பு விழிப்பு
உலகத்திலே உயர்ந்த பு அன்பு

(இன்னும் பல தமிழ்ச் சொற்கள் உள்ளன)

# நான்தான்!... மதவடி மயிலன்!...



நான்தான் மதவடியான் மீண்டும் வந்திருக்கிறன்...வணக்கம்!... வணக்கம்!... எல்லாரும் சுகம் என்று நினைக்க..கோதாரிப்போன கொரோனா வந்து லட்சக்கணக்கானவர்களை தின்று விழுங்கியது மறக்கமுடியாத கவலைதான் பாருங்கோ.

கவலை. . உங்களில் எத்தனைபேருக்கு இந்தக்கவலை வந்ததோ யான் அறியேன் பலருக்கு கவலை வராது ஏனென்றால் இந்த அழிவு எங்கட நாட்டில பெரிதளவு வரவில்லைத்தானே?.. .

நம்மட நாட்டில அரசியல் குழப்பங்கள் முட்டி மோதி எங்கும் எப்போதும் பிரச்சனை..பிரச்சனை என்றே மக்கள் படும்பாடு அல்லோல கல்லோலம்தான். பாராளுமன்றக் கதிரைகளையும் உள்ளூராட்சிமன்றக் கதிரைகளையும் பிடித்து சொகுசுவாழ்வு வாழ எத்தனைப்பேர் வாக்களார்களைவிட வேட்பாளர்கள் கூடப்பேர் கண்டியளோ. அந்தளவுக்கு கதிரைச் சண்டை முற்றிவிட்டது. யாராவது நாட்டின் பொருளாதாரத்துக்கு நல்ல தீர்வை வைப்பார்கள் என்றால் இதுகிடையாது பாருங்கோவன்.

நம்மட அரசியல் வாதிகளும் நாளுக்குநாள் பல பிரச்சனைகளைகிழப்பி அரசைக் கலைக்கலாம் என கங்கணம் கட்டினாலும் ஒன்றுமே முடியாது தாம் நினைத்தபடிதான் நடக்கும் என அரசதரப்பு தெரிவித்தவண்ணமே உள்ளது. இப்படியாக ஜனநாயக நாடு என்று சொல்லப்படும் அழகான நாட்டில் இனவாதம், மதவாதம் தலைதூக்கி ஆடும்வரை ஒருவரும் ஒன்றுமே செய்யமுடியாது. புத்தர் உயிருடன் மீண்டு வந்தாலும் அதே கதிதான் பாருங்கோ..

சரி..சரி..இனி விடையத்துக்கு வருவம். கோடை விடுமுறையும் உலகநாடுகளில் ஆரம்பித்துவிட்டது. குறிப்பாக இலங்கைத் தமிழர் பலர் தாயகம் சென்றுவிட்டனர். சிலர் போவதற்கு ஆயத்தம். எப்படியும் வருகிறமாதம் ஊரில் கூத்தும் கும்மாளத்திற்கும் குறைவிருக்காது பாருங்கோ. இந்த மயிலனும் போக எண்ணி ஒருவனிடம் சீட்டுப் போட்டான். துலைந்துபோவான் குறுக்கால அழிவான் என்ர சீட்டுக்காசையும் சுத்திக்கொண்டு தலைமறைவாகிவிட்டான். சீட்டுக்காசும் அம்போ..என்ர சுற்றுலாவும் அம்போ..சரி அவனைக் கண்டு பிடித்து கிடைப்பதை வேண்டி சுற்றுலா செய்வதை அடுத்தவருடம் பார்ப்பம்...

இனி ஊருக்குப் போனால் கோவில் திருவிழாக்கள் எல்லாம் களைகட்டும். விழுந்து உருண்டு வழிபடுவது மட்டுமல்ல வெளிநாடுகளில் இருந்து ஊருக்குப் போனவேயின் அட்டகாசங்களையும் காணலாம்.

ஒன்றா இரண்டா... பல கூத்து கும்மாளம் இளசுகள் பெரிசுகளின் அட்டகாசம். அதுவும் பெண்களின் அட்டகாசம் சொல்லவே முடியாது. அங்கே உணவு இல்லாமல் உடையில்லாமல் வீடில்லாமல் பிள்ளகளை யுத்தத்தில் பறிகொடுத்து கண்ணீருடன் மக்கள் படும் துயரைக் கண்டுகொள்ளாமல் பவுணுக்குமேல பவுண் அடுக்கிக் கொண்டு நாளுக்கு ஒரு நவநாகரீக அரை குறை உடைகளை அணிந்து கொண்டு பந்தாகாட்டுவார்கள். தாமும் கெட்டு அங்குள்ளவர்களையும் கெடுக்கும் செயல்தான் பாருங்கோ..

வெளிநாடுகளில் இருந்துபோய் சாமத்தியவீடு, கலயாண வீடு, வீடுகுடிபுகிர்தல், பிறந்தநாள் கொண்டாட்டம் இவை அனைத்தும் ஒரு நாளில் முடிவதில்லை. மூன்று நான்கு நாட்கள் சில வீடுகளில் ஒரு கிழமையாகவும் தொடர் கொண்டாட்டம்தான். ஆடு, மாடு, கோழி என வெளிநாட்டுக் குடிவகைகள் என கொண்டாட்டம் களைகட்டும் வெளிநாட்டுக் காசு செய்கிற வேலையால பாருங்கோ அளவுக்கு மிஞ்சி ஏதோ.. ஏதோ எல்லாம் நடக்குது பாருங்கோ.

வெளிநாட்டிலிருந்து போனவர்கள் பேஸ்புக்கில் படம்பிடித்துப் போடுவதை ஒரு தொழிலாகவும் கொண்டுள்ளனர். வான் பிடித்து நட்புகளை, சொந்தங்களையும் அழைத்துக் கொண்டுபோய் கடற்கரைகளில் மீன்சுட்டு, தண்ணியடித்து நீந்தி விளையாடி போட்டோக்கள் எடுத்து ஒரே அமர்க்களம்தான்.

இன்னும் பலர் அந்தவிழா, இந்தவிழா என எடுத்து தங்கட பெயரையும் புகழையும் பரப்பி, பொன்னாடை, பூ மாலைகள் என ஒரே கொண்டாட்டம். ஒரு சிலர் நல்ல காரியங்களைச் சிக்கனமாகச் செய்கிறார்கள் உண்மையில் அவர்களைப் பாராட்ட வேண்டும் பாருங்கோ. ஏழைகளுக்கு வீடு கட்டிக் கொடுத்தல் உணவளித்தல் உடுபிடவைகள் வேண்டிக் கொடுத்தல் பாடசாலை மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவுதல் போன்ற நல்லகாரியங்களில் ஈடுபடுபவர்களை இந்த மயிலன் எப்போதும் பாராட்டுவான் . இது உண்மை.

அடுத்தது பாருங்கோ இப்ப கொண்டாட்டங்களுக்கு சென்னை மற்றும் கேரளாவுக்குச் சென்று உடைகள் வேண்டிவருகினம். இப்ப பலாலியிலிருந்து அடிக்கடி பிளேன் ஓடுவதால அதுவும் புலம்பெயர் தமிழர்களுக்கு மட்டுமல்ல அங்குள்ள பணக்காரத்தமிழர்களுக்கும் நல்ல வசதி கண்டியளோ. இது மட்டுமா?.. இப்ப கொண்டாட்டங்களுக்கு கேரளாவிலிருந்து யானை, பாட்டுக் கோஸ்டி, டான்ஸ் கோஸ்டி எல்லாம் இறக்குமதி செய்து ஊர்வலம் வந்து பெரும் எடுப்பில் கொண்டாட்டம் களைகட்டுவதற்கு இந்த வெளிநாட்டுப் பணம்தான் காரணம் பாருங்கோ!..

இனி தமிழ்ப் பகுதிகளிலுள்ள கோவில்கள் சொல்ல முடியாத செலவுகள் கண்கொண்டு பார்க்க முடியாத கோபுரங்கள் கட்டப்பட்டு அதுவும் அழகான நல்ல கோபுரங்களை உடைத்துப் போட்டிக்குக் கட்டித் தமது பெருமையையும் புகழையும் நிலைநாட்டுவதில் பல ஆயிரம் பக்தர்கள். இந்தப் பக்தர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கைத்தொழிற்சாலையைப் போட்டால் பலருக்கு வேலை கிடைக்கும். வறுமை இல்லாமல் போகும் நாட்டில்

பஞ்சம் பசி ஒழியும் நாடும் முன்னேறும். இதை யார்தான் சிந்திப்பார்கள். எல்லாம் ஆடம்பரமும் வேடிக்கையுமாக உலகம் மாறிவிட்டது. இந்த மயிலனைப் போல ஆயிரம்பேர் கத்தினாலும் யாராவது ஒருவன் சிந்திப்பானா?..

ஊரில் வெளிநாட்டு காசு படுத்தும் பாடு? யுத்தம் முடிந்து பாதுகாப்பாக ஊர் திரும்பும் புலம்பெயர் உறவுகள் சில மீண்டும் அலப்பறைகளில் ஈடுபட்டுள்ளன.ஏட்டிக்கு போட்டியாக தாம் நடத்திய திருவிழா ஒன்றில் பறக்கவிட்ட உலங்கு வான் ஊர்தி தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள ஒருவர்:ஈழத்தில்அமைந்துள்ளகோயி லொன்றினஅந்தக்கோயிலுக்குசென் றிருந்த ஆயிரக்கணக்கான மக்கள் கோயிலின்வெளியே நின்று வே டிக்கைபார்த்துக்கொண்டிருக்கிறா ர்கள் அவர்களுக்கு மேலாகவும் கோயிலுக்குமேலாகவும்

தாழ்வாகப்பறந்தபடிஹெலிக்கொப் டரில் இருப்போர் பூக்களைத் தூ வுகிறார்கள் அது அவர்களின் நம்பிக்கை அதைப்பற்றிக் கவலை யில்லை ஆனால் ஆயிரக் கணக்கான மக்களுக்குமேலே பறந்து கொண்டிருக்கும் அந்தக் ஹெலிக்கொடருக்கு அருகே யாரோ ஒருவரின் ட்ரோன் ஒன்று சுற்றிச்சுழன்றுகொண்டிருக்கின்றது. இது எப்பேற்பட்ட அபாயத்தை ஏற்படுத்தும் என்பதைக்கூடப் புரிந்துகொள்ளும் திறமையில்லாமல் மனிதர்கள் கும்பிட்டுக்கொண்டு நிற்கிறார்கள்.

ட்ரோன்கள் தவறுதலாக ஹெலிக்கொடரில் மோதும்பட்சத்தில் அது வெடித்துச்சிதறி மிகப்பெரும் அழிவை அந்தச்சூழலிலும் அதில் பறப்பவர்களுக்கும் ஏற்படுத்திவிடும் இதனால்தான் ட்ரோன்கள் விமானங்கள் இறங்கும் ஏறும் விமான நிலையங்களுக்கு அருகிலும் ஹெலிக்கொப்டர்கள் இறங்கி ஏறும் வைத்திய சாலைத்தளங்கள் மற்றும் உயர்ந்த கட்டடங்களுக்கு அருகிலும் மக்கள் கூட்டமாக இருக்கும் இடங்களுக்கு மேலேயும் பறப்பது மேற்குலகில் தடைசெய்யப்பட்டுள்ளது, இந்த அபாயத்தை இனியாவது ட்ரோன் பிரியர்கள் புரிந்துகொள்ளுங்கள்.

இனிவருங்காலத்தில் நீங்கள் கோயில்களுக்கு ஹெலியில் சென்று பூக்கள் தூவுங்கள் ஏன் தங்கக்கட்டிகளைக் கொண்டு சென்று கொட்டுங்கள் ஆனால் ட்ரோன்கள் பறப்பதை அனுமதியாதீர்கள் அப்படியில்லாது அனுமதித்தீர்களானால் நீங்கள் ஹெலிக்கு செலவழித்ததைப் பற்றியும் கொட்டிய பூவைப்பற்றியும் பெருமிதமாகக் கூறுவதற்கு அதைப்பார்க்க முண்டியடிக்க யாரும் இருக்க மாட்டார்கள் ,உங்களின் தேவையற்ற பக்தி உங்களின் புத்தியை மந்தமடையச் செய்யும் என்பதைப் புரிந்து செயற்படுங்கள்.

இறைபக்தி ஒவ்வொருமனிதனுக்கும் அவசியம்தான். அதற்காக மூடநம்பிக்கையில் மூழ்கி முத்தெடுக்க நினைக்கக்கூடாது. கொஞ்சம் பகுத்தறிவோடு சிந்தியுங்கோ செயற்படுங்கோ ராசாக்கள் ராசாத்திகள். ஆடம்பரங்களைக் குறையுங்கள்.. ஆட்களைப் பற்றிச் சிந்தியுங்கள். அப்ப வரப்போறன்..அடுத்துமுறையும் ஏதோ ஒரு விசயத்தோட இந்த மயிலன் வருவான்!.. அப் வாறன்!..

# சிறுவர் குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | |
|---|---|---|---|
| பா | ட | சா | லை |
| பி | ஆ | டி | ஆ |
| ப் | மை | ண் | உ |
| கொ | கா | க | ம் |

# குறுக்கெழுத்துப்போட்டி முடிவு

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கோ | டை | கா | ல | ம் | க | கா |
| ணே | ட் | வ | ட் | ட | ம் | கி |
| ஸ் | ப | ட் | டு | ட் | பா | த |
| வ | ல் | லா | ரை | ம் | யா | ம் |
| ர | தி | க | தி | த | ச | ட |
| ம் | த் | த் | த் | ர | ம் | ட் |
| மா | சி | தி | சி | பா | ப் | ப |

# சுடோக்கோ போட்டி முடிவு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 2 | 9 | 1 | **7** | 8 | **3** | 5 | **6** |
| 8 | 6 | 5 | 3 | **4** | **9** | **7** | **2** | 1 |
| **1** | 7 | 3 | **2** | 5 | 6 | 9 | **4** | 8 |
| 6 | 1 | **7** | 8 | 3 | 2 | 4 | 9 | 5 |
| 9 | 3 | 2 | **5** | 6 | **4** | 1 | **8** | 7 |
| 5 | **8** | **4** | 9 | 1 | 7 | 2 | **6** | 3 |
| **3** | 9 | 8 | 7 | 2 | **5** | 6 | 1 | **4** |
| **2** | 4 | 1 | 6 | **8** | 3 | 5 | **7** | 9 |
| 7 | 5 | **6** | 4 | 9 | **1** | 8 | 3 | 2 |

# துரித உணவுகள் எவ்வாறான தீமைகளை உண்டாக்கும் ?




துரித உணவுகள் பற்றியும் அவை குழந்தைகளுக்கு உண்டாக்கும் தீமைகள் பற்றியும் தெரிந்து கொள்வோம்!

**துரித உணவுகள் எவை?**

உடல் இயக்கத்திற்கான மூன்று வேளை உணவு போக, கூடுதலாக உட்கொள்ளும் உணவுகளும், ஸ்நாக்ஸ் எனப்படும் தின்பண்டங்களும் ”துரித”உணவுகள் பட்டியலில்தான் வருகிறது. குறிப்பாக ஆவியில் வேகவைத்தது தவிர, எண்ணெய்யில் பொரிப்பது, டின்களில் அடைத்து வைத்திருப்பது, பொதி செய்த உணவுகள், இனிப்பு சொக்லேட்டுகள் இவற்றுடன் அவசர கதியில் சமைக்கும் உணவுகள் போன்றவை எல்லாம் ”துரித உணவுகள்” வகையில்-தான் வருகிறது. குறிப்பாக நூடுல்ஸ், பீட்சா, ஃபிரைடு ரைஸ், நொடி பொழுதில் தயாராகும் அசைவ உணவுகள், சிப்ஸ் உணவுகள்... எல்லாம் துரித உணவுகள் ரகம்தான்.

**துரித உணவுகள் உண்டாக்கும் விளைவுகள்..**

துரித உணவுகளை அதிகம் உட்கொள்வதால், மூளையில் வேதியியல் மாற்றம் ஏற்பட்டு மன அழுத்தம், பதற்றம், உடற்பருமன் போன்றவை ஏற்படு-கிறதாம். இந்த வகை உணவுகள் கொழுப்புச்சத்து அதிகம் கொண்டவை. குழந்தைகளுக்கு கற்றல் குறைபாடு, மறதி, விழிப்பு நிலை குறைபாடு, புலன் உணர்வு செயல்பாட்டில் மந்தம் ஆகியவையும் ஏற்படுகின்றன.

குறிப்பாக உடற்பருமனில் தொடங்கி, எல்லா வகையான வியாதிகளுக்கு வழிவகை செய்கின்றன. சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், சில வகை துரித உணவுகளை உட்கொள்வதால் குழந்தைகளின் அறிவு மழுங்குகிறது எனவும், மறதி அதிகரிக்கிறது எனவும் தெரியவந்துள்ளது. இனிப்பு பதார்த்தங்-கள், பல வியாதிகளை உடலுக்கு கொண்டு வருகின்றன. இனிப்பை தொடர்ந்து அதிகமாக எடுத்துக் கொள்பவர்களுக்கு, நரம்பியல் கோளாறுகளும் ஏற்படுகிறது. அதனால் பாக்கெட்டில் அடைக்கப்பட்ட பண்டங்கள், இனிப்புகள், செயற்கை ஜூஸ் வகைகளையும் தவிர்ப்பது நலம். பாக்கெட் உணவுகள் வறுத்த உணவு

வகைகளில் சுவைக்காக செயற்கை பொருட்கள், இரசாயனம், உணவுக்கு நிற-மேற்ற சாயப் பொருட்கள் ஆகியவை சேர்க்கப்படுகின்றன. இதனால் குழந்தைகள், பெரியவர்களுக்கு பழக்கவழக்கத்தில் மாற்றம் ஏற்படுகிறது.

வறுப்பதற்காக பயன்படுத்தப்படும் சில எண்ணெய் வகைகள் நச்-சுத்தன்மை வாய்ந்தவை. அதேபோல பதப்படுத்தப்பட்ட உணவுகள், ஏற்கனவே சமைக்கப்பட்டு பாக்கெட்டுகளில் அடைக்கப்படுகின்றன. வறுத்த உணவுகளால் ஏற்படும் அனைத்து பாதிப்புகளும் இந்த மாதிரியான பாக்கெட் உணவுகளிலும் ஏற்படுகின்றன. இந்த வகை உணவுகள் உடலின் நரம்பு மண்டலத்தை பாதிக்கின்றன. இதனால் அல்சீமர்ஸ் போன்ற மறதி நோய்களும் ஏற்பட வாய்ப்புள்ளது.

அவசர உலகில் பாக்கெட் உணவுகளை பயன்படுத்துவது அதிகரித்து வருகிறது. இதனை தவிர்த்து ஆரோக்கியமான உணவுகளை உண்ண வேண்-டும். மூன்று வேளை உணவு போக, கூடுதலாக உட்கொள்ளும் உணவுகளும், ஸ்நாக்ஸ் எனப்படும் தின்பண்டங்களும் ”துரித உணவுகள்” பட்டியலில்தான் வருகிறது.

................................................................................................................................................

## நமது உடல் பற்றியது..

- மனித முகத்தில் 14 எலும்புகள் உள்ளன.
- மனித மூளையில் 6 கிராம் அளவிற்கு தாமிரம் உள்ளது.
- ஒரு மனிதனின் உடலிலுள்ள நரம்புகளின் மொத்த நீளம் சுமார் 72 மீட்டர்.
- மனித உடலில் மிகவும் பலமான பகுதி, விரல் நகங்களே. நம் நகங்களில் கெராடின் சத்து உள்ளது. இது காண்டாமிருகத்தின் கொம்புகளில் காணப் படுவது.
- மரணத்திற்குப் பிறகும் கூட நகங்கள் சிதைவதில்லை.
- நமது ரத்தம் ஒரு நாளில் 60 ஆயிரம் மைல் தூரம் பயணம் செய்கிறது.
- நுரையீரல் ஒரு நாளைக்கு 23,040 முறைகள் சுவாசத்தை உள்ளெடுத்து வெளிச்செலுத்துகிறது.
- ஒரு சராசரி மனிதனின் உடலில் ஓடும் ரத்தத்தின் அளவு 5 லிட்டர்.
- கைரேகையைப் போலவே நாக்கில் உள்ள வரிகளும் ஒவ்வொருவருக்கும் வேறுபடும்.
- மனித உடலில் சதை அழுத்தம் அதிகம் உள்ள பகுதி நாக்கு.
- 900 பென்சில்களைத் தயாரிக்கும் அளவிற்கு மனித உடலில் கார்பன் சத்து இருக்கிறது.
- கண் தானத்தில் கருவிழிகள் மட்டுமே அடுத்தவருக்குப் பொருத்தப்படுகின்றன.

# அம்பிள் சாப்பிடலாமா?...



சர்க்கரை நோயாளிகள் இந்த பழங்களை சாப்பிடலாமா? கண்டிப்பா தெரிந்து கொள்ளுங்கள்..

ஆப்பிள் என்பது நமது ஆரோக்கியத்திற்கு மிகவும் நன்மை பயக்கும் ஒரு பழமாகும். உலகம் முழுவதும் அதிகம் சாப்பிடப்படும் பழங்களில் ஒன்றாக ஆப்பிள் உள்ளது. அதன் தனிச்சிறப்பு வாய்ந்த பண்புகளின் காரணமாக இது ஒரு மேஜிகல் பழம் என்றும் அழைக்கப்படுகிறது.

இதில் போதுமான அளவு ஆன்டி ஆக்ஸிடன்ட்கள் மற்றும் நோய் எதிர்ப்பு கூறுகள் உள்ளன. சிலர் நீரிழிவு நோயாளிகள் ஆப்பிள் சாப்பிட்டால் சர்க்கரை அளவு அதிகரிக்கும் என்று கூறுவது உண்டு. இது உண்மையா என்பது குறித்து பார்க்கலாம் வாங்க..

நன்மைகள்:-

ஆப்பிளில் பல நன்மைகள் காணப்படுகின்றன. இவை உடலில் புதிய செல்கள் உருவாவதை ஊக்குவிக்கின்றன. சர்க்கரை நோய் அபாயத்தைக் குறைப்பதில் ஆப்பிள் நன்மை பயக்கும். மேலும் இது உடலில் இரத்த சர்க்கரை அளவையும் கட்டுப்படுத்தும் என்று மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

பெக்டின் போன்ற நன்மை பயக்கும் நார்ச்சத்து ஆப்பிளில் உள்ளது. தினமும் ஒரு ஆப்பிளை சாப்பிட்டால் புற்றுநோய், உயர் இரத்த அழுத்தம், சர்க்கரை நோய் மற்றும் இதயம் தொடர்பான நோய்கள் ஏற்படும் அபாயத்தை குறைக்கின்றது.

ஆப்பிளில் உடலுக்கு தேவையான வைட்டமின் சி சீரான அளவில் உள்ளது. இதனுடன் இரும்புச்சத்தும் இதில் அதிகமாக காணப்படுகின்றன. இவை அனைத்தும் இணைந்தால் எலும்புகளுக்கு பலம் கிடைக்கும்.

ஆப்பிளில் இரும்பு சத்து அதிகமாக உள்ளதால் ரத்த சோகை வராமல் தடுக்க உதவியாக இருக்கின்றது. ஆகவே ரத்த சோகையால் பாதிக்கப்பட்டவர்கள் தினமும் ஒரு ஆப்பிளை தாராளமாக சாப்பிட்டு வரலாம்.

# இஞ்சியின் பயன்பாடு...




30 நாட்கள் இஞ்சியை எடுத்துக்கொண்டால் நடக்கும் அற்புதம்: பலருக்கும் தெரியாத ரகசியம்

பொதுவாக இஞ்சி ஒரு சிறந்த மருத்துவ குணம் கொண்டுள்ள உணவுப் பொருள். நாம் அன்றாடம் சேர்த்துக் கொள்ள உணவுப் பொருட்களில் இஞ்சி முதன்மையானது. ஏனெனில் இது உடலில் கொழுப்பு சேராமல் இருக்கவும், செரிமானம் சிறக்கவும், இரத்தம் ஆரோக்கியமாக இருக்கவும், உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கவும் உதவுகிறது. இதனை அன்றாடம் உணவில் சேர்த்து கொண்டால் உடலுக்கு கிடைக்கும் நன்மைகள் என்ன என்பதை தெரிந்து கொள்வோம்.

30 நாட்கள் தினமும் இஞ்சியை உணவில் சேர்த்து உண்டு வருவதால் உங்கள் உடலில் உள்ள ஜி.ஐ குழாய் சீராக நலன் பெற்று புத்துணர்ச்சி அடையும். எனவே வெறும் 1.2 கிராம் அளவு இஞ்சியை ஒரு மாத காலம் உட்கொண்டு வந்தாலே 50 வீதம் செரிமான பிரச்சனைகளுக்கு தீர்வுக் காண முடியும். குமட்டல் பிரச்சனை உள்ளவர்கள் இஞ்சி டீ அல்லது இஞ்சியை அப்படியே சாப்பிடுவது குமட்டலை தடுக்கும். மேலும், கர்ப்பகாலத்தில் பெண்களுக்கு உண்டாகும் காலை நேர உடல் சோர்வு அல்லது உடல்நலம் குன்றுதல் போன்றவற்றை சரி செய்யும். அதற்கு தினமும் 1.5 கிராம் அளவு இஞ்சியை சேர்த்து வந்தாலே போதுமானது.

அன்றாட உணவில் இஞ்சியை சிறிதளவு சேர்த்துக் உட்கொள்வது தசை வலிகளை 25வீதம் அளவு குறைக்க செய்கிறது. மேலும், பெண்களுக்கு மாதவிடாய் காலத்தில் உண்டாகும் வலியை குறைக்கவும் கூட பயனளிக்கிறது. நீரிழிவு நோயாளிகள் தினமும் 2 கிராம் அளவு இஞ்சியை உட்கொண்டு வந்தால் இரத்த சர்க்கரை அளவை வெகுவாக குறைக்க முடியும். மேலும், இது 10வீதம் வரை இதய நோய்கள் உண்டாகும் அபாயத்தையும் குறைக்கிறது.

கொலஸ்ட்ரால் பிரச்சனை இருப்பவர்கள் 45 நாட்கள் அன்றாட உணவு முறையில் 3 கிராம் அளவு இஞ்சியை சேர்த்து உண்டு வந்தால் கொலஸ்ட்ராலை கணிசமான அளவு குறைக்க முடியும்.தினமும் 2 கிராம் அளவு இஞ்சியை உணவில் சேர்த்துக் கொள்வது புற்றுநோய் கட்டியின் வளர்ச்சியை தடுக்கும்.இஞ்சியில் இருக்கும் ஆண்டி-ஆக்ஸிடன்ட்ஸ் மூளையின் செயற்திறனை ஊக்குவிக்கிறது. இப்படி மூளையின் ஆரோக்கியத்தை பலவகையில் ஊக்குவிக்கிறது இஞ்சி....



**”" டைக்டானிக்கைப்"" பார்க்கப்போன**
**"" டைக்டான்"" வெடித்துச் சிதறியதில்**
**பயணித்த 5 பேரும் பலியான துயர சம்பவம்...**

ஒருவருடைய பிரயாணக் கட்டணம் 2லட்சத்து 50 ஆயிரம்டொலர்களாகும்.
அட்லாண்டிக் பெருங்கடலில் 1912 வருடம் ஏப்ரல் மாதமு 15ம் திகதி பனிப்பாறையில் மோதுண்ட டைக்டானிக் கப்பல் விபத்தில் சுமார் 1.500 பயணிகள் பலியான துயர சம்பவம் 110 வருடங்களுக்கமுன் நிகழ்ந்து உலகை உருக்கிய சம்பவம் பலருக்கு நினைவிருக்கும்.
இப்போது அந்த"" டைக்டானிக் "" கப்பலைப் பார்வையிடச்சென்ற உல்லாசப்பயணிகள் நீர்மூழ்கிதான "" டைட்டான் "" கப்பல் விவகாரம். இந்த வாரம் உலகெங்கும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தின. பெரும் வல்லரசு நாடு, அணு விஞ்ஞானம் தொழில்நுட்பத் துறைகளில் கொடிகட்டிப் பறக்கும் நாடான அமெரிக்காவிற்கு இப்படி ஒரு சோக சம்பவம் நடைபெற்றிருக்கின்றது.
இந்த "" டைட்டான் "" கப்பலானது அமெரிக்க தனியார் நிறுவனத்தின் சொந்தமாகும். 6.7 மீட்டர் (22 அடி) நீளம், 2.8 மீட்டர் (9.2 அடி) அகலம் 2.5 மீடர் (8.3 அடி) உயரம் கொண்ட இந்த நீர்மூழ்கியின் சுற்றுலாப் பயணிகளை அழைத்துக் கொண்டு சென்ற வேளையிலேயே 18.06.2023 அன்று இந்த விபரீதம் நடைபெற்றிருக்கின்றது.
கனடாவிற்குச் சொந்தமான நியூபவுண்ட்லாந்துத் தீவிலிருந்து 600 கிலோ மிட்டர் தூரத்திலிலுள்ள அந்தியாந்திக் கடற்பரப்பிலே 3.800 மீட்டர் ஆழத்தில் இந்த நீர்மூழ்கி சென்றபோது கடும் அமுக்கத்தின் காரணமாக வெடித்துச் சிதறியதால் அதில் பயணித்த 5 பேரும் பலியான துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது. இதில் கோடீஸ்வரர்களான தந்தையும் மகனும் இறந்த பரிதாப சம்பவமும் நிகழ்ந்துள்ளது.

இறந்தவர்கள் விபரம்..

1 - பிரிட்டிஸ் வம்சாவழியைச் சேர்ந்த கோடீஸ்வரர் ஒருவர். (58 வயது)

2-3 - பாக்கிஸ்தான் வம்சாவழி கோடீஸ்வரர் தந்தையும் மகனும் (48வயது, 19 வயது)

4 - பிரான்ஸ் கோடீஸ்வரர் ஆய்வாளர். ( 77 வயது )

5- - அமெரிகர் நீர்மூழ்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி. ( 56 வயது ) இவர்தான் ""டைக்டான்"" நீர்மூழ்கியைத் தற்போது ஓட்டிச் சென்றவர்.

1912ம் ஆண்டில் விபத்தில் கடலில் பாழடைந்து கிடந்த டைக்டானிக்கைப் 33 தடவைகள் . இவர் நீர்மூழ்கிக் கப்பலில் சென்று பார்த்து வந்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இதில் பயணம் செய்த ஒவ்வொருவரும் 2.50.000 டொலர் பணம் செலுத்தியே பயணமானார்கள். இப்போ உயிரும் போய் காசும் போய், கோடீஸ்வரர் என்ற பெருமையும் போய் பூச்சியமாக மாறியுள்ளது.

இந்த "டைக்கான்" நிர்மூழ்கி சென்ற விடையத்தில் பல சர்ச்சைகள், குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன. பிழையான பயணம், அனுமதி பேறாத பயணம் என்றெல்லாம் நாளுக்குநாள் புதிய சர்ச்சசைகள் எழுந்த வண்ணம் உள்ளன. போன உயிர்கள் திரும்பி வருமா?..எல்லாம் பணம் செய்யும் வேலைதான்?.. "" அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சுதான்""

........................................................................................................................................

# இலங்கை பற்றிய தகவல்கள்...

1- இலங்கையை அதிககாலம் கைப்பற்றி வைத்திருந்து ஆட்சி செய்த வெளிநாட்டவர் - ஒல்லாந்தர் (நெதர்லாந்து)

2- இலங்கையை ஆண்ட இறுதி மன்னன் - சிறீ விக்கிரம ராஜசிங்கன்.

3- இலங்கையில் அதிக காலம் நிலைத்திருந்த இராசதானி - ஆநுராதபுரம்


4- இலங்கையின் முதல் மன்னன் - பண்டுகாபயன்

5- இலங்கையில் பௌத்த மதத்தைப் பரப்பியவர் - மகிந்த தேரர்.

6- இலங்கையில் பொன் நதி என்று அழைக்கப்படுவது - களனிகங்கை

7- இலங்கையின் முதல் பல்கலைக்கழகம் - பேராதனை (கண்டி)





**1- தமிழ் இரட்டையர்களின் உலக சாதனை..**
யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு காலிமுகத்திடல் வரையுள்ள 566 கி.மீ தூரத்தை 32 மணித்தியாலங்களில் நடந்து சென்று சாதனை நிகழ்த்தப்பட்டுள்ளது. இலங்கை போகந்தலாவை - கொட்டிலாக்கலை தோட்டத்தைச் சேர்ந்த மலையகத்தைப் பூர்வீகமாகக் கொண்ட இரட்டையர்களான ஆர்.ஏ.தயாபரன், ஆர்.ஏ.விக்னேஸ்வரன் ஆகிய இரட்டையர்கள் கடந்த 14.06.2023 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து காலை 6 மணிக்கு நடக்க ஆரம்பித்து அடுத்தநாள் 15.6.2023 பிற்பகல் 14-30 மணியளவில் காலிமுகத்திடலை அடைந்து உலகசாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்திருக்கிறார்கள். தூக்கமில்லாமல் தொடர் நடையால் இந்தச் சாதனை படைத்த சோடிகளை நாம் வாழ்த்துவோம்.

**2- இலங்கை இராணுவத்தின் கின்னஸ் சாதனை..**
இலங்கையின் நோயாளி ஒருவரின் சிறுநீரகத்துக்கு அருகில் உருவாகியிருந்த மிக நீளமான பெரிதான கல்லை அகற்றி இலங்கை இராணுவ வைத்தியர் குழு உலகசாதனைப் புத்தகத்தில் இடம்பிடித்துள்ளது. இதுவே உலக ரீதியில் சிறுநீரகத்தில் ஏற்பட்டிருந்த மிக விசாலமான கல் என்பதால் அதனை அகற்றியமை கின்னஸ் சாதனையாக இடம்பிடித்துள்ளது. அந்தக் கல் 13.372 செ.மீ நீளமும் 801 கிராம் நிறையும் கொண்டுள்ளது. உயிர் பிழைக்க வைத்துச் சாதனைபடைத்த இராணுவ வைத்தியர் குழுவினரைப் பாராட்டுவோம்.
கின்னஸ் உலக சாதனைப் பட்டியலில் இதற்கு முன்னர் மிகப்பெரிய சிறுநீரகக் கல் அகற்றப்பட்ட சம்பவம் 2004 ஆண்டில் இந்தியாவில் அகற்றப்பட்டது இதன் நீளம் 13 செ.மீட்டராகும். அதிக எடைகொண்ட சிறுநீரகக் கல் 2008ம் ஆண்டு பாக்கிஸ்தானில் ஒருவருக்கு அகற்றப்பட்டது. இக்கல் 620 கிராம் நிறையுடையது.

**3 நிமிடம் 16 செக்கனில் 195 நாடுகளின் பெயர்களைச் சொல்லிச் சாதனை..**நிகழ்த்தியுள்ளார் இலங்கை மலையகத்தைச் சேர்ந்த சிறுவன். உலக வரைபடத்திலுள்ள 195 நாடுகளின் அமைவிடங்களை அடையாளம்காட்டி அவற்றின் பெயர்களையும் தலைநகரங்களையும் 4 நிமிடம் 16 செக்கனில்கூறிச் சாதனை படைத்திருக்கிறார்.நுவரெலியா மாவட்டத்தில் வசிக்கும் ஹர்சித்தின் இந்தச் சாதனை நிகழ்வு கடந்த 18.06.2023 அன்று நுவரெலியாவில் நிகழ்த்தப்பட்டது. இந்தச் சிறுவனின் சாதனையை கொண்டாடும் முகமாக இச்சிறுவனை வாகனம் ஒன்றில் ஏற்றி நுவரெலியா பகுதிகள் எங்கும் ஊர்வலமாகக் கொண்டு சென்று மக்கள் மகிழ்ச்சி கொண்டாடினார்கள்.



## சிரி!...சிரி!....சிரிப்பு வருகிறதே!....

1- ஜமுனா:- இப்ப எல்லாம் கண்டபடி ஆபிசில தூங்கமுடியாமல் கிடக்குதடி..
கங்கா:- ஏனடி?..
ஜமுனா:- மனேஜர் தன்ர வேலைகளை என்னிடம் தந்திட்டு தூக்கிவிட்டார்?...
2- செல்வி:- அவர் எனக்குத் தூரத்துச் சொந்தமடி.
ஆரபி:- எப்படியடி?.. உத்தேசமாக எவ்வளவு கிலோ மீட்டர் தூரமடி?..
3- சிவம்:- உங்கட வீட்டு வேலைகளை அவர் ஏன் விழுந்து..விழுந்து செய்கிறார்..
ராமன்:- இல்லை..அவர் வருகின்ற தேர்தலுக்கு வேட்பாளர்.
4- சிவன்:- சீப்பிற்கும் வாழைப்பழத் தோலுக்கும் என்ன வித்தியாசம்?..
செல்வா:- சீப்பு தலையை வாரும்..வாழைப்பழத்தோல் காலை வாரும்
5- குமார்:- உன்னைக் கடித்த நுளம்பை ஏனடா அடிக்காமல் விட்டனி?..
ஜெயம்:- அதன் உடம்பில என் இரத்தம் ஓடுது..அதனால்தான் விட்டுவிடேன்..
6- மனைவி:-அரைமணிநேரமாக நான் நாயாகக்கத்துறன் நீ ஏன்பேசாமல் இருந்தனி
கணவன்:- எனக்கு நாய்ப் பாசை தெரியாது எண்டு அர்த்தம்.
7- சிவா:- அவர் போலி டாக்டர் என்று எப்படிக் கூறுகின்றாய்?..
தனம்:- காய்ச்சலுக்கு மருந்து எழுதிக் கொடுத்து "இதை கூட்டுறவு நேசன் கடையில்" வாங்கினால் மலிந்த விலைக்கும் கிடைக்கும் என்கிறார்?..
8- நேசன்:- மன்னா...நமது அமைச்சர் ஊழல் புரிகிறார் என்று எப்படிச் சந்தேகம்
வாசன்:- ரயிலை மாடுகள் முட்டியதில் 25 ரயில்கள் சேதம் என்று கணக்குக் காட்டியிருக்கிறாரே?..
9- காதலன்:- இண்டைக்கு ஊரை விட்டு ஓடிப்போகலாம்..
காதலி:- எனக்குத் தனியா வரப் பயமாக இருக்கு..
காதலன்:- அப்ப உன் தங்கச்சியையும் கூட்டிக்கொண்டு வா?..
10- பேரன்:- ஏன்பாட்டி என்மேல இவ்வளவு பாசமாய் இருக்கிறீங்க..
பாட்டி:- நீதாண்டா பேராண்டி நாளைக்கு எனக்குக் கொள்ளி வைக்கணும்.
பேரன்:- போ...பாட்டி எனக்கு நாளைக்கு ஸ்கூல்ல ரெஸ்ட் இண்டைக்குக் கொள்ளி வைக்கிறன்?..

# ஆற்றுகைத் தேர்வு...

அனைத்துலகத் தமிழ்கலை நிறுவனமும் மேஜர் பாரதி கலைக்கூடமும் இணைந்து நடத்தியவாய்ப்பாட்டு. ஆற்றுகைத் தேர்வு...

4.6.23 அன்று மதி விஜயலட்சுமி போஜராஜசர்மா சங்கீத ஆசிரியைஅவரின் மாணவன் அருண் பரமதாஸ் அவர்களின் வாய்ப்பாட்டு தேர்விற்காக சென்ற பொழுது மனதில் பிடித்த இசையின் வெளிப்பாட்டில் சில வரிகள்..

முதலாவதாக ஆரம்பம் வர்ணம் மிக்க அழகான பாடல் சூரியனை நிலை நிறுத்தி இயற்கையை தழுவிய பாடல் . சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் இயற்கையை வாழ்த்தியது போல இருந்தது. அடுத்தது கீர்த்தனை ராகம் ஹம்சநாதம் கணபதி கழலடி என்னும் பாடல் , மிகவும் சுத்தம் சுருதிலயம் அருமை. மூச்சு விடாத குரல் இனிமை இனிமை ரசம். அடுத்து பல்லவி சாருகேசி ராகம் மாதவா மதுசூதனா என்ற பாடலும் பின்னணி இசை வயலின் உடன் ஆறுதலான தாலாட்டு போல இருந்தது.

மகனின் இசை தூங்கலோசை போல தாலாட்டு போல மென்இசை தூங்கலோசை போல இருந்தது. முடிவில் ஸ்வர வரிசை ரிதம் மிக இனிமை. பக்கவாத்தியத்துடன் சேர்ந்து நேர்த்தியாகவும் அழகாகவும் இருந்தது. கீர்த்தனை ராகம் ஷண்முகப்பிரியா வரம் ஒன்று தந்தருள்வாய் என இரந்து கேட்பது போல வரம் வேண்டி உருக்கமான ஷண்முகப்பிரியா ராகத்தில் வரம் கேட்டு நின்றமை உணர்ச்சி பூர்வமாக உள்ளம் உருக வைத்தது .

அடுத்து வந்த பாடல் கீர்தனை ராகமாலிகை ராகத்தில் அதாவது ஒரு பெண் தன் தோழியிடம் தான் கண்ட கனவு, பற்றி இன்பக்கனா ஒன்று கண்டேன். என்று அழகன் முருகனை வர்ணித்து பாடுவது போல பாடல் ஏற்ற இறக்கத்துடன் சீராக இருந்ததை ரசிக்க முடிந்தது. அடுத்து தில்லானா ரதிபதிப்பிரியா ராகத்தில் தீம்தன்ன நாதுர்தீம் துள்ளல் ஓசையில் உச்சத்திற்கு அழைத்து சென்று, அசையாமல் இருந்தவர்களையும் தலையாட்டி ஆட வைத்தது.

கண்ணா கமலக் கண்ணா உன்னைப்பணிந்தேன் கண்ணன் என்றால் சொல்லவும் வேண்டுமா. எல்லோரும் நன்றாக ரசித்ததைக் காணமுடிந்தது. இறுதியாகத் அருணகிரிநாதரின் திருப்புகழ் த்விஜவந்தி ராகத்தில் குமர குருபரா இருள் கடந்து ஒளிபரவ புவியில் இறக்க ஏற்றி இடைவெளி அருமை. முடிவில் தமிழ் வாழ்த்து தமிழாகிய நாதமொழி வாழிய தமிழ் எனப் பாடி முடித்தார். மண்டபம் நிறைந்த கரகோசம். அத்தனை மகிழ்ச்சி,

இந்நிகழ்வு ஒரு தேர்வுக்கானது என்றாலும், ஏழு பாடல்கள் அத்தனையும் முத்துக்கள். இத்தருணம் நாம் எப்படி ஒரு கானசபாவில் இருந்து கேட்போமோ அப்படி இருந்தது. அருணின் குரலும் பாடிய விதமும் மனதைக் கவர்ந்தது. ஏனெனில் மிகவும் அமைதியாக எல்லோரும் இருந்து ரசித்தமை பாராட்டிற்குரியது. இசை கேட்டால் புவி அசைந்தாடும் என்பது போல அருணின் பாடலில் எல்லோரும் மெய் மறந்து தலை , தோளை அசைத்ததைப் பார்க்க முடிந்தது.

அருணுடன் கைகோர்த்த அணி சேர் கலைஞர்களும் நன்றாகவே வாசித்தனர். மிகவும் அருமை எனலாம். இவர்களும் இளையதலைமுறையினர் எம் அடுத்த தலை முறை எங்கள் கலையை எடுத்து செல்வார்கள் என்பது மிக்க மகிழ்வே. எல்லோருக்கும் பாராட்டுகளும், வழ்த்துகளும்.
தெய்வீக்க் கலை சிறப்புடன் வாழ்க!
அருண் இது தேர்வில் அதிதிறன் புள்ளிகள் பெற்று சித்தி அடைந்ததுமகிழ்ச்சியே! வாழ்த்துகள். நன்றியுடன்...

**கெங்கா ஸ்ரான்லி**





28 முறை எவரெஸ்ட் சிகரம் ஏறி சாதனை



இரட்டையர்கள் கிராமம்

ஒரு கிராமத்தில் இரட்டையர்கள் பிறப்பது சாதாரண விஷயம். ஆனால் அந்த கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிலும் தலைமுறை தலைமுறையாக இரட்டையர்கள் இருப்பது அபூர்வம். அப்படிப்பட்ட அதிசய கிராமம் கேரள மாநிலத்தில் இருக்கிறது. அதன் பெயர், கோடின்ஹி. சுமார் 2 ஆயிரம் குடும்பங்கள் வசிக்கும் இந்த கிராமத்தில் குறைந்தபட்சம் 400 இரட்டை குழந்தைகள் இருப்பதாக ஆய்வறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

கிட்டத்தட்ட ஒவ்வொரு வீட்டிலும் ஒரு இரட்டையர்கள் குழந்தைகளாகவோ, அவர்களின் மூதாதையர்களாகவோ இருக்கிறார்கள். இந்த கிராமத்தில் இரட்டையர்கள் பிறப்பது பற்றிய மருத்துவ ரீதியான தேடல் இன்னும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. ஆனால் அதற்கான சரியான பதில் இன்னும் கிடைக்கவில்லை. ஆய்வுகளின்படி 2008-ம் ஆண்டில் சுமார் 300 பெண்கள் குழந்தை பெற்றெடுத்தனர். அவற்றில் 15 ஜோடி இரட்டையர்கள் பிறந்தனர். அதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் இரட்டை குழந்தைகளின் எண்ணிக்கை உயர்ந்து கொண்டிருக்கிறது.

கிராமத்தினரிடம் கேட்டால், மூன்று தலைமுறைக்கு முன்பிருந்தே இரட்டைக் குழந்தைகள் பிறக்கும் நிகழ்வு தொடங்கி விட்டதாக சொல்கிறார்கள். டாக்டர் ஸ்ரீபிஜு என்பவர், "எனக்கு தெரிந்தவரை, இந்த மருத்துவ அதிசயம் 60 முதல் 70 ஆண்டுகளுக்கு முன்பு எங்கோ தொடங்கியது" என்கிறார்.

கோடின்ஹி இப்போது இரட்டையர் நகரம் என்ற புனைப்பெயரால் அழைக்கப்படுகிறது. இரட்டையர்களின் பெயர்களை பதிவு செய்யவும், அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யவும் 'டாகா' என்ற சங்கத்தை நிறுவி உள்ளனர்.



நைஜீரியா

100 மணி நேரத்தில் இப்படியொரு சாதனையா?

நைஜீரியாவைச் சேர்ந்த 27 வயதான பெண்ணொருவர் தொடர்ந்து 100 மணி நேரம் சமைத்து உலக சாதனை படைத்துள்ளார்.

சமூகவியல் பட்டதாரியும், சமையல் கலை நிபுணருமான ஹில்டா பாஸே என்பவரே உள்ளூர் உணவுகள், வெளிநாட்டு உணவுகள் என 110 உணவு வகைகளை சமைத்து அசத்தியுள்ளார்.

இதன்போது சமையல் கூடத்தை சுற்றிலும் திரண்ட பார்வையாளர்கள் ஹில்டாவைத் தொடர்ந்து உற்சாகப் படுத்திய வண்ணம் இருந்தனர்.

இந்நிலையில், 2019 ஆம் ஆண்டு, தொடர்ந்து 88 மணி நேரம் சமைத்து கின்னஸ் சாதனை படைத்திருந்த இந்திய பெண்மணி லதா டாண்டன், புதிய சாதனையாளரான ஹில்டா பாஸேக்கு தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.



## 1 - 28 தடவைகள் எவெரெஸ் மலையில் ஏறி உலக சாதனை!..
## 2 - கேரளாவில் 400 இரட்டையர் கிராமம்!...
## 3 - 100 மணி நேரம் சமைத்து உலக சாதனை!..
## 4 - உலகின் உயரமான பெண்மணி வீட்டிலிருந்து வாக்களப்பு!..

சமூக ஊடகங்களின் தேடலில் கிடைத்த சில தகவல்களை பகிர்ந்து கொள்கிறேன். நீங்களும் படித்து அறிந்து பயன்பெறுங்கள்..

1 - நேபாளம் நாட்டைச் சேர்ந்த 53 வயதுடைய கமிரீட்டா ஷெர்பா என்பவர் 28 தடவைகள் எவெரெஸ்ட் மலையில் ஏறி உலகசாதனை படைத்துள்ளார். கடல்மட்டத்திலிருந்து 8.848.86 மீட்டர் உயரம்கொண்ட இந்த மலையில் ஏறும் பணியை முதன்முதலில் 1994ம் ஆண்டு ஆரம்பித்த இவர் சில வருடங்களில் இரண்டு தடவையும் ஏறியிருக்கிறார். உல்லாசப்பயணிகளின் வழிகாட்டியாகத் தொழிற்படும் இவர் ஏனைய 8.000 மீட்டர் உயரமுடைய மூன்று மலைகளிலும் ஏறிச் சாதனை படைத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

2 - இந்தியா-கேரளா மாநிலத்தில் ஒரு கிராமம் இரட்டையர்கள் கிராமம் என்னும் பெயருக்குள்ளாகியுள்ளது. இக்கிராமத்தில் ஒவ்வொரு வீட்டிலும் தலைமுறை தலைமுறையாக இரட்டையர்கள் பிறந்திருப்பது அபூர்வமான விடையமாகும். தற்போது 400 இரட்டைக் குழந்தைகள் வசிக்கிறார்களாம். சுமார் 2.000 பேர்தான் இக்கிராமத்தில் வசிக்கிறார்கள். இக்கிராமத்தின் பெயர் கோடின்ஹீ. இக்கிராமத்தை இரட்டையர் கிராமம் என்று அழைக்கிறார்கள்.

3 - நைஜீரியாவில் ஒரு பெண்மணி தொடர்ந்து 100 மணி நேரம் சமையல் வேலையில் ஈடுபட்டு உலக சாதனை படைத்துள்ளார். 27 வயதுடைய சமூகவியல் பட்டதாரியும் சமையல்கலை நிபுணருமான ஹில்டா பாஸே என்னும் பெண்மணிதான் 110 உணவு வகைகளைச் சமைத்து இச்சாதனையைப் படைத்துள்ளார். முன்னைய சாதனை இந்தியப் பெண்மணியான லதா டாண்டாவின் 88 மணிநேரச் சாதனையை முறியடித்துள்ளார்.

4 - வீட்டில் இந்தவாறே தேர்தலுக்கு வாக்களித்த பெண்மணி. அண்மையில் துருக்கி நாட்டில் நடைபெற்ற தேர்தலில் உலகின் உயரமான பெண்மணியாக விளங்கும் 2.15 மீட்டர் உயரமுடைய றுமியாசா கெல்கி வயது 26 என்பவர் வீட்டில் இருந்தவாறே தேர்தலில் வாக்களித்துள்ளார். வாக்களிப்பு நிலையத்திற்கு வெளியே சென்று வாக்களிப்பதற்குப் பல சிரமங்கள் இருந்தபடியால் அவர் வீட்டிலிருந்தவாறே வாக்களிக்க தேர்தல் அகிகாரிகள் விசேட ஒழுங்குகளைச் செய்திருந்தனர்.

## குறைவடையும் இலங்கை மக்களின் ஆயுட்காலம்..!

ஆயுட்காலத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக அண்மையில் முன்னெடுக்கப்பட்ட ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.இலங்கை வாழ் மக்களின் ஆயுட்காலம் குறைவடைந்துள்ளதாக வெளிநாட்டு பொருளியல் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது.இலங்கையில் சிசு மரண வீதமும் உயர்வடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இலங்கை, ஸம்பியா, கானா போன்ற நாடுகளில் சிசு மரண வீங்கள் உயர்வாக காணப்படுவதாகவும் அந்தப் பட்டியலில் இலங்கையும் இணைந்து கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

குற்றம் சுமத்தியுள்ள மேற்குலக நாடுகள்

குறைவடையும் இலங்கை மக்களின் ஆயுட்காலம்..! ’ Decreasing Sri Lankan Life Expectancy இந்த பிரச்சினைக்கு விரைவில் தீர்வு எட்டப்படாவிட்டால் அந்த நாடுகள் நெருக்கடி நிலைமைகளை எதிர் நோக்கலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நாடுகள் குறிப்பாக இலங்கை, ஸம்பியா, கானா ஆகிய நாடுகள் கூடுதல் அளவில் சீனாவிடம் கடன் பெற்றுக் கொண்டுள்ளதாகவும், குறித்த நாடுகளின் சுகாதார பிரச்சினைகள் தொடர்பில் சீனா உரிய கவனம் செலுத்த தவறியுள்ளதாகவும் மேற்குலக நாடுகள் குற்றம் சுமத்தியுள்ளன.




# நிறைகூடிய பூசணிக்காய்

அமெரிக்காவில் 2,560 இறாத்தல் (1,161 கிலோகிராம்) எடையுடைய பூசணிக்காய் உற்பத்தி செய்யப்பட்டு புதிய சாதனை படைக்கப்பட்டுள்ளது. பாரிய பூசணிக்காய் அறுவடை தொடர்பான போட்டியொன்று கலி∴போர்னியா மாநிலத்தில் அண்மையில் நடைபெற்றது.

இப்போட்டியில் மினசோட்டா மாநிலத்தை சேர்ந்த தோட்டக்கலை ஆசிரியர் ட்ராவிஸ் ஜின்ஜர் கொண்டுவந்த பூசணிக்காய் முதலிடம் பெற்றது. அந்த பூசணிக்காய் 2560 இறாத்தல் எடையுடையதாக இருந்தது. அமெரிக்க வரலாற்றில் இதுவரை பதிவு செய்யப்பட்ட மிக அதிக எடையுள்ள பூசணிக்காய் இதுவாகும்.

“உலக பூசணிக்காய் நிறுவை சம்பியன்ஷிப்“ எனும் இப்போட்டி 49ஆவது தடவையாக கலிஹபோர்னியா மாநிலத்தின் சான் பிரான்சிஸ்கோ நகரில் நடைபெற்றது. இப்போட்டியில் 2020ஆம் ஆண்டிலும் ட்ராவிஸ் ஜின்ஜர் முதலிடம் பெற்றிருந்தார்.ஒரு வாரத்துக்கு முன்னர் நியூயோர்க்கில் அளவிடப்பட்ட, மற்றொருவரின் 2,554 பூசணிக்காயொன்று அமெரிக்காவின் மிகப் பெரிய பூசணிக்காய் என்ற சாதனையை படைத்தது.

இப்போது ட்ராவிஸ் ஜின்ஜரின் 2,560 இறாத்தல் எடையுள்ள இந்த பூசணிக்காய் “அமெரிக்காவின் மிக அதிக எடையுள்ள பூசணிக்காய்“ என்ற சாதனையை படைத்துள்ளது. இந்த சாதனைக்காக அவருக்கு 23 ஆயிரத்து 40 அமெரிக்க டொலர் பரிசாக வழங்கப்பட்டது.

மேலும், 2021ஆம் ஆண்டு இத்தாலியில் அறுவடை செய்யப்பட்ட 2,702 இறாத்தல் (1,225 கிலோகிராம்) எடையுள்ள பூசணிக்காயே உலகில் இதுவரை அறுவடை செய்யப்பட்ட மிக அதிக எடையுள்ள பூசணிக்காயாக கின்னஸ் சாதனை நூல் வெளியீட்டாளர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது..

# யேர்மனிய தமிழ்பெண் எழுத்தாளர்கள் விபரம்..

**- தொகுப்பு சாந்தினி துரையரங்கன் -**

## யேர்மனி தமிழ்ப் பெண் எழுத்தாளர்கள்... தொடர்ச்சி - 26



பெயர் - **திருமதி இந்து தெய்வேந்திரம் (ரவீந்திரா )**
தந்தை, தாய் - இராமலிங்கம், அன்னலஷ்சுமி
பிறப்பு - யாழ்ப்பாணம் மல்லாகம் , 25.06. ......
கல்வி - யாழ் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி
புலப்பெயர்வு - 1985
தற்போதைய முகவரி - சோஸ்ற் யேர்மனி ( Soest )
கணவர் - திரு. தெய்வேந்திரன்
பிள்ளைகள் - 1 ஆண், 1 பெண் (சுகாஷன், சுஜர்சினி)

நாட்டுச் சூழலால் 1985ம் ஆண்டு ஜேர்மனி சோஸ்ற் (Soest) நகரில் புலம் பெயர்ந்து திருமணமாகி இரண்டு பிள்ளைகள் மகிழ்வுடன் வாழ்ந்து வருகின்றார்.

பணிகள் - யேர்மனி சோஸ்ற் நகரத்தில் தமிழ்ப்பாடசாலை ஆரம்பித்து நடார்த்தி வருகின்றார்.
- கல்வி, சமூக , சமயப் பணிகள் செய்து வருகின்றார்.

தமிழ் பணி -
புலம்பெயர்மண்ணில் தாய்மொழி தமிழும் கலாசார பண்புகளும் அழிந்து விடக்கூடாது என்ற நோக்கில் தமிழ்க்கல்வி கலாசார அமைப்பை நிறுவி, 30 ஆண்டுகளுக்கு மேல் இலவசமாக தமிழ்மொழி, சமயத்தை இங்கு வாழும்

சிறார்களுக்கு கற்றுக் கொடுப்பதோடு,கலாசார விழுமியங்களை வெளிப்படுத்தும் வகையில் பல நிகழ்வுகளையும் நிகழ்த்தி வருகின்றார்.

18 ஆண்டுகளாக இந்த அமைப்பின் ஊடாக மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளை 4வயது பிள்ளைகளிலிருந்து இளையோர் பெரியோர் வரையிலான போட்டிகளையும் நடாத்தி வருகிறார்.அத்தோடு திருக்குறள், கோலப் போட்டிகளையும், நாடகம் ,காத்தவராயன்கூத்து நடனங்களாக கும்மி ,காவடி , கோலாட்டம்,மயில்,பாம்பு, தப்பாட்டம் போன்ற பாரம்பரியங்களை கைவிடாது செய்வித்து வருகின்றார். இது வரை 5 வில்லிசைகளை தானே எழுதி இயக்கியும் மேடை ஏற்றியும் உள்ளார்.

**சமூகப்பணி -**

எம்மினத்தோடு நின்றுவிடாமல் 25 ஆண்டுகளுக்கு மேல் சர்வதேச நண்பர்கள் சங்கத்திலும் வேலைத்திட்டமும் கலாசாரமும் என்ற அமைப்பிலும் Integration Rat (பல்லின அமைப்பு) தேர்தலில் 2009லிருந்து நின்று 3தடவை அமோக வெற்றிகள் பெற்று அதில் சர்வதேச பெண்கள் காலை உணவு என்ற தலைப்பில் சர்வதேச கலாச்சாரம், உணவு , நடனம் , பழக்கவழக்கங்கள் போன்ற பல திட்டங்களை 12 வருடங்களாக செய்து சோஸ்ற் நகர பிதாவின் பராட்டை பெற்றவர்.

இது போன்ற பல்இன அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதால் உணவு,கலாசாரம் போன்றவற்றை தெரிந்து ஒவ்வொருவரும் புரிந்துணர்வுடன் செயல்படமுடியும் என்பது இவரது கருத்து.

2019ல் எமது கலாசாரமும் கண்காட்சியும் என்ற விழாவின் மூலம் எமது பாரம்பரிய நிகழ்வுகளையும், பொருட்கள்,படங்கள் உணவு,உடைகள் மருதாணிஅணிதல் போன்றவற்றை எம் இளம்சந்ததி மட்டுமல்லாது மற்றைய இனத்தவர்களுக்கும் வெளிப்படுத்தியுள்ளார். தமிழ் எழுத்துக்களில் இந்த நாட்டவர்களின் பெயர்களை எழுதி வரைந்து நிறம்தீட்டி ஞாபக சின்னமாக கொடுத்து தமிழ் எழுத்துகளுக்கு சிறப்புச் சேர்த்துள்ளார்.

9ஆண்டுகளாக உலகப்பண்பாட்டு இயக்கதில் இணைந்து 2016ல் உலகப் பெண்கள் நலப்பிரிவின் தலைவராக இருந்து செயல்படுவருவதோடு, ஒவ்வொரு நகரத்திலும் பெண்கள் அமைப்பை தொடக்கி வைத்து அதனூடாகப் பல உதவிகளையும்,ஆலோசனைகளையும் வழங்கி வருகிறார்.

**சமயப்பணி -**

இதுமட்டுமல்லாது 28 ஆண்டுகளாக கம் காமாட்சி அம்மன் ஆலயத்தில் ”சத்சங்க” உறுப்பினராகவும், தொண்டராகவும் இருந்து பல வழிகளில் சமயத்திற்கும் தொண்டாற்றுகிறார்.

**விருதுகள் -**

- 2019ல் எசன் தமிழர் கலாசார நற்பணி மன்றத்தின் ஆண்டு விழாவில் அதிபர் நயினை விஜயன் அவர்களால் வாழ் நாளில் பெரும்பகுதியை இனம்,மொழி, கலை கலாச்சாரம் எனப் போற்றி சேவையாற்றி வருவதை பாராட்டி வாழ்நாள் சாதனையாளர் விருதை எசன் நகர பிதா கரங்களினால் கிடைக்கப் பெற்றார்,
- 2019ல் வெற்றிமணிப் பத்திரிகையின் வெள்ளிவிழாவில் அதிபர் மு.க.சிவகுமாரன் அவர்களால் வெற்றிமணி விருதும்,
- உ.த.ப.இயக்கத்தினால் தமிழ் மொழிக்காப்பாளர் விருதும்,
- திருச்சி இனிய நந்தவனம் நிறுவனத்தினால் சாதனைப்பெண்2021விருதும் பெற்றார்.

தமிழ் பாடசாலை நடாத்தி வருவதால் மாணவகளுக்காக கட்டுரைகள், நாடகங்கள், பேச்சுக்கள் , வில்லிசைகள் எனப் பல ஆக்கங்கள் எழுதிவருகின்றார். தமிழ் மொழியையும் தமிழ்க்கலாசார விழுமியங்களையும் பல போராட்டத்தின் மத்தியில் சேவை நோக்கில் புலம் பெயர் மண்ணில் விதைத்து வருகிறார். இவரது சேவைகள் என்றும் தொடரவும் ஆரோக்கியத்துடன் நீண்ட காலம் வாழவும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

.....................................................................................

**வாழ்க்கைக்குரிய பொன்மொழிகள்**

1- சகித்துக்கொண்டு வாழ்வது வாழ்க்கை அல்ல இரசித்துக்கொண்டு வாழ்வதே வாழ்க்கை
2- ஒரு புத்திசாலி சாதிக்க முடியாத்தை ஒரு பொறுமைசாலி சாதித்து விடுவான்
3- உறவால் வரும் அன்பை விட அன்பால் வரும் உறவே புனிதமானது
4- மகிழ்ச்சி என்பது நம் வீட்டில் விளைவது மற்றவர் தோட்டத்தில் அதை தேட வேண்டிய அவசியமில்லை
5- வாழ்க்கையில் நிம்மதி தேவையென்றால் ஞாபக மறதி அவசியம் தேவை.

**- ஜெயா நடேசன் -**







**புதிய ஆளுநர்களை ஜனாதிபதி நியமித்தார்.**
**முதலாவது தமிழ் பெண் ஆளுநர் 2வது தடவை பதவி ஏற்பு..**
**முதலாவது மலையகத் தமிழர் ஆளுநராகப் பதவி ஏற்பு..**

ஒரே தடவையில் 2 தமிழ் ஆளுநர்களை நியமித்த வரலாற்றுச் சாதனை இலங்கையில் நடந்துள்ளது. இலங்கைத் தமிழ் பெண் திருமதி சார்ள்ஸ் அவர்களையும் மலையகத் தமிழரான செந்தில் தொண்டமானும் வடமாகாணத்துக்கும் கிழக்கு மாகாணத்துக்குமான ஆளுநர்களாகப் பதவி ஏற்றுள்ளனர்.

இலங்கையின் வரலாற்றில் மலையகத் தமிழர் ஒருவர் ஆளுநராகப் பதவி ஏற்றிருப்பது இதுவே முதல் முறையாகும்.

கிழக்கு மாகாணத்தின் சரித்திரத்தில் ஆளுநர்கள் வரலாற்றில் இவர்தான் முதலாவது தமிழ் ஆளுநர் என்பதும் குறிப்பிடத்தக்க விடையமாகும்.

வடக்கு மாகாணத்துக்கான ஆளுநராகப் பதவி ஏற்றுள்ள திருமதி சார்ள்ஸ் அவர்களின் பதவி ஏற்பானது இது இரண்டாவது தடவையாகும். முதற்தடவையாக இவர் 30.12.2019 தொடக்கம் 11.10.2021 வரை பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

தமிழ் பேசும் மக்கள் செறிந்துவாழும் பகுதிகளுக்குத் தமிழ் ஆளுநர்களை நியமிக்குமாறு தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். மக்களின் கோரிக்கையும் அதுவாகவே இருந்தது. அந்த கோரிக்கையை ஜனாதிபதி நிறைவேற்றியமை வரவேற்கத்தக்கது.

செந்தில் தொண்டமான் மாகாணசபை உறுப்பினராக, அமைச்சராக, பதில் முதல்வராகப் பதவி வகித்துள்ளார். ஆக மத்திய அரசுக்கும், மாகாண அரசுக்கும் இடையில் ஏற்படும் நெருக்கடிகளை எப்படிச் சமாளிப்பது என்பது அவருக்கு நன்கு தெரியும். ஆகவே, சிறப்பான சேவைகள் இடம்பெறும் என்ற நம்பிக்கை உள்ளது என எதிர்பார்க்கப்படுகின்றது.

திருமதி சார்ளஸ் அவர்களும் அரச நிர்வாக சேவையில் நீண்டகால அனுபமுள்ளவர். வவுனியா மாவட்ட அரசாங்க அதிபராகவும் இலங்கை சுங்கத்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் எனப் பல்வேறு உயர் பதவிகளை வகித்த அனுபசாலி. அடுத்தது இரண்டாவது தடவையாக வடமாகாண ஆளுநராகப் பதவி ஏற்றிருப்பதால் மேலும் வட பகுதி மக்களுக்குப் பல நன்மைகள் கடைக்கும் என எதிர்பார்க்கலாம்.

**வடமாகாணம்...**

மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கிளிநோச்சி, யாழ்ப்பாணம் என 5 மாவட்டங்களை உள்ளடக்கிய வடமாகாணத்தின் ஆளுநர்களாக இதுவரை 9 பேர் பதவி வகித்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| Mohan Wijewickrama (acting) | -1 January 2007 | 3 July 2008 |
| 1- Victor Perera | -3 July 2008 | 10 October 2008 |
| 2- Dickson Sarathchandra | -10 October 2008 | 12 July 2009 |
| 3- G. A. Chandrasiri | -12 July 2009 | January 2015 |
| 4- H. M. G. S. Palihakkara | -27 January 2015 | 16 February 2016 |
| 5- Reginald Cooray | -16 February 2016 | 31 December 2018 |
| 6- Suren Raghavan | - 7 January 2019 | 20 November 2019 |
| 7- P. S. M. Charles | -30 December 2019 | 11 October 2021 |
| 8- Jeevan Thiagarajah | -11 October 2021 | 16 May.2023 |
| 9- P. S. M. Charles | -17 May.2023 | |

## கிழக்கு மாகாணம்...

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை என 3 மாவட்டங்களை உள்ளடக்கிய கிழக்கு மாகாணத்தின் ஆளுநர்களாக இதுவரை 7 பேர் பதவி வகித்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1- Mohan Wijewickrama | 22 December 2006 | January 2015 |
| 2- Austin Fernando | 27 January 2015 | 1 July 2017 |
| 3- Rohitha Bogollagama | 4 July 2017 | 3 January 2019 |
| 4- M. L. A. M. Hizbullah | 3 January 2019 | 3 June 2019 |
| 5- Shan Wijayalal De Silva | 5 June 2019 | 20 November 2019 |
| 6- Anuradha Yahampath | 4 December 2019 | 16 May 2023 |
| 7- Senthil Thondaman | 17 May 2023 ............ | |

## இலங்கை... (சிறீலங்கா)

இலங்கையின் (சிறீலங்கா) 9 மாகாணங்களிலும் தற்போது ஆளுநர்களாக பதிவி வகிப்பவர்கள் விபரம்..

| | | | |
|---|---|---|---|
| 1- Central | - Lalith U. Gamage | -21 November 2019 | - 2024 |
| 2- Eastern | - Senthil Thondaman | -17 May 2023 | - 2024 |
| 3- North Central | - Maheepala Herath | - 4 December 2019 | - 2024 |
| 4- North Western | -L. Y. Abeywardena | -17 May 2023 | - 2024 |
| 5- Northern | - P. S. M. Charles | -17 May 2023 | - 2024 |
| 6- Sabaragamuwa | -Tikiri Kobbekaduwa | -21 November 2019 | - 2024 |
| 7- Uva | -A. J. M. Muzammil | - 31 August 2020 | - 2024 |
| 8- Western | - Roshan Goonetileka | -24 March 2020 | - 2024 |
| 9- Southern | -Willy Gamage | - 21 November 2019 | - 2024 |

வடக்கு, கிழக்கு, ஊவா மாகாண ஆளுநர்கள் 3 பேரும் தமிழ் தாய்மொழியாகக் கொண்ட இனத்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்க விடையமாகும்.

..........................................................................................................................................

## பொன்மொழி...

ஒரு ரூபா சோக்கட்டி பல ஆயிரம் அறிவாளிகளை உருவாக்குகின்றது
ஒரு லட்சம் ரூபா கைபேசி பல கோடி கண் பார்வையை இழக்கச் செய்கின்றது..

## எங்களுடன் முடிவடையும்!..

புலம்பெயந்து வாழும் எங்கள் மரணத்துக்கு பின்பு முற்றாக இலங்கை தொடர்புகள் அழிந்துவிடும் . ஏன் என்றால் நாங்கள் திருமணம் செய்ய பெண் எடுப்பதும் ,மாப்பிள்ளை எடுப்பதும் எங்களுடன் முடிவடையும் , ஊருக்கு பணம் அனுப்புவதும் எங்களுடன் முடிவடையும், இலங்கைக்கு விடுமுறையில் செல்வதும் எங்களுடன் முடிவடையும்.

அப்பப்பா, அம்மப்பா ,அம்மமா ,அப்பமா ,மாமா ,மாமி என்று நேரில் போய் பார்ப்பதும், கோவில் திருவிழாக்களுக்கு போவதும் எங்களுடன் முடிவடையும். எங்கள் ஆயுளுக்கு பின் எங்கள் பிள்ளைகள் ஏன் அங்கு போவார்கள்? எம் அடுத்த சந்ததி இங்கே வாழ்க்கை துணையை தேடிக்கொள்ளும் , அங்கு பணம் அனுப்ப அவர்களுக்கு யாரும் இல்லை , போன் கதைக்க யாரும் இல்லை ,

அவர்கள் அங்கு tour போகும்போது எதாவது ஹோட்டலில் இருந்து நிலாவரை கிணத்தையும், கீரிமலை ,சிகிரியா எல்லாத்தையும் ரசித்துவிட்டு ஒரு வேற நாட்டுகாரர் மாதிரி மட்டும் enjoy பண்ணமுடியும். அதோடு நிறைய காசும் 1 நாள் விமானப் பயணம் செய்து அங்கு ஏன் போவார்கள் ? அவர்களுக்கு வரும் girl அல்லது boy friend விருபுவார்களா ?..

என்ன கொடுமை !!!! எங்களுடன் எங்கள் பிறந்த நாடு மறக்கப்படுகிறது... இப்போது நாங்கள் மலேசிய ,சிங்கபூர் வாழ் தமிழரை எப்படி பார்கிறோமோ அதைப்போல எங்கள் பேரப்பிள்ளைகள் இனி யாழ்ப்பாணத்தையும் ஒரு தமிழ் இனம் வாழும் இடமா உலகப்படத்தில் காட்டுவார்கள் !!
( தவிர்க்க முடியாத உண்மை )

**- பிரகாஸ் -**

## ஹீரோவும் (Hero) சீரோவும் (Zero)

வன்முறைக் கலாச்சாரம் இன்று உலகெங்கும் மிக வேகமாகப் பரவி வருகின்றது. நம் இனத்தவரிடையேயும் இது விதிவிலக்கல்ல. படுகொலை, பாலியல் வன்முறை, கொள்ளை, போதைப்பொருள் பாவனை எனப் பல்வேறு சமூகச் சீரழிவுகள் பெருகி சமூகச் சீர்கேடுகள் தலைதூக்கி வருவது வேதனைக்குரிய விடையமாகும்.

ஏன்? நாம் நல்ல கல்வி சார்ந்த சமூக அக்கறையோடு வாழ முடிவதில்லை. நமது இனத்தவர்களே நமது இனத்தவர்களை வீழ்த்துவதில் முந்தி நிற்கின்றார்கள்.. பொறாமை, பேராசை, போட்டி, கௌரவம், பணம், ஆதிக்கம் போன்ற பல விடையங்களில் நாம் ஹீரோவாக (Hero)இருக்கின்றோம். சிந்தித்துப் பாருங்கள் உண்மையான ஒழுங்கு முறைப்படி முன்னேற்றப் பாதையில் நாம் இன்னும் சீரோவாகவே (Zero) வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்...



# அமரர் திருமதி புனிதமலர் இராஜேஸ்வரன்
## 03.01.1952 - 31.05.2023

**"சிறுவர் அமுதம்" சஞ்சிகை ஆசிரியர் காலமானார்..31.05.2023..**
**திருமதி புனிதமலர் இராஜேஸ்வரன் - யேர்மனி...**
**யேர்மனியில் சிறுவர்களுக்கான முதல் சஞ்சிகை..**

தமிழர்கள் புலம்பெயர்வின் சஞ்சிகை வரலாற்றில் யேர்மனியில் சிறுவர்களுக்கான முதன் முதல் "சிறுவர் அமுதம்" என்னும் சஞ்சிகை 1990ம் ஆண்டு தை மாதம் வெளிவர ஆரம்பித்தது. இதன் ஆசிரியராக காலம்சென்ற இராஜேஸ்வரன் அவர்கள் இருந்துள்ளார். வாகன விபத்து ஒன்றுல் அவர் 1994ம் ஆண்டில் காலமானார்.

அவரின் நற்பணி நிற்றுவிடக்கூடாது என்னும் நல் நோக்கில் அவரது துணைவியார் திருமதி புனிதமலர் அவர்கள் தொடர்ந்து இச்சஞ்சிகையின் ஆசிரியராகக் கடமைபுரிந்தார். தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் வெளிவந்த சிறுவர் அமுதம் சஞ்சிகை சில காரணங்களால் நின்றுபோனது.

இவர்தான் 31.05.2023 திங்கட்கிழமை யேர்மனியில் காலமான செய்தியை அவரது ஒரே ஒரு மகள் கண்ணீருடன் எடுத்துரைத்தார். சில காலங்கள் நோய்வாய்ப்பட்டு வைத்திசாலையும் வீடுமாகக் காலம் ஓடியது. இறுதியில் காலனவன் கையில் அகப்பட்டுவிட்டார். அன்னாரின் பிரிவுச்செய்தி எங்கள் மனங்களையும் கதிகலங்க வைத்தது. அன்னார் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

திருமதி புனிதமலர் அவர்கள் யாழ்- அளவெட்டியில் பிறந்து மகாஜனாக் கல்லூரியில் கல்விகற்று வளர்ந்து தபாலதிபர் அமரர் இராஜேஸ்வரனைத் திருமணம் முடித்து 1985ம் ஆண்டளவில் யேர்மனியில் குடியேறி இறக்கும்வரை தனது மகளுடன் வாழ்ந்து வந்தார்.

சிறுவர் அமுதம் சஞ்சிகையைப் பல நெருக்கடிகள், தியாகங்கள் மூலம் தனது கடின உழைப்பால் தொடர்ச்சியாக நான்கு வருடங்கள் அதன் ஆசிரியராக இருந்து செயற்பட்டார். தாயும் மகளுமாகச் சேர்ந்து சஞ்சிகைப் பணியை மேற்கொண்ட போது யேர்மனிவாழ் பல நூறு தமிழ்ச் சிறுவர்கள் தாய்மொழியாம் தமிழை பேச, வாசிக்க, எழுதக் கற்றுக் கொண்டனர். கல்விப் பணியால் தமிழுக்கு அவர் ஆற்றிய பங்கு அளப்பரியது.


அவர் கணவரோடு வாழ்ந்த காலத்தில் அவரோடு சேர்ந்து பல்வேறு கல்வி தமிழ்ப்பணிகளையும் சமூகப்பணிகளையும் ஆற்றியிருப்பது குறிப்பிடத்தக்க விடையமாகும். புலம்பெயர்வாழ் தமிழ்ச் சமூகத்தின் எதிர்கால நலனுக்காகப் பல பணிகளைச் செய்த அம்மையார் இன்று உயிருடன் இல்லாவிட்டாலும் அவரோடு பழகிய சஞ்சிகை, பத்திரிகை ஆசிரியர்களுக்கும் வாசகர்களும் மற்றும் நட்புகளுக்கும் பெரும் துயராகவே அமைந்துவிட்டது.

எம்மோடு பொதுவிலும் தனிப்பட்ட முறையிலும் நன்றாகவே பழகிவர். எங்கள் இல்லத்துக்குக் குடும்பமாகப் பல தடவைகள் வந்துபோனவர். மேலாக கவிதை, கட்டுரை, சிறுகதை, போன்ற இலக்கியம், கல்வி சார்ந்த பல படைப்புகளை எமது ”மண்” சஞ்சிகைக்கு எழுதியிருக்கிறார். அன்பு, பண்பு, அறிவு, மனிதநேயம் கொண்ட சகோதரி அவர்களின் இழப்பு நம் எல்லோருக்கும் பேரிழப்பாகும். ஒரே ஒரு மகளான திருமதி பிங்கலை செந்திலன் அவர்கள் குடும்பத்திற்கும் எமது ஆறுதலைத் தெரிவிப்பதோடு ஆன்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம். இறுதிக்கிரிகைகள் அவர் வசித்த நகரமான கிற்சிங்கன் ( Kitzingen ) நகரில் 05.06.2023 திங்கட் கிழமை நடைபெற்றது..

**மகள் திருமதி பிங்கலை செந்திலன்** - pingkalair@aol.com

ஆசிரியர் - மண் சஞ்சிகை



# தாயகச் செய்திகள் சில..

10.05.23- ஓமானில் இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்த 74 இலங்கைப் பெண்கள் 9 மாதங்களாகத் தடுத்து வைப்பு. இலங்கைக்குத் திரும்பமுடியாமல் பரிதவிப்பு.
11.05.2023- இந்த ஆண்டு முதல் 4 மாதங்களில் 34.000 டெங்கு நோயாளர்கள் அடையாளம், 22 பேர் இறப்பு சுகாதார அமைச்சு அறிவித்தது.
12.05.2023- தமிழ்நாட்டில் தற்போது வசிக்கும் இலங்கையர்கள் எண்ணிக்கை
106 அகதி முகாம்களில் 19.046 குடும்பங்களைச் சேர்ந்த 58.435 பேர்
ஏனைய இடங்களில், 10.000 குடும்பங்களைச் சேர்ந்த 34.000 பேர்
13.05.2023- சட்டவிரோதமாக அவுஸ்திரேலியா சென்ற 41 இலங்கையர்களை அந்தநாடு திருப்பி அனுப்பியுள்ளது.
14.05.2023- இந்த ஆண்டு முதல் 3 மாதங்களில் 151 யானைகள் இறப்பு. சென்ற ஆண்டில் 433 யானைகள் இறப்பு. யானைகளால் 145 மனித உயிர்களும் மரிணித்துள்ளன.
17.05.2023- நாட்டின் வறுமை காரணமாக சுமார் 4 லட்சம் மாணவர்கள் (இலங்கை மாணவர் தொகையில் மூன்றில் ஒன்று) காலை உணவு உண்பதில்லை. அமைச்சர் ஒருவர் பாராளுமன்றில் தெரிவிப்பு.
22.05.2023-வடக்கு மாகாண ஆளுநராக மீண்டும் திருமதி பி எஸ் எம் சார்ள்ஸ் பதவி ஏற்றுள்ளார்.
28.05.2023- 28.05.23 - 06.06.23வரை க.பொ.த சாதாரண பரீட்சை நாடுபூராகவும் இடம்பெற்றது. 4.72.553 மாணவர்கள் பரீட்சை எழுதியுள்ளனர்.
29.05.2023- சிறுவர் துஸ்பிரயோகம், பாலியல் வன்முறைகள் என கடந்த 4 மாதங்களில் 3.102 முறைப்பாடுகள் பதிவு.
31.05.2023- மே 2022 - மே 2023வரை 148 பேர் நீரில் மூழ்கிப் பலி.
04.06.2023- இலங்கையில் 10 - 14 வயதுடைய 39 வீதம்பேர் மொத்தச் சனத்தொகையில்19.4 வீதம்பேர் மன அழுத்தத்தால் பாதிப்படைந்துள்ளனர். பேராதனை, களனி பல்கலைக் கழகங்களின் ஆய்வு முடிவு.
06.06.2023- பெற்றோரின் முறையான கண்காணிப்பு இன்மையால் யாழ் குடாநாட்டில் 80 வீத சிறுவர்கள் வன்முறைகளுக்கு ஆளாகியுள்ளனர். யாழ் பிராந்திய பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.
10.06.2023- இலங்கையில் மொத்த சனத்தொகையில் (17வீதம்பேர்) 40 லட்சம்பேர் வறுமையின் பிடியில் உள்ளனர் என எதிர்க்கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.
11.06.2023- கடந்த 5 வருடங்களில் நாட்டுக்குள் 25 லட்சம் வாகனங்கள் இறக்குமதி.
12.06.2023- 2ம் சங்கிலி மன்னரின் 404வது ஆண்டு தினம் நல்லூரில் அனுட்டிக்கப்பட்டது.

13.06.2023- இந்த ஆண்டில் முதல் 4 மாதங்களில் 3.000 சிறுவர் துஸ்பிரயோகங்கள் இடம்பெற்றதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்தது.

14.06.2023- வீதி விபத்துகளால் கடந்த 4 மாதங்களில் 709 பேர் பலி. 2.160 பாரிய விபத்துகளும் 3.201 சிறு விபத்துக்களும் இடம்பெற்றதாக பொலிசார் அறிவிப்பு.
16.06.2023- அவசர விபத்துக்களால் வருடாந்தம் 12.000 பேர் இறப்பு 40 லட்சம் பேர்வரை படுகாயம் சுகாதாரப் பிரிவினர் தெரிவிப்பு.
17.06.2023- இலங்கையில் முதலாவது பல்கலைக் கழகமாக பேராதனைப் பல்கலைக்கழகம் தெரிவு தொடர்ச்சியாக 4 தடவைகள் முதலிடம் வகித்தது.
19.06.2023- இலங்கையில் எயிட்ஸ் நோயாளர்கள் தொகை அதிகரிப்பு. 2022 முதல் காலாண்டில் 4.404 பேரும் 2023 முதல் காலாண்டில் 5.011 பேரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.
25.06.2023- மது, புகை பாவனைகளால் நாட்டில் தினமும் 100 பேர்வரை இறப்பு.
27.06.203- இந்த ஆண்டு முதல் 6 மாதங்களில் டெங்கு நோயால் 200பேர் பலி.
28.06.2023- நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு 2 லட்சம்பேர் விசர்நாய்க் கடிக்கு உள்ளாகிறார்கள் என சுகாதாரப் பகுதியினர் அறிவிப்பு.
30.06.2023- இலங்கையில் வறுமையில் வாழ்வோர் எண்ணிக்கை அதிகரிப்பு 2019ல் (14வீதம்) 3மில்லின்பேர், 2023ம் ஆண்டில் (31 வீதம்) 7 மில்லியன் பேராக உயர்ந்துள்ளதாக அரச புள்ளிவிபரம் தெரிவித்தது.

## உலகச் செய்திகள் சில...

10.05.2023- பிரித்தானியா உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தொழிற்கட்சி அதிக ஆசனங்களை வென்றுள்ளது. தற்போதய அரச கட்சியான கன்சர்வேட்டிக் கட்சி தோல்வியடைந்தது.
11.05.2023- கடந்த 12 வருடங்களாகத் தொடரும் சிரியா உள்நாட்டுப் போரால் அரை (!/2) மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். சுமார் 10 மில்லியன் மக்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அகதிகள்.
12.05.2023- அரபு லீக் நாடுகளில் கூட்டமைப்பில் 10 வருடங்களின்பின் சிரியா நாடு இணைக்கப்பட்டுள்ளது.
13.05.2023- ஹெய்டி நாட்டில கடந்தமாதம் இடம்பெற்ற வன்முறைகளில் 600 பேர் பலி.
14.05.2023- கடந்த ஏப்ரல் மாதம் ஈரானில் 42 பேருக்கு தூக்குத்தண்டனை இந்த ஆண்டில் 194பேர், சென்ற ஆண்டில் 333 பேர் தூக்குத்தண்டனை.
15.05.2023- பாக்கிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் அதிரடியாகக் கைதுசெய்யப்பட்டு சில நாட்களின்பின் பிணையில் விடுதலை.
16.05.2023- 2020ம் ஆண்டில் உலகில் 1.34கோடி குழந்தைகள் குறைப் பிரவசத்தில் பிறந்ததாக ஐ.நா. சுகாதார நிறுவனம் தெரிவித்தது.
17.05.2023- பெண் பத்திரிகையாளர் ஒருவருக்குப் பாலியல் தொல்லை கொடுத்த குற்றச்சாட்டில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ற்றம் 150 கோடி இழப்பீடு வழங்க நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

18.05.2023- சோமாலியாவில் கடும் மழை வெள்ளம் 100 பேர்வரை பலி.4 லட்சம் மக்கள் பாதிப்பு.
19.05.2023- ஜி-7 நாடுகள் உச்ச தலைவர்களின் மகாநாடு 19.05.23 - 21.05.23வரை யப்பானில் நடைபெற்றது.
25.05.2023- உக்ரையினுக்கு மேலும் 375 மில் டொலர் இராணுவ உதவிகளைச் செய்ய அமெரிக்கா முடிவு செய்துள்ளது.
28.05.2023- உலகின் காலநிலை மாற்றத்தால் கடந்த 50 வருடங்களில் 2 மில்லியன் பேர் பலி. 1970 - 2022வரை இயற்கை அனர்த்தத்தால் 11.778பேர் இறந்திருப்பதாக ஐ.நா.சபையின் சுற்றாடல் சூழல் அமைப்பு தெரித்தது.
02.06.2023- இந்தியா ஒடிசா மாநிலத்தில் ஏற்பட்ட ரெயில் விபத்தில் 300 பேர்வரை பலி. 1000 பேர்வரை காயம்.
03.06.2023- அமெரிக்காவில் வாழ்வோரில் மூன்றில் ஒரு பங்கினர் மூக்குக்கண்ணாடி அணியும் நிலைக்கு ஆளாகியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.
04.06.2023- பிறேசிலின் முன்னாள் அதிபருக்கு ஊழல்குற்றச்சாட்டு சம்பந்தமாக 9 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
05.06.2023- ரஷ்ஷியாவின் தாக்குதலில் உக்ரைனின் மிகப்பெரிய அணை ஒன்று குண்டுவைத்துத் தகர்ப்பு வெள்ளப்பெருக்கால் 29 கிராம மக்கள் 42.000 பேர் இடம்பெயர்வு.
06.06.2023- உலகத்தமிழாராய்சி மகாநாடு எதிர்வரும் யூலை மாதம் 7 - 9ம் திகதிவரை தமிழ்நாட்டில் நடைபெறவுள்ளது.
08.06.2023- ஹெய்டி நாட்டில் நிலச்சரிவு 50 பேர்வரை பலி. நூற்றுக்கணக்கானோர் காணாமல் போயுள்ளனர்.
13.06.2023- நைஜீரியாவில் படகுவிபத்து 100 பேர்வரை பலியாகியுள்ளனர்.
15.06.2023- கிறீஸ்லாந்து கடற்பரப்பில் அகதிகள் கப்பல் மூழ்கி 178பேர் பலி.
16.06.2023- 31.05.23 ஐ.நா.சபை அகதிகள் பிரிவின் அறிக்கையின்படி உலகம் முழுவதும் 110 மில்லியனபேர் அகதிகளாக இடம்பெயர்ந்து வாழ்கிறார்கள்.
18.06.2023- உகண்டா நாட்டின் பாடசாலை ஒன்றில் தீவிரவாதிகள் வெறியாட்டம் 38 மாணவர்கள் உட்பட 42 பேர் சுட்டுப்படுகொலை.
19.06.2023- இந்தியாவின் பீகார் மாநிலத்தில் 100 பேரும் உத்தரபிரதேசத்தில் 100பேரும் கடும் வெப்பம் நிலவியதால் உயிரிழந்துள்ளனர்.
20.06.2023- வடகொரியாவில் கடும் பசி பட்டினி அதிகரிப்பால் தற்கொலைசெய்வோர் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.
22.06.2023- சூடானின் கலவரங்களால் 5 லட்சம் பேர் நாட்டைவிட்டு வெளியேற்றம். 20 லட்சம் பேர் அகதிகளாக இடம்பெயர்வு.
24.06.2023- மத்திய அமெரிக்க நாடான ஹேண்டுரஸ் நாட்டிலுள்ள பெண்கள் சிறையில் ஏற்பட்ட கலவரங்களில் 42 பேர் பலியாகியுள்ளனர்.
28.06.2023- இந்தியாவிலுள்ள 144 கோடி சனத்தொகையில் 10 கோடிபேர் நீரழிவு நோயாளிகளாகக் காணப்படுவதாக அந்தநாட்டின் சுகாதார அறிக்கை தெரிவித்தது
30.06.2023- ஒவ்வொரு ஆண்டும் 8 - 10 மில்லியன் தொன் பிளாஸ்ரிக் கழிவுகள் கடலில் கொட்டப்படுவதால் கடல்வாழ் உயிரினங்களுக்குப் பேரழிவு ஏற்படுவதுடன் உலகச் சுற்றாடல் மாசுபட்டு வருவதாக உலக சுற்றுச்சூழல் அமைப்பு தெரிவித்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்...



1 - 2026 உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் 48 நாடுகள்..
2026ம் ஆண்டு அமெரிக்கா, கனடா, மெக்ஸிக்கோ ஆகிய 3 நாடுகளில் உலககிண்ண உதைபந்தாட்டப் போட்டிகள் நடைபெறவுள்ளன. 4 ஆண்டுகளுக்கு ஒரு தடவை இடம்பெறும் 22வது உலககிண்ணப் போட்டியானது சென்ற வருடம் மத்தியகிழக்கு நாடான கட்டாரில் நடைபெற்றது.
வழமையாக உலகிலிருந்து 8 குழுக்கள் X 4 நாடுகள் என 32 நாடுகள் பங்குபற்றி வந்தன. ஆனால் 2026 போட்டியில் 12 குழுக்கள் X 4 நாடுகள் என மொத்தம் 48 நாடுகள் பங்கு பற்றும் என உலக உதைபந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது. மொத்தம் 104 போட்டிகள் இடம்பெறும்.

2 - உலகில் இதுவரை 31.03.2023வரை அதிக கோல்களை அடித்தவர்கள்..
தமது நாட்டு தேசிய அணிக்காக விளையாடி இது வரை அதிக கோல்களை அடித்தவர்கள் விபரம்..

| | | | |
|---|---|---|---|
| 1வது | - றொனால்டோ | - 122 கோல்கள் | - போத்துக்கல் |
| 2வது | - அலிதாஜி | - 109 ” | - ஈரான் |
| 3வது | - மெஸ்ஸி | - 102 ” | - ஆஜர்ன்தீனா |

3 - மெஸ்ஸிக்குச் சிலை...
உலகின் உதைபந்தாட்ட ஜாம்பவான்கள் என்று போற்றப்படும் வீரர்களுக்கு மிகப்பெரும் பாராட்டு கிடைப்பது வழக்கமாகும். உயிருடன் இருக்கும் போதே சிலை வைத்து இந்த வீரர்களுக்கு மரியாதை செலுத்தப்பட்டுள்ளது. தென்னமெரிக்க உதைபந்தாட்ட சம்மேளனத்தின் தலைமை அலுவலகத்தில் மூன்றாவது ஆளாக மெஸ்ஸியின் சிலையும் இடம்பிடித்துள்ளது.
பிறேசில் வீரர் பிலே மற்றும் ஆர்ஜன்தீனா வீரர் மரடோனா சிலைகள் ஏற்கனவே வைக்கப்பட்டிருந்தது. தற்போது தென்னமெரிக்கா கிண்ணம் , உலககிண்ணம் வெற்றிகளைப் பெற ஆர்ஜன்தீனா அணிக்குத் தலைமை தாங்கி விளையாடிய மெஸ்ஸி க்கும் இவர்களுக்கு அருகே சிலை வைக்கப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளது.

4 - உலக சாதனை படைத்தார் நோவக் டிகோவிச்
உலக ரெனிஸ் வரலாற்றில் கிராண்ட் ஸலம் (Grand slam) போட்டிதான் மிகவும் பிரபலமானதும் மிகக்கூடுதலான பணப்பரிசும் மிக அதிகமான புள்ளிகளும் வழங்கப்படுவதாகும். சுமார் 135 ஆண்டுகளுக்கு மேல் வரலாறுகொண்ட இப்போட்டியில் கிராம்ஸ்லம் கிண்ணங்கள் 23 ஐப்பெற்று உலகில் அதிகூடிய கிராண்ட் ஸலம் கிண்ணத்தைப் பெற்ற வீரர் என்ற பட்டத்தையும் வென்றுள்ளார். இவர் தற்போது உலக தரவரிசையில் முதலாவது இடத்திற்கு வந்து சாதனை படைத்திருப்பது பாராட்டுக்குரிய விடையமாகும்.

49152647992…



ஸ்ரீ அகிலாண்டேஸ்வரி அருளகம்

SRI AGILANDESHWARY ARULAHAM

அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் திருக்கோவில்

ARULMIHU AGILANDESHWARY SAMETHA AGILANDESUVARAR THIRUKOVIL

Reg No. NEP/PCC/CH/125
Kovilkulam,
Vavuniya, Sri Lanka
T.P : 0094 24 - 2221685
077 2382051

"May we protect tender hearted children with compassion"

Bank Details: Bank of Ceylon - Vavuniya. A/C No. 0002364895
Secretary T.P : 0776567827

Patrons
Mr.K.A.Thiyagarasa, President,
(Hereditary Trustee),
(Nainai Nagapooshani Amman Kovil)

Hony.President
Kailai.Mr.K.A. Umathevan
(Hereditary Trustee)

Hony.Vice President
Mr.S. Sriparbinathan

Hony.Secretary
Mr.K.A.Navaratnarajah
(Hereditary Trustee)

Hony. Asst.Secretary
Mr. S. Sureshkumar
(Hereditary Trustee)

Hony. Treasurer
Mr.S.Anandagan

Commitee Members
Mr.P.Murugaraj
Mrs.T.Ramanathan
Mr.A.Sooriyakumar
Mr.N.Sureshkathiran
Mr.T.Achchuthan
Mr.S.Srirangnathan
Mr.S.Kajenthiran
Mr. P. Sivalingatharan
Mr. V. Aadhavan

Administrator
Mr.R.Loganathan

May 12,2023

Mr.V.சிவராஜா அவர்கட்கு,

மண் சஞ்சிகை,

ஜேர்மனி.

அன்பான வணக்கம்,

**அபிராமியின் பராமரிப்பு உதவி**

மேற்படி இல்லத்திலுள்ள செல்வி அபிராமியின் பராமரிப்பிற்கு தங்கள் சஞ்சிகையின் வாசகர் தொடர்ந்து அன்பளிப்பு செய்துவருவதை மனதாரப்போற்றுகின்றோம். அபிராமி க.பொ.த.உயர்தரப்பரீட்சை எடுத்துவிட்டு பெறுபேறுக்காக காத்திருக்கின்றார். தற்சமயம் கணனி (IT) வகுப்புக்கு சென்றுவருகிறார்.

தங்களின் உதவி அபிராமிக்கு பல்கலைக்கழக மேற்படிப்பிற்கு தேவையாகவுள்ளது. ஆகவே இவர் மேற்படிப்பிற்கு படிக்கசெல்லும்போது அடுத்த ஆண்டு தங்கள் உதவியை எதிர்பார்க்கின்றோம்.


தங்களின் தொடர் உதவிக்கு எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு, தாங்களும், அபிராமியின் பராமரிப்பு இதுவரை காலமும் உதவிய அன்பு வாசகர் குடும்பத்தவர் நலமாகவாழ அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரப்பெருமான் அருள்புரியவேண்டி நிற்கின்றோம்.

நன்றி

இங்ஙனம்

(ஆ.நவரெத்தினராசா)

www.akilaandeswaram.com    arulaham@gmail.com    Sivankovilkovilkulam



**அன்பளிப்பு ( 1.27.073-10 ) - 400-00 யூரோ**

**ஒரு லட்சத்து இருபத்தேழாயிரத்து எழுபத்தி மூன்றுரூபா சதம் பத்து**

**தாயார் அமரர் திருமதி புனிதமலர் இராஜேஸ்வரன் அவர்களின் 31ம் நாள் நினைவு அன்பளிப்பு...**

யேர்மனியில் 1990 - 1994 வரை வெளிவந்த "சிறுவர் அமுதம்" சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தவர்தான் அமரர் இராஜேஸ்வரன் அவர்கள். அவரின் இறப்புக்குப் பின்பு 1999ம் ஆண்டுவரை அதன் ஆசிரியராகக் கடமையாற்றி 31.05.2023 திகதியில் காலமானவர் அமரர் புனிதமலர் இராஜேஸ்வரன் அவர்களாவர். (அவர் பற்றிய தகவல்களை இச் சஞ்சிகையின் 64,65ம் பக்கங்களில் காணலாம்)

இவரின் இறந்த 31ம் நாள் நினைவாக தாயகத்திலுள்ள முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய்-மல்லாவியிலுள்ள "ஒளிரும் வாழ்வகம்" இல்லத்தினரால் பராமரிக்கப்படும் முதியோர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கும் வவனியா மாவட்டம் "அட்சயம்" நிறுவனத்தினருக்கும் (200 + 200) 400-00 யூரோ ஒரு லட்சத்து இருபத்தேழாயிரத்து எழுபத்தி மூன்று ரூபா பத்து சதம் (1.27.073-10) அனுப்பி வைக்கப்பட்டது.

இந்த நிதி உதவியை வழங்கிய அன்னாரின் மகளான யேர்மனியில் வசிக்கும் திருமதி பிங்கலை செந்திலன் அவர்களாவர். இவரின் மனிதநேயப் பணிக்கு நன்றிகளையும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். இவர் போன்ற முன்மாதிரியான செயற்பாடுகளை நீங்களும் செய்யலாம். எம்மோடு தொர்பு கொண்டு நற்காரியங்களைச் செய்ய முன்வாருங்கள் வாசகர்களே.

திருமதி புனிதமலர் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறையருளை வேண்டி, திருமதி பிங்கலை குடும்பமும் ஆறுதலடைய வேண்டும் என இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்..... - ஆசிரியர் -

# மனிதநேயப்பணியில் இணைந்துகொண்டவர்கள்!..

தாயகத்தில் ஆதரவற்ற சிறார்களின் வாழ்நாள் மற்றும்கல்விச்செலவுகளைப்பொறுப் பேற்றுஉதவும் அன்பு உள்ளங்களை நேசத்துடன் வாழ்த்துகின்றோம்.எனவே நீங்களும் இந்தப்பணியுடன் இணைந்து உதவலாம். இதுவரை இத்திட்டத்தில் இணைந்து உதவிவரும் நல்லுள்ளங்களின் விபரம்....

1- திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen - 600-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - தியாகராசா டிலானி (பி.தி 10.04.2014)
குருபவராசா ரேணுஸ்றியா (பி.தி 23.08.2012)
றொனி டிலக்சனா (பி.தி 03.08.2014)

.......................................................................................................................................

2- திருமதி சிவதர்சினி பிராங்ளின் - Viersen - 480-00 யூரோ
ஒளிரும் வாழ்வகம் - துணுக்காய் - முல்லைத்தீவு
உதவி பெறுவோர்.. - றமணன் பிலோமினா (பி.தி 08.04.2012)
- ஜெகஸ்ரீன் மதுசாளினி (பி.தி 02.04.2013)

.......................................................................................................................................

3- திருமதி சாந்தினி துரையரங்கன் - Essen - 480-00 யூரோ
சிறீ சண்முகா பெண்கள் இல்லம் - திருகோணமலை
உதவி பெறுவோர்.. - திலக்சிகா கோடீஸ்வரன் (பி.தி 12.05.2008)
மதுஸா சுந்தரலிங்கம் (பி.தி 01.01.2008)

.......................................................................................................................................

4- திருமதி அஜந்தி பத்மநாதன் - London - 480-00 யூரோ
செபமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார்- மன்னார்
உதவி பெறுவோர்.. - கதிர்விழி சகாயநாதன் (பி.தி 09.05.2008)

.......................................................................................................................................

5- திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Bonn - 480-00 யூரோ
சிறீ அகிலாண்டேஸ்வரி "அருளகம்" - வவுனியா
உதவி பெறுவோர்.. - இ. அபிராமி (பி.தி 14.11.2002)

.......................................................................................................................................

6- திருமதி அனிதா றஞ்சன் - Duisburg - - 480-00 யூரோ
திருஞானசம்பந்தர் குருகுலம் - களுவாஞ்சிக்குடி - மட்டக்களப்பு
உதவி பெறுவோர்.. சாய்ரிதன் சத்தியசீலன் (பி.தி 07.06.2010)

7- திருமதி ஸ்ரெவ்வானி இம்மானுவல் - Essen - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. அஸ்வினி சுனில்சாந்த் ( பி.தி 09.06.2012)

8- திரு Johannas Grüendler - Köln - 480-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. தட்சாயினி கபிசா ( பி.தி 01.09.2012)


9- செல்வன் பிரணவன் யோகராசா - Düsseldorf - 240-00 யூரோ
இந்து "அன்பகம்" சிறுவர் அபிவிருத்தி நிலையம் - வவுனியா
உதவி பெறுவோர்.. சிவராசா பவிதா ( பி.தி 05.09.2011 )

---

- பொறுப்பெடுத்தவர்கள் 9 பேர்.. (ஜேர்மனி, லண்டன்)

- உதவி பெறுவோர் 13 பிள்ளைகள் (தாயகம் - சிறீலங்கா)

---


திருஞானசம்பந்தர் குருகுலம் - களுதாவளை
(சிறுவர் பராமரிப்பு இல்லம் - ம.தெ.எ. பற்று)
களுதாவளை,
மட்டக்களப்பு.
Regd No.
பற்றுச்சீட்டு 7171 15/05/2023
வசிக்கும்
திரு./திருமதி/செல்வி : வைரமுத்து - சிவராசா.
அவர்களிடமிருந்து பின்வரும் விபரப்படி பொருளாக / பணமாக /
ரூபா மட்டும் நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.

| விபரம் | ரூபா. |
|---|---|
| 01. நன்கொடை | 152367-83 |
| 02. சந்தா | |
| 03. | |
| 04. | |
| மொத்தம் | 152367-83 |

ரூபா : 152367/83
பெறுநர் ஒப்பம்:
மாருதி அச்சகம், களுதாவளை. 0778842223.

# ஆதரவற்றோர் நிதி உதவிக் கணக்கு..

ஆரம்ப இருப்பு 01-05-2023 + 198-86

அன்பளிப்புகள்:-

01. திருமதி. சிவதர்சினி பிராங்ளின் - Viersen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
02. செல்வி. அனித்தா றஞ்சன் - Duisburg + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
03. திருமதி.ஸ்ரெவ்வானி.இம்மானுவல் - Essen + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
04.திருமதி அஜந்தி பத்மநாதன் - London + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்தஅன்பளிப்பு)
05. திருமதி பிரிந்தாவனி ஏகானந்தராசா - Weeze + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
06. திரு. Johannas Gruendler - Köln + 80-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)
07. திருமதி பிங்கலை செந்திலன் - Kitzingen + 100-00
(ஆதரவற்றசிறார் ஒருவரைப் பொறுப்பேற்ற மாதாந்த அன்பளிப்பு)

+ 580-00
......................
+ 778-86

அன்பளிப்புகள்...
08- திரு பரமசாமி பாஸ்கரன் - London + 50-00
09- திரு சத்தியகுமார் - Krefeld + 200-00
09- திருமதி மேரி விஜயகுமார் - Bietingheim + 100-00
07. திருமதி பிங்கலை செந்திலன்- Kitzingen
(தாயாரின் 31வது நாள் நினைவு அன்பளிப்பு) + 400-00
...............
750-00 + 750-00
........................
+ 1528-86

| | |
|---|---|
| முற்பக்கப்படி | + 1.528-86 |

அனுப்பியது...

(1) "ஒளிரும் வாழ்வகம்" - துணுக்காய் 200-00
19.06.2023 ( ரூபா 63.536 சதம் 55 )

(2) "அட்சயா" கல்வி,சமூக அமைப்பு - வவுனியா 200-00
19.06.2023 ( ரூபா 63.536 சதம் 55 )

(3) "தமிழ் பண்பாட்டு மையம்" கல்வி, சமூக
கல்வி, சமூக அமைப்பு - இரத்தினபுரி 200-00
19.06.2023 ( ரூபா 63.536 சதம் 55 )

(4) "நல்லாயன்" சிறுவர் இல்லம் - மாங்குளம் 100-00
27.06.2023 ( ( ரூபா 30.803 சதம் 41 )

(5)
செமாலை இரக்கத்தின் இல்லம்- தலைமன்னார் 480-00
27.06.2023 ( ரூபா 1.57.347 சதம் 13 )

--------------
1.180-00

மண் சஞ்சிகை வக்கிக்கணக்கு வங்கிவரி
01.05.2023 - 31.05.2023 - 18-69
01.06.2023 - 30.06.2023 - 18-49
...........
37-18 37-18
..................
- 1.217-18 - 1.217-18
--------------------

| | |
|---|---|
| மீதி கையிருப்பு 23.06.2023 | + 311-68 |

--------------------

ஒளிரும்வாழ்வு அமைப்பு - துணுக்காய்
ඔලිරුම්වාල්වු සංවිධානය - තුණුක්කායි
Olirumvaalvu Organization - Thunukkai
Re.No:- MU/DS/TNK/RVSS/22/2015 T.P:- 0212060620 Fax:-0212060620 FarmNo:-0213204790 Viber:-0774868085 Mobile:-0774868085

திகதி 13/05/2023

திரு. வை சிவராஜா,

பிரதம ஆசிரியர்,

மண்சுமை இலக்கிய சமூக சஞ்சிகை,

ஜேர்மனி.

### நன்றி நவில்கிறோம்

எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு மாற்றுத்திறனாளிகள், பெற்றோரை இழந்த பிள்ளைகள், ஆதரவற்ற முதியோர், பெண்தலைமைத்துவ குடும்பங்கள், நலிவுற்ற குடும்பங்கள் ஆகிய இலக்கு குழுவினர் மத்தியில் பணியாற்றி வருகிறது. அந்த வகையில் அமரர் வ.பார்வதி அவர்களின் நினைவாக மண்சுமை இலக்கிய சமூக சஞ்சிகை ஊடாக ஏற்பாடு செய்து வழங்கிய அன்பளிப்பு நிதி 32270.48 ரூபா ஐ பயன்படுத்தி எமது மகிழ்வு இல்லம் பிள்ளைகள் மற்றும் முதியோர்களிற்கு மதிய உணவு வழங்கியதுடன் முதியோர்களிற்கு உலர் உணவு பொதி வழங்கினோம் என்பதை நன்றியுணர்வுடன் தெரிவித்துக்கொள்வதுடன் இச் செயற்திட்டத்தை செயற்படுத்த சமூக நலன்நோக்கிய நற்சிந்தனையோடு நிதி அனுசரணையினை ஏற்பாடு செய்து வழங்கியமைக்கு எமது ஒளிரும்வாழ்வு அமைப்பு சார்பாக இதயபூர்வமான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம். அமரர் வ.பார்வதி அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கிறோம்.

நன்றி

செயலாளர்
ஒளிரும் வாழ்வு அமைப்பு
துணுக்காய்

www.olirumvaalvu.com Molirumvaalvuthunukkai2013@gmail.com olirumvaalvu thunukka

**திருஞானசம்பந்தர் குருகுலம் - களுதாவளை**

(சிறுவர் பராமரிப்பு இல்லம் - ம.தெ.எ. பற்று)

**තිරුඥානසම්බන්දර් කුරුකුලම - කළුදාවලයි**

(ළමා නිවාසය - ම. ද. එ.පත්තු)

**THIRUGNANASAMPANTHAR KURUKULAM - KALUTHAVALAI**

(CHILDREN'S HOME - M.S.& E PATTU)

President :......ட.திரைநேசன்..........
Secretary :....அ.ரஜீகவதன்........
Treasurer :....தி......சிரஜின்..................

Regd No.: NEP/SS/09

AC. No.: 6835914
BOC, Kaluwanchikudy

Kaluthavalai (EP),
Sri Lanka.
T.P: 065 2250277

It is an Approved Charity

........................20.....

உயர்திரு V. சிவராஜா அவர்கட்கு
பிரதம ஆசிரியர்
மண் கலை இலக்கிய சமூக சஞ்சிகை
ஜேர்மனி

09.06.2023

ஐயா,

<u>நிதி கிடைக்கப்பெற்றமை.</u>

தங்களது 2023/05/15ம் திகதியிடப்பட்ட கடிதமும் அன்றைய தினம் எமது வங்கிக் கணக்கில் இடப்பட்ட 158367.83 பணமும் கிடைக்கப்பெற்றுள்ளோம்.

எமது மாணவன் சத்தியசீலன் சாய்நிதன் என்பவரும் தரம் 08 இல் சிறப்பாக கல்வி பயில்கின்றார் இவரின் கல்வி மேம்பாட்டிற்காக தொடர்ந்து உதவி புரிந்து வரும் திருமதி அனிதா ரஞ்சன் அம்மணி அவர்களுக்கும், தங்களுக்கும், தங்களோடிணைந்து பணியாற்றும் " மண் " கலை இலக்கிய சமூக சஞ்சிகையின் நிருவாகிகள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

தங்களுக்கும், குடும்பத்தினருக்கும் , சகல வளங்களும் செல்வங்களும் பெற்று நலமுடன் நீடு வாழ வாழ்த்துவதுடன் அதற்காக எல்லாம் வல்ல இறைவனையும் பிரார்த்திக்கின்றோம்

நன்றி

தலைவர்

செயலாளர்

தலைவர்
திருஞான சம்பந்தர் குருகுலம்
களுதாவளை.

செயலாளர்
திருஞான சம்பந்தர் குருகுலம்


European medicines helf center
Europäische medizinische Hilfs organisation
ஐரோப்பிய மருத்துவ உதவி நிலையம்
தாயகத்தில் வசிக்கும் எம் உறவுகளுக்கு புலம்பெயர்தேசத்தில் வசிக்கும் உறவுகள் பல மருத்துவ உதவிகளைச் செய்து வருகின்றார்கள் அந்த வகையில் தாயகத்தில் வசிக்கும் எம் உறவுகளுக்கு மருத்துவ உதவிகள் தேவைப்படின் எங்களை நாடினால் அவர்களுக்கு எங்களால் முடிந்த உதவிகளை நாம் செய்யத் தயாராக இருக்கின்றோம். மேலதிக விபரங்களை அறிய
Tel 017628775397 WhatsApp 017628775397
அன்பான உறவுகளே! நீங்கள் பாவனை செய்த மருந்துகள் திகதி முடியாத நிலையில் இருந்தால் அவை தாயக உறவுகளுக்குப் பயன்படலாம்.
எனவே அவற்றைப் பாதுகாப்பாக எடுத்து வைத்திருங்கள். மேலதிக விபரங்களை அறிய மின்னஞ்சல்
Email alxlambrtt@aol.com
Health
Stuff


லண்டன் 'விம்பம்' நடாத்தும்
'மலையகம் 200'
சிறுகதை, ஓவியப் போட்டிகள்
VIMBAM
Estd 2004
சிறுகதை, ஓவியம் முதலான கலை ஆக்கங்களில் ஆர்வமுள்ள, இளம் தலைமுறையினரின் ஆக்கத் திறனையும், கலை ஆற்றலையும் ஊக்குவிப்பதற்கான போட்டி.
சிறுகதைகளும் ஓவியங்களும் மலையகம் 200
கடந்து வந்த காலமும், காலூன்றி நிற்கும் நிலமும், நிலத்தில்
'வலியும் வாழ்வும்'
என்னும் கருப்பொருளை அனுசரித்ததாக அமைதல் வேண்டும்.
கவனத்திற்கு:
● இலங்கைத் தீவின் எந்தவொரு பிரதேசத்திலும் வசிக்கும் 45 வயதிற்கு உட்பட்டோர் மட்டும் போட்டிகளில் கலந்துகொள்ளலாம்.
● தாளில் வரையப்பட்ட ஓவியங்களின் ஒளிப்பட நகல்கள் (Photo) அல்லது ஒளிவருடி நகல்கள் (Scanned copy) அனுப்பப்பட வேண்டும். எண்ணிம (digital) ஓவியங்கள் பங்கேற்க முடியாது.
● சிறுகதைகள், யூனிகோட் அல்லது பாமினி எழுத்துருக்களில் தட்டச்சுச் செய்யப்பட்டு, முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கங்கள் தனியாக இணைக்கப்பட்டு அனுப்பப்பட வேண்டும்.
● ஆக்கங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி 31.08.2023
● தேர்வாகும் சிறுகதைகள் நூலாக வெளியாகும்.
பரிசுகள்
★ முதற்பரிசு 50,000 ரூபாய் ★ இரண்டாம் பரிசு 30,000 ரூபாய்
★ மூன்றாம் பரிசு 20,000 ரூபாய்
10 போட்டியாளர்களுக்குத் தலா 10,000 ரூபாய் தெரிவுப் பரிசு
(சிறுகதை - ஓவியம் பிரிவுகளுக்கான தனித் தனியான பரிசுகள் வழங்கப்படும்)
ஆக்கங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
மின்னஞ்சல்: malaiyagam200vimbam@gmail.com
தபால் முகவரி: S. Karunakaran, 754 Kanagarasa Lane, Thirunagar North, Kilinochchi, Sri Lanka.
Dr. R. Ramesh, Senior Lecturer, Department of Political Science, University of Peradeniya, Peradeniya, Sri Lanka.
ஆதிரை வெளியீடு
தொடர்புகளுக்கு: 'விம்பம்' லண்டன்: கே. கே. ராஜா - (+44) 7736 908 421
(+44) 7883 573 337
(+44) 7305 844 169
இலங்கை: (+94) 77 087 1681
VIMBAM: An organization for the promotion of art, literature, film and culture




## அமரர் செம்பியன் செல்வன் (ஆ. இராஜகோபால்) ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி - 2023

(அனுசரணை : செம்பியன் செல்வன் குடும்பத்தினர்)

முதற் பரிசு : ரூபா 10,000/= இரண்டாம் பரிசு: ரூபா 5,000/= மூன்றாம் பரிசு: ரூபா 3,000/=
ஏனைய ஏழு சிறுகதைகளுக்கு பரிசுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
போட்டிக்கான விதிகள்: சிறுகதைகள் முன்னர் எங்கும் பிரசுரிக்கப்படாததாக இருத்தல்வேண்டும்.
போட்டியில் பங்குபற்றுபவர்கள் தமது பெயர், முகவரி போன்ற விடயங்களை வேறாக இணைத்தல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மூலையில் ”அமரர் செம்பியன் செல்வன்” ஞாபகார்த்தச் சிறுகதைப் போட்டி எனக் குறிப்பிடப்படல்வேண்டும்.
அனுப்ப வேண்டிய முகவரி:
ஞானம் அலுவலகம் - 3B, 46ஆவது ஒழுங்கை, கொழும்பு - 6
போட்டி முடிவுத் திகதி: 30.07.2023
முடிவு திகதிக்குப் பின்னர் கிடைக்கும் கதைகள் போட்டியில் சேர்க்கப்படமாட்டாது.

**- ஆசிரியர் - "ஞானம்" சஞ்சிகை -**













ஜேர்மனி-டியூஸ்பேர்க்கில் வசிக்கும் திருமதி இராஜேஸ்வரி சிவராசா அவர்களின் தாயாரின் 21வது ஆண்டு நினைவையொட்டி அவரின் நிதிப்பங்களிப்பில் துணுக்காயிலுள்ள ''ஒளிரும் வாழ்வு இல்ல'' முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கு 10.05.2023 அன்று உணவு, சிற்றுண்டி, உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. அனுசரணை மண் சஞ்சிகை யேர்மனி.

Wissen, Kultur & Literatur • கல்வி, கலை, இலக்கிய சமூக இருமாத இதழ்

# ERDE

MANN
Germany / Ausgabe 220



## அகிலம் போற்றும் அன்னை திரேசா

26.08.1910 - 05.09.1997


| | | |
|---|---|---|
| வருட சந்தா | ஜேர்மனி | 20€ |
| | ஏனைய நாடுகள் | 25€ |